www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

පක්කම් 20 பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஆக.09–15,1998

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 269

## குடா நாட்டில் கெரில்லாக்கள்

## இந்த ஆண்டுக்குள் தாண்டலாமா

எக்ஸ்ரே ரிப்போர்ட்





## சதாம் உசேன் கதை

பரபரப்பான ஆரம்பம்



## கோட்டை மோதல்கள்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## போதிப்பதைவிட சாதிக்கலாம்

**அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.**

'சார்க்' மாநாட்டு
கோலாகலம் முடிந்துவிட்டது!

'ஒய்யாரக் கொண்டையாம்
உள்ளே ஈரும் பேனுமாம்'
என்பது போன்றதே
'சார்க்' மாநாட்டு ஆரவாரம்!

தேசிய இனப் பிரச்சனைக்கு
தீர்வு காண முடியாத நாட்டில்
தெற்காசிய பிரச்சனைகளை
ஆராய மாநாடு!

'சார்க்' மாநாட்டின்
புதிய தலைமைப் பொறுப்பும்
இலங்கைக்கு தரப்பட்டுள்ளது!

'கூரை ஏறி
கோழி பிடிக்க முடியாதவன்
வானம் ஏறி
வைகுந்தம் போவேன் என்றானாம்!'

தெற்காசியப் பிரச்சனைகளை
சமாதானமாக தீர்க்கும்
மத்தியஸ்த பொறுப்பு
இலங்கைக்கு வாய்த்திருக்கிறது!

'சார்க்' மாநாட்டு
ஆரம்ப உரையில்
இலங்கை ஜனாதிபதி
அருமையாக பேசியிருக்கிறார்!
எப்போதுமே அவர்
அருமையாகவே பேசுகிறார்!

பொருளாதார ஒத்துழைப்பு,
சமாதானம்,
அணு ஆயுத ஒழிப்பு
என்பவை பற்றியெல்லாம்
ஜனாதிபதி உரையாற்றியுள்ளார்!

ஆனால் இங்கே,
அவரது அரசாங்கம்
வடக்கு-கிழக்கில்
பொருளாதார தடை,
போர் முஸ்தீபுகள்,
ஆட்டிலெறி ஷெல்வீச்சுக்கள்
போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது!

குடியிருப்புக்கள் மீதான
குண்டுவீச்சுக்கள்,
ஷெல்வீச்சுக்கள்
அழிவுகளையே தருகின்றன!

எனவே அணு ஆயுதத்தை
கண்டிக்கும் ஜனாதிபதி அவர்கள்
அனுவாயுதத்தை மட்டுமல்லாமல்
ஆட்டிலெறிகள், விமானக்குண்டுகள்
போன்ற
அழிவாயுதங்களை
குடிமக்கள் மீது பிரயோகிப்பதையும்
தடுக்க நடவடிக்கை
எடுக்க வேண்டியவராகிறார்!

அணு ஆயுத ஒழிப்புக்கான
ஒப்பந்தத்தில் இலங்கை
கைச்சாத்திட்டுள்ளது என்று
ஜனாதிபதி கூறியுள்ளார்!

இது ஒன்றும்
பெருமைக்குரிய விஷயமல்ல!

தன்னால் முடியாததை
'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்'
எனக் கைவிட்ட கதைதான்!

மனித உரிமை பற்றிய
சர்வதேச விதிகளையும்
இலங்கை ஏற்றுக்கொண்டு
கைச்சாத்திட்டுள்ளது!

ஒப்புக்கொண்ட விதிகளை
இலங்கை ஆட்சியாளர்கள்
மீறி வருவதாக
சர்வதேச அமைப்புக்களே
பலமுறை கண்டித்துள்ளன!

எனவே அணு ஆயுதம்
செய்யக் கூடியதாக இருந்தால்
இலங்கை அரசு கூட
அணுத்தடை பிரகடனத்தை
மீறத் தயங்கியிருக்குமா?

தம்மால் மீறக் கூடியதை
மீறுவதற்கு
இலங்கை ஆட்சியாளர்கள்
தயங்கியதில்லை!

ஒப்பந்தங்கள் வாக்குறுதிகள்
மீறப்படுகின்றமை குறித்து
போதிக்கும் தகுதி
நமது நாட்டுக்கு இருக்கிறதா?

பிறருக்கு
போதிக்க முன்னர்
சாதித்துக் காட்ட வேண்டும்!

தெற்காசிய பிராந்தியத்தில்
சமாதானத்தை பற்றிய
நீண்ட உரைகளைவிட
நம்நாட்டு
தேசிய இனப்பிரச்சனைக்கு
அரசியல் தீர்வுகண்டால்
அதுவே பெரும் காரியம்!

ஏனெனில் தெற்காசியாவில்
இன்று மிகப்பாரிய
போர் நடைபெறுவது
இலங்கைத் தீவில்தான்!

இந்தியாவும் பாகிஸ்தானும்
எப்போதாவதுதான்
எல்லையில் மோதுகின்றன!
இங்கே தினமும் அன்றோ
மோதல் நடந்து வருகிறது!

எனவே, 'சார்க்' தலைவியான
ஜனாதிபதி சந்திரிக்கா
முதலில் செய்ய வேண்டியது
தன் நாட்டில்
போரை நிறுத்திக் காட்டுவதே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## இறை நம்பிக்கை

துன்பங்கள் வருவதற்குக் காரணம், இறைவனைக்காண முயலாமல் இருப்பதே. இறைவனிடமிருந்து ஆத்திகனுக்கு இயற்கையாக வரும் தன்மை உயிர்களிடத்து அன்பு காட்டுவது, உதவி செய்வது, பிற உயிர்களை இறைவனாக நினைப்பது- இவையே.

வித்து கையிலே இருந்தால் கையிலே விளைவதில்லை. பூமியில்தான் விளைகிறது. இறைவன் கோயிலில் இருந்து மட்டும் பயனில்லை. எம் உள்ளத்திலும் உறைய வேண்டும். அதற்கு இறை நம்பிக்கை அவசியம். பக்தியுடனும் நம்பிக்கையுடனும் இரு. இறைகடாட்சம் கிட்டும் என மகான்கள் கூறுகிறார்கள்.

இறை கடாட்சம் பெற்று பிறவிப் பெருங்கடலைக் கடக்க இறை நம்பிக்கை அவசியம். எமக்குத்தான் நம்பிக்கை வர மறுக்கிறது. அந்த அவநம்பிக்கையைப் போக்கும் ஒரே மார்க்கம் பக்தி செய்வதே. கண்ணுக்குத் தெரிந்த பொருள் தரும் நம்பிக்கையை விட தெரியாத பொருள் தரும் நம்பிக்கை வலுவானது. ஆதலால் கண்ணுக்குத் தெரியாத இறைவன் மீது நம்பிக்கை வைத்து பக்தி செலுத்தினால் எம் கண்ணால் காணக்கூடிய பாக்கியம் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு: திருமதி சி. பாலாம்பிகை-
சிலாபம்.



## ஆத்மீகப் பக்குவம்

ஒருநாள் சில அறிஞர்கள் அறிவில் சிறந்த அன்னை ராபியத்துல் அதவிய்யாவை சந்தித்து, "அம்மையார் அவர்களே! நல்ல ஞானிகள் நீர் மேல் நடப்பர். ஆகாயத்தில் பறப்பர். இன்னும் பல அற்புதங்கள் புரிகின்றனர். இவர்கள் எல்லோரும் அல்லாஹ்வின் அருளைப் பெற்றவர்கள் என்று சொல்கிறார்களே அது உண்மைதானா?" என வினவினர்.

இதைக் கேட்ட அதவிய்யா சிரித்தவாறே பின்வருமாறு பதிலளித்தார்:

"அல்லாஹ்வின் நல்லடியார்களே! நீங்கள் அவ்வாறு நம்புவது தவறு. சின்னஞ்சிறு மீன்களும் நீரிலே நீந்துகின்றன. மிகச் சிறிய கொசுவும் வானிலே பறக்கின்றது. அவ்வாறானால் இவைகளும் ஞானியாகிவிட்டன என்று கூற முடியுமா? இவையெல்லாம் சாதாரண உலக நடை முறைகள்தான். ஆத்மீக பக்குவத்திற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

வெறும் அற்புதங்கள் மூலம் ஆத்மீக பக்குவத்தை அடைய முடியாது. நல்ல மல்கள் மூலமே அல்லாஹ்வின் ஆத்மீக பக்குவத்தைப் பெற முடியும்!"எனப் பதிலளித்தார் அன்னை ராபியத்துல் அதவிய்யா.

எம்.சி.கலீல்
கல்முனை-05

## கவிதைப் போட்டி இல.266

### பரிசுக்குரிய கவிதை



### செம்ம(ணி)ண்..!

செம்மணி பூமியிலே
செம்மண் குழிகளிலே
செத்துக்கிடக்கும் எம்மவர்க்கு- இந்த
செவ்வந்தியை அர்ப்பணித்திடு!?

டி.ஜோர்ஜ்-லபுகலை.

### சமாதானப் பூ.

காதில் பூச்சுற்றி
கஷ்டமெல்லாம் தருபவரே!
துவக்கில் பூச்சூட்டி
துன்பமதைத் துரத்திடுங்கள்!
எங்கும் அமைதியது- குழந்தை
எம்போல் உலாவிவர
தங்கள் துவக்கெல்லாம்
சாற்றிடுங்கள் சமாதானப்பூ!

தர்ஷிக்கா கனகசிங்கம்-
மட்டக்களப்பு.

### அம்மையே!

துப்பாக்கிகளில்
பூக்களை நாட்டுவதை
விடுத்து,
மனங்களில்
விதையுங்கள்!

சுபா வரன்-
கண்டி.

### எப்போது?

புது உலகில்
புதிய பாதையில்
புத்துணர்வு மலர்
பூப்பதெப்போது?

ஜெவாஹிர் எ.ஃப் ரஹ்மான்-
மடவளை பஸார்.

### காந்தியின் தூது

இது- என்
இறுதி முயற்சி!
காந்தியில்லா தேசத்தில்
சூரிய காந்தியை
தூது விடுகிறேன்;
சாந்தியை வேண்டி.....!

ஏ.சீ.எம்.ஹரீஸ்-
அட்டாளைச்சேனை-02

### துளிராய் ஒரு நம்பிக்கை!

துப்பாக்கியும் பூப்பூக்கும்
தளிர் உன் கை பட்டால்.!

சௌஜன்யா-கிளிநொச்சி.

### போராளி

மாந்தீவு போர்த்தீவாய்..
பூ கூட புல்லட்டுக்களாய்!
மலராள் மட்டும் விதிவிலக்கா?
போராள் ஆகி விட்டாளோ?

ஹைலன்ஸ் மதன்-
நுவரெலியா.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### அன்பு போதும்.

போர் முகத்தில்
அன்பு மலர் பூத்தால்,
மக்கள் முகத்தில்
மகிழ்ச்சிப்பூ பூக்கும்!

ம.திருவரசுராசா-வவுனியா.

### நடக்குமா?

ஊசி முனைக் காதினிலே
ஒட்டகங்கள் சென்றிடலாம்!
நடக்காதய்யா துப்பாக்கியில்
சமாதானப்பூ ...... பூப்பு....

'திக்கவயல்'-மன்னார்.

### சிந்தனைப்பூ

ஆயுதக் கலாசாரம்
அழியும் 'பூ'—
சிறுமி வைத்தாளே
சிந்தனைப் 'பூ'..

சி. தர்மலட்சுமி-யாழ்ப்பாணம்

**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 15.08.1998

**முகவரி:**
கவிதைப் போட்டி
இல.269,
தினமுரசு
வாரமலர், த.பெ.
இல—1772,
கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.269






## பாராளுமன்ற ஏமாற்று

அன்புள்ள முரசுக்கு!

பாராளுமன்றம் சென்று பாராளுமன்றத்தையும் அதன் வெற்றுத்தனத்தையும் அம்பலமாக்குவதே முதலாவது பணியாகும். பாராளுமன்றம் எங்கள் பிரச்சனைக்கு தீர்வைத்தராது பாராளுமன்றத்தை நம்பி, பாராளுமன்ற உறுப்பினர்களை நம்பிப் பயனில்லை. மக்களின் போராட்டமும் ,எழுச்சியுமே உயர்வு தரும். பாராளுமன்ற உரைகளால் பயன் கிடைத்தது போல தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலர் புஸ்வானம் காட்டுவதை வாடிக்கையாக வைத்திருக்கின்றனர்.

திரு சிவசிதம்பரம் அண்மையில் செம்மணி விவகாரத்தில் சிஐடி. விசாரணைக்கு தாமே காரணம் என உரிமை கோரியதும் அவ்வாறே. இவர்கள் தாமும் ஏமாந்து மக்களையும் முட்டாள்களாக்கிய வரலாறு கொண்டவர்கள். இன்னமும் திருந்தவில்லை. திருந்த வாய்ப்பும் இல்லை. ஏதோ புலிகளுக்குப் பயந்துதான் கொஞ்சம் அடக்கியாவது வாசிக்கிறார்கள்.

எஸ்.ஞானேந்திரன்-
சங்கானை- யாழ்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## எப்படி வருந்துவது?

வன்னியில் சண்முகநாதன் எம.பி. கொலை தொடர்பாக நாரதர் உண்மையை உரைத்திருந்தார். ஆனால் புளொட் இயக்கத்தினர் வவுனியாவில் நடந்துகொள்ளும் முறை அவர்கள் மீதான அனுதாபத்தை ஏற்படுத்தவில்லை. அக்கொலைச் சம்பவத்தின் பின்னர் அவர்கள் நடந்துகொண்ட முறைக்கு மக்கள் எப்படி பதில் கொடுக்க முடியும்? அநியாயமாக பாதிக்கப்படும் அப்பாவிகள் இவர்கள் மீதான தாக்குதல்களை எண்ணி வருந்துவார்களோ? இவற்றையும் நாரதர் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்!

செ.ராஜகுகநாதன்- வவுனியா.



முரசுக்கு!

'அன்னபூரணியை' ராஜகோபால் அவர்கள் வாராவாரம் சுவை குன்றாமல் தந்தார். கப்பலோட்டிய தமிழர் என்றதும் வ.உ. சிதம்பரம்பிள்ளையின் பெயர்தான் முன்னர் ஞாபகம் வந்தது. இப்போது 'அன்னபூரணி'யும் நினைவுக்கு வருகிறது. வல்வெட்டித்துறை முதல் அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள் கதையை நம் கண்முன்பாக உலாவவிட்ட ராஜகோபாலுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

கி.ராஜ்குமார்-
சுவிற்ஸர்லாந்து.

முரசே!

டயானாவின் கதை முரசுக்கு மகுடமாகிவிட்டது. எங்கள் இதயம் கவர்ந்த இளவரசியின் சோகத்தையும் அரண்மனைத்திமிரையும் நன்கு வெளிச்சமாக்குகிறார் புவனா. ஒரே ஒரு முரசை தொடரில் தவறவிட்டுவிட்டேன். உங்களால் அனுப்ப முடியுமானால் தொடர்பு கொள்கிறேன்.

ஆர்.ரகுராம்-
யாழ்ப்பாணம்.

## குடும்பத்தில் ஓர் இடம்

'முள் நிலவு' உண்மையிலேயே ராஜேஸ்குமாரின் வித்தியாசமான தொடர்தான். முரசு கூறியது போல, நிலாவுக்கு என் குடும்பத்தினர் அனைவருமே தம் இதயத்தில் இடம் ஒதுக்கியுள்ளனர். அபாரமாகப் போகிறது கதை

சி.ராஜேஸ்வரி-
மட்டக்களப்பு.

'இடிஅமீன்' அசத்தல். மாமிச மலை என்பதற்குப் பொருத்தமான மனிதர் இடிஅமீன்தான். சர்வாதிகாரம் எப்படியிருக்கும் என்பதற்கு அமீன் கதையும் உதாரணம். அமோக நடையில் தரும் ரசிகனுக்கு கைகுலுக்கு!

எஸ்.அபிராமி-
நீர்கொழும்பு.

## தங்களைத் திருத்தட்டும் !

தங்கள் மீது தாக்குதல் நடந்தால் ஒவ்வொரு தமிழ்க் கட்சியும் 'ஜனநாயகத்துக்கு ஆபத்து', 'ஒற்றுமைக்கு வேட்டு' என்று கூவுகின்றன. இதே கட்சிகள் தங்களுக்குள் அடிபடுவதை முதலில் நிறுத்த வேண்டும். ஈபிஆர்.எல்.எஃப். எத்தனை சக இயக்கப் போராளிகளை அமைதிப்படை காலத்தில் சங்காரம் செய்தது. ஈரோஸ் உறுப்பினர்களை வைக்கோல் போட்டு உயிரோடு எரித்தனர். புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்திய குழு உறுப்பினர் ஐயாவை உயிரோடு எரித்தது அத்தனை ஏன்? சமீபத்தில் ரெலோ, ஈ.பி.டி.பி. ஆகிய இயக்கங்கள் மீதும் புளொட் தாக்குதல் நடத்தியது. தாங்கள் செய்தால் சகோதர மோதல். புலிகள் செய்தால் பாசிசமா? முதலில் தங்களைத் திருத்திக்கொள்ளட்டும் இக்கட்சிகள். பின்னர் மக்களிடம் முறையிட வரட்டும். அதைவிடுத்து மக்களைக் குறைகூறுவது அறிவீனம்.

க.வன்னியராஜ்-
நேரியகுளம்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

ராஜேஸ்குமாருக்கு ஒரு வேண்டுகோள். எங்கள் நிலாவுக்கு ஏதும் தீங்கு இழைத்துவிடாதீர்கள். நிலாவை நாங்கள் நேசிக்கிறோம்.

பி. சங்கரன்,
திருக்கோணமலை.

**மடல் அனுப்பியோரில் பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:**

பர்ஸானா ஹாஷிம்.அக்குறணை- 07
ஆர். நிமலன், கொழும்பு -06
ரி. மங்கள கௌரி, இரத்தோட்டை
வி.புஸ்பநாதன், கனடா.
ஆ. ராஜா, ஜெர்மனி.
வெ.கிருபைநாதன், யாழ்ப்பாணம்.
எச்.எச். நிபாஜி, திருமலை.
தி. செந்தில்நாதன், மட்டக்களப்பு
எம்.ஹுசைன் , கெக்குணகொல்ல.
ஆர்.அசோக்குமார் , டிக்கோயா.
எஸ். சீனிவாசகம், பிட்டகந்த
பி. ராசநாயகம், ஃபிரான்ஸ்
கே.சீலன், கனடா.
எல். ராகுல், அவுஸ்திரேலியா
சிபான் , காத்தான்குடி-06
எ.குமாரசிங்கம் , சிங்கப்பூர்.
செல்வி.பஸ்லி பரீட், எருக்கலம்பிட்டி.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன

## தொடரும் நிராகரிப்பு! அரசின் அலட்சியம்!

(அரசியல் நிருபர்)

தமிழ்க் கட்சிகள் இந்தியாவின் மத்தியஸ்தம் கோரியதை ஜனாதிபதி சந்திரிக்கா நிராகரித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் முடிவுகளையும், கருத்துக்களையும் அவற்றின் முகத்தில் அறைந்ததுபோல இன்றைய அரசாங்கம் நிராகரிப்பது இது முதற் தடவையல்ல.

அரசின் தீர்வு யோசனைக்கு ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக சமர்ப்பித்த திருத்தங்களை அரசாங்கம் புரட்டிக்கூட பார்க்கவில்லை. அப்படியே நிராகரித்திருந்தது.

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வுதான் தேவை என்று தமிழ்க் கட்சிகள் கூறியபோது, அக்கருத்தை உடனடியாக நிராகரித்த நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள், தமிழ்க் கட்சிகளின் கருத்தை அரசு ஏற்கமாட்டாது என அறிவித்தார்.

'இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' என்று தமிழ்க் கட்சிகள் கோரியதையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகள் எதனையும் அரசாங்கம் ஏற்கமாட்டாது; தனது தீர்வு யோசனையை இக் கட்சிகள் மறுபேச்சின்றி ஏற்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறது என்பது அழுத்தம் திருத்தமாக தெரிந்து விட்டது.

### தலை குனிவு

தமிழ்க் கட்சிகள் வெட்கித் தலை குனிய வேண்டிய ஒரு விடயத்தையும் அரசியல் நோக்கர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடாக புலிகளுடன் பேசத் தயார்" என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்தியாவிடம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி புலிகள் மத்தியஸ்தம் கோரவில்லை. ஏனைய தமிழ்க் கட்சிகளே கோரின. இக் கட்சிகள் ஆயுதப் போராட்டத்தையும், ஈழக் கோரிக்கையையும் கைவிட்ட கட்சிகளேயாகும்.

புலிகள் ஈழக் கோரிக்கையை கைவிட்டால் அவர்களுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேசத் தயார் எனக் கூறும் ஜனாதிபதி, ஈழக் கோரிக்கையை கைவிட்ட கட்சிகளின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையை நிராகரித்துள்ளார். இக் கட்சிகளை அரசியல் சக்திகளாகவே அவர் கருதவில்லை என்பதே தெளிவாகிறது. இதனையிட்டு தமிழ்க் கட்சிகள் வெட்கப்படவேண்டும் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

### அடுத்தது என்ன?

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரிய தமிழ்க் கட்சிகள் இனி அக் கோரிக்கையை காத்திரமாக்கும் அரசியற் செயற்பாடுகளில் இறங்கப் போகின்றனவா? அல்லது அரசின் அதிருப்திக்கு பயந்து, அக் கோரிக்கையை மூட்டை கட்டி போடப் போகின்றனவா? என்றும் அரசியல் நோக்கர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தியாவின் அபிமானிகளாகத் தங்களை இனம் காட்ட இந்தியாவிடம் மத்தியஸ்தம் கோரினவா? அல்லது இலங்கை அரசு இனப்பிரச்சனையைத் தீர்க்கப்போவதில்லை என்பதை நன்கு உணர்ந்த பின்னர் இக் கட்சிகள் இதய சுத்தியுடன் முன்வைத்த கோரிக்கையா? என்பதும் கேள்விக்குரியதே.

இதய சுத்தியுடன் முன்வைத்தால் இந்தியாவிடம் மட்டும் மத்தியஸ்தம் கோராமல், பொதுவாக சர்வதேச சமூகம் முன்பாக அக் கோரிக்கையை முன்வைத்து உறுதிப்படுத்த தமிழ்க் கட்சிகள் முனைய வேண்டும் என்றும் அரசியல் நோக்கர்கள் கூறியுள்ளனர்.

### அன்று கூறியது

"புலிகள் ஈழக் கோரிக்கையை கைவிட்டால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடாக பேசுவேன்" என்று ஜனாதிபதி தற்போது கூறியுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய ஃபுரொன்லைன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில், 'பிரபாகரன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரினால் பரிசீலிக்கத் தயார்!' எனக் கூறியிருந்தார் என்பது தெரிந்ததே.

# கூட்டணியின் இருவித நிலைப்பாடு!

## யாழில் கூட்டு! கொழும்பில் வேட்டு!

"ஆயுதம் ஏந்திய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து நிற்கமாட்டோம்" என்று முன்னர் கூட்டணியினர் அறிக்கைகள் விட்டிருந்தனர் என்பது தெரிந்ததே. பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் மட்டும் சில சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்பட்டனர்.

ஆனால், சமீபகாலமாக ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளுடன் இணைந்து யாழ் குடாநாட்டில் கூட்டணியினர் செயற்பட்டு வருகின்றனர். நிவாரண வெட்டை எதிர்த்து மூன்று தமிழ்க் கட்சிகள் நடத்திய போராட்டத்தில் கூட்டணி பிரதிநிதியும் கலந்து கொண்டார்.

சார்க் மாநாடு கொழும்பில் நடைபெற்ற போது, யாழ்ப்பாணத்தில் இருந்து, ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளுடன் கூட்டணியும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தன.

அந்தக் கூட்டறிக்கையில் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. கூட்டணி சார்பாக அதன் யாழ் மாவட்ட அமைப்பாளர் மதிமுகராசா அந்த கூட்டறிக்கையில் கையொப்பம் இட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு கூட்டறிக்கை விட்ட கூட்டணியினர், இந்தியப் பிரதமரை தனியாகச் சந்தித்து மத்தியஸ்தம் தேவையில்லை, உதவி செய்தால் போதும் எனக் கூறியுள்ளனர். யாழில் கூட்டாக அறிக்கை விட்டவர்கள் கொழும்பில் தனியான சந்திப்புக் கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

முன்னர் வடக்கு-கிழக்கில் தமிழரசுக் கட்சி என்ற பெயரிலும், கொழும்பில் சமஷ்டிக் கட்சி என்றும் கூறிக்கொண்டது போலவே, தற்போதும் யாழில் ஒரு நிலைப்பாடு, கொழும்பில் ஒரு நிலைப்பாடு எடுக்கின்றனர் கூட்டணியினர் என்று தமிழ்க் கட்சி வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

# இந்தியப் பிரதமரின் மௌனம்

இந்தியப் பிரதமர் வாஜ்பேயி இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக கொழும்பில் கருத்து எதனையும் வெளியிடவில்லை. ஆனாலும் இந்தியப் பிரதமராக குஜ்ரால் போன்றோர் இருந்திருந்தால் இலங்கை அரசையும் அதன் தீர்வு யோசனைகளையும் புகழ்ந்து கருத்துக் கூறியிருப்பர்.

அரசின் தீர்வுயோசனைகள் பற்றி இந்தியப் பிரதமரிடம் விளக்கியதாக ஜனாதிபதி சந்திரிக்கா கூறியுள்ளார். அப்போதும் இந்தியப் பிரதமர் கருத்து எதனையும் கூறவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இதுவும் கவனிக்கத்தக்க அம்சமாகும். ஆதரித்தோ, புகழ்ந்தோ பேசாமல் தவிர்த்துள்ளார்.

அரசின் தீர்வு யோசனை பற்றி பிரதமர் வாஜ்பேயி வெளிப்படையாக பாராட்டிக் கருத்துக் கூறாதது இலங்கை அரசாங்க உயர்மட்டங்களுக்கும் உள்ளூர அதிருப்தியை ஏற்படுத்தியதாம். ஆனாலும் அதனை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை.

அரசின் தீர்வு யோசனைகளை வரவேற்றுக் கருத்துக் கூறாமல் பிரதமர் வாஜ்பேயி தவிர்த்துக் கொண்டமை தீர்வு யோசனை போதுமானதல்ல என்ற கருத்துக்கள் அவரை எட்டியிருப்பதின் வெளிப்பாடே என்றும் கருதலாம்.

# சார்க் மாநாட்டில் சம்பந்தர்

## தமிழ் எம்.பி.கள் புறக்கணிப்பு

சார்க் மாநாட்டின் தொடக்கவிழாவில் பங்குகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

தமிழ்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் தவிர ஏனையோர் எவரும் சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

கூட்டணியின் செயலதிபர் இரா.சம்பந்தன் பா.உ., புளொட் தலைவர் த.சித்தார்த்தன் பா.உ. ஆகியோர் மட்டுமே சார்க் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சார்க் மாநாட்டை முன்னிட்டு கொழும்பில் இரவோடு இரவாக பெரும் தொகையான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

சார்க்கை முன்னிட்டு தமிழ் மக்கள் சந்தேகப் பார்வைக்கு உள்ளான நேரத்தில், சார்க் மாநாட்டில் தமிழ் எம்.பி.கள் எவரும் கலந்துகொள்ளமாட்டார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

கூட்டணியில் ஐந்து எம்.பி.கள் இருந்தும்கூட இரா.சம்பந்தன் மட்டுமே கலந்துகொண்டார்.

இரா.சம்பந்தனும் தானும் இணைந்து கலந்துகொண்டால், தாங்கள் இருவரும்தான் அரசுக்கு நெருக்கமானவர்கள் என்று கூறப்படுவதை உறுதி செய்வதாகிவிடும் என்று நினைத்துத்தான் நீலன் திருச்செல்வம் எம்.பி. கலந்து கொள்ளவில்லைப்போல் உள்ளது என்று கூறினார் அரசியல் விமர்சகர் ஒருவர்.

### காரணமடித்தனர்

இதேவேளை, இந்தியப் பிரதமர் வாஜ்பேயி அவர்களிடம் ஏனைய தமிழ் கட்சிகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரியிருந்தன. கூட்டணி மட்டும் அதற்கு நேர்மாறாக இந்தியா உதவினால் போதும் எனக் கோரியிருந்தது.

இலங்கைக்குள் இனப்பிரச்சனையை தீர்க்கமுடியும் மத்தியஸ்தம் தேவையில்லை என்பதே கூட்டணியின் நிலைப்பாடு. ஆனால் சில மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் இராசம்பந்தன் ஆற்றிய உரையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரியிருந்தார்.

அதன் பின்னர் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை' என்று கருத்து வெளியிட்ட பின்னர் கூட்டணியினரும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பேசுவதில்லை என்பதும், அரசின் நிலைப்பாடுகளுக்கு ஏற்பவே வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு கூட்டணி கருத்து வெளியிட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கொலையல்ல—தற்கொலைதான்!

"தற்கொலையா கொலையா? ரெலோ பிரமுகர் மரணத்தில் சந்தேகம்!" என்ற தலைப்பில் வெளியான செய்தி பற்றி உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு.

தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) முன்னாள் நிர்வாகச் செயலாளரான கிறிஸ்டி என அழைக்கப்படும் துரைராஜா ஜோசப் தில்லைநாதன் அவர்களின் மரணம் சம்பந்தமான செய்தியில், 'சம்பவநாள் காலையில் அவர் எழுந்ததும் வழக்கம்போல் தண்ணீர் அருந்தியுள்ளார். அத்தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டு இருந்திருக்கிறது. அதனால்தான் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

உணர்ச்சிபூர்வமான தனிப்பட்ட ஒரு பிரச்சனை காரணமாகவே அவர் தற்கொலை முடிவுக்கு வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. இதனைவிட கட்சியின் முக்கிய பொறுப்புக்கள் எதிலும் தற்போது அவர் அங்கம் வகிக்கவில்லை.

இச்சம்பவம் கிராண்ட்பாஸ் வீதியில் உள்ள ஒரு விடுதியிலேயே நடைபெற்றது. அங்கிருந்து நஞ்சு அருந்திய நிலையில் அவசரமாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார். இவ் விபரங்கள் அனைத்தையும் விசாரித்த மரண விசாரணை அதிகாரி, கிறிஸ்டியின் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கியுள்ளதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்."

இவ்வாறு ரெலோ முதல்வர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

# அவலநிலையைத் தடுத்து நிறுத்துக!

## இந்திய நாடாளுமன்றத்தில் கோரிக்கை

## இனப்பிரச்சனை உள்நாட்டுப் பிரச்சனையல்ல!

"இலங்கையில் நடைபெறும் யுத்தத்தால் தமிழர்கள் பலர் அகதிகளாக தப்பியோடி வருகின்றனர். இந்த அவல நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்!" இவ்வாறு இந்திய நாடாளுமன்றத்தில் ம.தி.மு.க. தலைவர் வை.கோ.கோரிக்கை விடுத்துள்ளார்.

இராமேஸ்வரம் கடலில் படகு விபத்தில் 47 இலங்கைத் தமிழ் அகதிகள் பலியானது தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து அவர் உரையாற்றினார்.

"இந்தப் பிரச்சனை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையல்ல. முன்னாள் பிரதமர் குஜ்ரால் இதை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனை என்று குறிப்பிட்டது சரியல்ல. இது ஒரு சர்வதேச மனித உரிமைகள் குறித்த பிரச்சனை.

இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் கையாண்ட கொள்கையை- ஈழப் பிரச்சனையில்-இந்த அரசும் கடைப்பிடிக்கக் கூடாது.

மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சனையாக இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும்.

பொஸ்னியாவில் நடைபெறுவதைவிட மோசமான சம்பவங்கள் இலங்கையில் நடக்கின்றன. ஏறத்தாழ பத்து இலட்சம் மக்கள் தங்கள் தாயக மண்ணிலிருந்து துரத்தப்பட்டு காடுகளில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

எமது மதிப்பிற்குரிய தலைவர் அண்ணா, 'தமிழர்கள் விடுகின்ற கண்ணீரின் காரணமாகவே கடல் நீர் உப்பாக மாறியதோ?' என்று துயரத்துடன் குறிப்பிட்டார். தற்போது நடந்துள்ள படகு விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்பதை உயிர் தப்பியவர்கள் விபரித்துள்ளனர்.

உயிர் தப்ப, வீடு, வாசல் உடமைகளை விட்டு இந்தியாவில் புகலிடம் தேடி வந்தவர்களே பலியாகியுள்ளனர்!" என்று வை.கோ. தனது நீண்ட உரையில் குறிப்பிட்டார்.

# "தமிழில் முறைப்பாட்டைப் பதிய வேண்டாம்!"

## பொலிஸ் பொறுப்பதிகாரி கண்டிப்பான உத்தரவு

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. நோட்டன் சில்வா பொலிஸ் நிலையத்தில் தமிழ் மூலமான எந்தவிதக் கருமங்களையும் மேற்கொள்ள வேண்டாமென்று உத்தியோகபூர்வமாகக் கேட்டுள்ளார், என்று தெரியவருகிறது.

இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது: ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏறாவூர் பொலிஸ் நிலையச் செயற்பாடுகளில் மாற்றத்தைக் கொண்டு வரவிருப்பதாக பொலிஸாரின் கூட்டமொன்றில் குறிப்பிட்ட மேற்படி அதிகாரி, "எனக்கு தமிழில் நடக்கும் எதுவித நிருவாகத்தையும் அறிய முடியாது. நான் பொலிஸ் சேவையில் 24 வருட சேவை அனுபவமுள்ளவன். இனிமேல் எந்தக் கருமங்களையும் இங்கே தமிழில் செய்யமுடியாது. சிங்களத்திலேயே சகல கருமங்களும் இடம்பெற்றால்தான் என்னால் கடமையைச் செய்யமுடியும். எனவே இதுவரை இடம் பெற்றுவந்த தமிழ்மொழி மூலமான கருமங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்!" என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளாராம்.

இதுவரை காலமும் முறைப்பாடு, விசாரணைகள், குற்றத்தடுப்பு போன்ற பிரிவுகளில் கடமையாற்றி வந்த தமிழ் பேசும் பொலிஸார் அனைவரையும் வேறு கடமைகளுக்கு அனுப்பியுள்ளாராம்.

அவரது கட்டளைப்படியே கடந்த 01.08.98 தொடக்கம் தனிச் சிங்களத்திலேயே முறைப்பாடுகள், விசாரணைகள் என்பன நடைபெறுகின்றன. இதனால் பொலிஸ் நிலையத்தை நாடிவரும் தமிழ்-முஸ்லிம் மக்கள் மொழிபுரியாது பலவித கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். இத்தகவலை தமிழ் பேசும் பொலிஸார் 'முரசு'க்குத் தெரிவித்தார்கள். நூறு வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தமது கருமங்களைத் தமிழில் மேற்கொள்ள முடியாது வாய்ப்பூட்டுப் போடப்பட்டுள்ளனர். தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள இலட்சணம் இதுதானா? என்று தமிழ் பேசும் பொலிஸார் மேலும் கேள்வி எழுப்புகிறார்கள்.

# புலிகளின் பெயரில் மிரட்டல்

## மா-சபை அதிகாரிகளுக்கு கடிதம்!

புலிகளின் கடிதத் தலைப்பு போல தயாரிக்கப்பட்ட போலி மிரட்டல் கடிதங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அக் கடிதங்களில், மாகாண கல்விச் செயலாளர் திவகலாலாவை பதவியில் இருந்து நீக்கக்கூடாது என்றும், அவ்வாறு நீக்க துணை போவோர் கொல்லப்படுவர் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்ட புலிகள் அனுப்பி வைத்ததுபோல கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முரசுக்கும் அக் கடிதப் பிரதி ஒன்று கிடைக்கப்பெற்றது. புலிகளின் இலச்சினை ஒன்றை வெட்டி ஒட்டி போட்டோ பிரதி எடுத்து போலியாகத் தயாரிக்கப்பட்ட கடிதத் தலைப்பாகவே அது காணப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் திவகலாலா பல புகார்கள் காரணமாக ஆளுநரால் பதவி மாற்றம் செய்யப்பட்டார். பின்னர் கூட்டணி எம்.பி. நீலன் திருச்செல்வம் ஜனாதிபதியின் செயலாளருடன் தொடர்புகொண்டு அந்த பதவி மாற்றத்தை இரத்துச் செய்தார் என்று கூறப்பட்டது.

# திடீர் தாக்குதல்

திருமலை சல்லியில் மூன்று பொலிசார் மீது 04.08.98 அன்று புலிகள் தாக்குதல் நடத்தினர்.

கவிதா ஸ்ரோர்ஸில் சிகரெட் வாங்கிப் புகைத்துக்கொண்டு பஸ்சுக்காகக் காத்து நின்ற பொலிசார்மீதே தாக்குதல் நடந்தது. ஒருவர் பலியானதாக உடனடியாகக் கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

இதனையடுத்து சல்லிப் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

# உழவு இயந்திரத்தில் வந்து தாக்குதல்!

மட்டக்களப்பு-சித்தாண்டி முருகன் கோயிலடியில் நின்றிருந்த பாதுகாப்புப் படையினர்மீது, உழவு இயந்திரமொன்றில் வந்த புலி இயக்கத்தினர் திடீர்த் தாக்குதலை நடத்தினார்கள். புலிகள் தரப்பில் கொல்லப்பட்ட ஒருவரது சடலமும், துப்பாக்கியும் படையினரால் கைப்பற்றப்பட்டன. படையினர் தரப்பில் மூவர் பலியாகினர் பொது மக்கள் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் 02.08.98 அன்று காலை இடம்பெற்றது. மேற்படி திடீர்த் தாக்குதலின் வெடியோசைகளால் அவ்வூர் சிறிது நேரம் அல்லோல கல்லோலப்பட்டது. பதில் நடவடிக்கையில் இறங்கிய படையினர் புலிகளால் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரத்தைத் தீமிட்டுக் கொளுத்தினர். இந்த உழவு இயந்திரம் மைலம்பாவெளியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவருடையதாகும் என்று அறியப்படுகிறது.

மட்டக்களப்புப் பகுதியில் அடிக்கடி உழவு இயந்திரத்தில் மறைந்திருந்து வந்து இதே பாணியிலான திடீர்த் தாக்குதல்களில் புலிகள் ஈடுபடுவது வழக்கமாகும்.

கடந்த மார்ச் 11ம் திகதி வந்தாறுமூலை பிரதேச சபைக் கட்டடத்திற்கு முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் துரைராஜசிங்கத்தின் உழவு இயந்திரத்தை எடுத்து வந்து படையினர்மீது திடீர்த் தாக்குதல் நடத்தியுள்ளனர். உழவு இயந்திரத்தில் வந்தவர்களில் ஒரு புலி கொல்லப்பட்டார். இந்த உழவு இயந்திரமும் அவ் விடத்திலேயே தீக்கிரையாகிப் பலநாட்கள் கிடந்தது.

# மட்டக்களப்பில் விமானத் தாக்குதல்!

## புலிகள் தப்பினர்! பசுக்கள் பலி!

புலி இயக்கத்தினரின் வசமுள்ள மட்டக்களப்பு-உன்னிச்சை காட்டுப் பகுதிகளை நோக்கி விமானப் படை விமானமொன்று குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் புலி இயக்கத்தினரின் நிலைகளுக்கோ அவர்களது வழமையான நடவடிக்கைகளுக்கோ எதுவித பாதிப்புக்களும் நிகழவில்லை என்று தெரிகிறது.

ஆனால் வீசப்பட்ட குண்டுகளிலொன்று புற்றரையில் மேய்ந்து கொண்டிருந்த பசு மாடுகள் மீது விழுந்ததில் எட்டு மாடுகள் பலியானதோடு, மாடு மேய்க்கும் 14 வயதுப் பையன் ஒருவனும் கொல்லப்பட்டான். இச்சம்பவம் 01.08.98 அன்று காலை எட்டு மணியளவில் இடம்பெற்றது.

இது சிறுபோக நெல் அறுவடைக் காலமாகையால் வயல் வெளிகளில் நெல் அறுவடைக்காகச் செல்லும் தொழிலாளர்கள் விமானத் தாக்குதல்களால் அச்சம் கொண்டுள்ளனர். இடைக்கிடையே மழையும் பெய்து நெல் விளைச்சலைச் சேதப்படுத்துவதால் விவசாயிகள் கவலை கொண்டுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

# பொதுமக்கள்மீது தொடர் தாக்குதல்

## முறையிடவும் சாட்சி சொல்லவும் அச்சம்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு கல்லடி பகுதியிலுள்ள பொலிஸாரால் பொதுமக்கள் தெருவில் வைத்துக் கண்டபடி தாக்கப்பட்ட பல சம்பவங்கள் பற்றிக் கூறப்படுகிறது.

ஜூலை 16ஆம் திகதி மட்டக்களப்பு-கல்லடி சிவானந்தா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து விட்டு பாடசாலை அதிபர் ஈ.பி. ஆனந்தராஜா (மட்/பா.உ செல்வராஜாவின் சகோதரர்) பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளர் எம்.தம்பையா, ஆசிரியர்கள் இருவர் மற்றும் பெற்றார் ஒருவர் ஆகியோர் பாடசாலை முன்வாயிலில் மாலை 07.05 அளவில் கதைத்துக் கொண்டு நிற்கும் போது அங்கு திடீரென வந்த பொலிஸார் மூவர், "என்ன இவ்வாறு கூட்டமாக நிற்கிறீர்கள்?" எனக் கேட்டனராம். "நாம் பாடசாலைக்கூட்டத்தை முடித்துவிட்டு அது சம்பந்தமான விடயங்களைப் பேசிக் கொண்டு நிற்கிறோம். இவ்வாறு நிற்பது பிழையா? அப்படியானால் விலகிவிடுகிறோம்." எனச் சொன்ன பொழுது அந்த மூவரில் ஒரு பொலிஸ்காரர் சங்கச் செயலாளரின் முகத்தில் பலமாக அறைந்து விட்டு, "என்ன அளவுக்கு மீறிக் கதைக்கிறீர்! சந்தர்ப்பம் வரும்போது தோலுரிப்பேன்!" என்றாராம். அப்பொழுது அங்கு நின்ற பொலிஸ்காரரில் ஒருவர் தான் கல்லடியிலுள்ள கே.எல்.111 எனும் பொலிஸ் சாவடியின் பொறுப்பதிகாரி எனக் கூறினாராம். அவர் முன்னிலையிலேயே தாக்குதல் நடந்துள்ளது.

இது விடயமாக தாக்குதலுக்குள்ளான சிவானந்தா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் தம்பையா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.சொலங்க ஆராச்சியிடம் தனது வாக்கு மூலத்தை அளித்த பொழுது தான் நேரடி விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக உறுதியளிக்கப்பட்டதாம்.

### சாட்சி சொல்ல அச்சம்

தாக்குதல் நடந்தபோது அங்கு உடனிருந்த பாடசாலை அதிபர் ஈ.பி. ஆனந்தராஜா மற்றும் ஆசிரியர் இருவர் பெற்றார் ஒருவர் ஆகியோருக்குப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் பழிவாங்கக் கூடுமென அஞ்சி சாட்சியமளிக்கத் தயக்கம் காட்டியுள்ளனர். தாக்குதல் நடத்திய பொலிஸார் இவர்களிடம் சென்று பயமுறுத்தல் விடுத்துள்ளதாலேயே சாட்சியமளிக்க முன்வரவில்லை என்ற தகவல் தனக்குக் கிடைத்ததாக செயலாளர் தம்பையா சொன்னார்."இந்த நாட்டில் சமாதானத்தை விரும்பும் பிரஜை என்ற வகையில் எனது உரிமையும் கௌரவமும் தாக்கப்பட்டுள்ளது!" என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மாலையாகியதும் சந்திக்குச் சந்தி நின்று கல்லடிப் பகுதி மக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவது பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. 16.07.98. அன்றைய தினம் சக்தி எனும் குடிமகன் ஒருவர் உள்வீதியில் மறைந்திருந்த பொலிஸாரினால் பலமாகத் தாக்கப்பட்டு அவர் வீழ்ந்து கிடந்ததை தான்நேரில் கண்டதாகத் திரு.தம்பையா சொன்னார். இச்சம்பவத்திற்கு முதல் நாளும் நாவற்குடாவில் பொதுமக்கள் மீது தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

அவரது முறைப்பாட்டின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மாவட்டப் பா.உக்கள் மற்றும் உதவிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தகவல் தந்தார்.

# திடல் இல்லாத பாடசாலை

(திருமலை நிருபர்)

ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கண்டு பொன்விழா கொண்டாட இருக்கும் திருமலை சல்லி அம்பாள் வித்தியாலயத்துக்கென இதுவரை ஒரு விளையாட்டுத்திடல் இல்லையென்று பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக்கு மட்டுமல்ல சல்லிக் கிராமத்துக்கே ஒரு விளையாட்டுத் திடல் கிடையாது என்று இங்குள்ள விளையாட்டுக் கழகங்கள் கூறுகின்றன. இதுவரை காலமும் பாடசாலைக்கு அருகிலுள்ள தனியார் காணியொன்றே பாடசாலைச் சிறார்களுக்கும் கழகங்களுக்கும் விளையாட்டுத் திடலாக இருந்து வந்துள்ளது. தற்போது அக்காணி கைமாற்றப்பட்டதால் விளையாட்டுத்திடல் இல்லாத நிலையில் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள்கூட நடைபெற முடியாமல் போய்விட்டது.

மாவட்டத்தில் முதற்பரிசுகள் பலவற்றைத் தட்டிக் கொண்ட உதய சூரியன், உதய ஒளி, உதயசக்தி, சிறுவர் விளையாட்டுக் கழகம் ஆகிய நான்கு விளையாட்டுக் கழகங்கள் சல்லியில் இயங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, சல்லிப் பகுதிக்கு எரிபொருட்கள் எடுத்துச் செல்வதற்கு இராணுவம் கட்டுப்பாடு விதித்துள்ளது. மார்ச் 5ம் திகதி முதல் அமுலுக்கு வந்த இந்தக் கட்டுப்பாட்டால் பெரும் தொகையான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சல்லி மக்களின் பிரதான ஜீவனோபாயம் மீன்பிடித்தலே என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மயக்கம் தரும் மாதச் சம்பளம்!

## தங்குவதற்கு சொகுசு விடுதிகள்

'எயார் லங்கா' விமான சேவை 'எமிரேட்ஸ்' நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து வெளிநாட்டைச் சேர்ந்த நிர்வாகிகள் சிலருக்கு மிகக் கூடுதலான தொகைப் பணம் மாதச் சம்பளமாக வழங்கப்பட்டு வருகிறதாம்.

ஐக்கிய லலித் முன்னணியைச் சேர்ந்த வரும் பொது ஜன முன்னணி பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக இதனைச் சுட்டிக்காட்டி 'எயார் லங்கா' அமைப்பைச் சாடியுள்ளார்.

இரு நிறுவனங்களுக்குமிடையில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிரதான நிறைவேற்று அதிகாரியாக ஒரு பிறநாட்டவரை 'எயார் லங்கா' பதவியில் இருத்தியுள்ளது. இவருடைய மாதச் சம்பளம் ரூபா 10 இலட்சம்.

அத்துடன் யூனியன் பிளேசில் புதிதாக கட்டப்பட்டுள்ள 'ஹில்டன் டவேர்சில்' சொகுசு வாசஸ்தலத்தையும் இவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாம். இந்த இருப்பிடத்துக்கு மாத வாடகையாக 'எயார் லங்கா' நிறுவனம் மூவாயிரம் அமெரிக்க டொலரை (ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ரூபா) வழங்குகிறதாம்.

'எயார். லங்கா'வின் மற்றுமொரு அதிகாரிக்கு மாதச் சம்பளமாக ரூபா 8 இலட்சம் வழங்கப்படுகிறதாம். இவர் குடியிருக்கும் இல்லத்துக்கு மாதவாடகையாக 'எயார் லங்கா' இரண்டாயிரம் அமெரிக்க டொலர் (ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா) கொடுக்கிறது.

இவ்வளவு பெருந் தொகைப் பணம் 'எயார் லங்கா'வால் வழங்கப்படுவது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என அமைச்சர் தர்மசிறிசேன நாயக்கா கூறியிருக்கிறார். இது பற்றிதான் விசாரணைகளை மேற்கொள்ளப் போவதாகவும் கூறியுள்ளார்.

# வாஜ்பேயி கொடுத்த யானை

(கண்டி நிருபர்)

இலங்கை-இந்திய நல்லுறவின் ஒரு பகுதியாக இந்தியாவில் இருந்து ஏற்கனவே இலங்கைக்குத் தருவிக்கப்பட்டிருக்கும் 'காவேரி ராஜா' என்ற கொம்பன் யானைக் குட்டியை இலங்கைக்கு வந்திருக்கும் இந்தியப் பிரதமர் அத்தல் பிஹாரி வாஜ்பேயி இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம் கொழும்பில் கையளித்திருந்தார்.

கண்டியில் நடைபெறும் எசல பெரஹரா இறுதி நாளாகிய ஆகஸ்ட் 8ஆம் திகதி இந்த யானையை தலதா மாளிகை தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்னவிடம் கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி சம்பிரதாயபூர்வமாக கையளிப்பார்.

# தமிழர் இல்லாத திட்டம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இவ்வாண்டுக்கான திட்டங்களுள் ஒன்றான வடக்கு-தெற்கு எனும் இளைஞர் பரிமாற்று திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து சென்ற இளைஞர் குழுவில் ஒரு தமிழ் இளைஞரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

காலிக்குச் சென்ற 50 இளைஞர்களுள் 30 சிங்களவரும் 20 முஸ்லிம்களும் சென்றனர். அண்மையில் சம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இருந்து வந்த இளைஞர் யுவதிகள் அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிரதேசங்களுக்கு வரவில்லை.

சிங்கள, முஸ்லிம் கிராமங்களிலே தங்கி விட்டுச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி தமிழ் இளைஞர்கள் புறக்கணிக்கப் படும்போது இத்திட்டத்தின் நோக்கத்தை எட்டுவது எவ்வாறு?

எஸ். புவனேஸ்வரன்-
காரைதீவு.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
24
11
1974



உதிர்வு
08
08
1997

நவரத்தினம் ராசராசன் (கட்டுவன் தெற்கு, ஏழாலை)

துளிர்த்திடும் என்றிருந்தோம்
துவண்டது கொடியாய் மேனி...
விழித்தெழுவாய் என்றிருந்தோம்...
விடியவில்லை உனக்கு மட்டும்!

நீ மறைந்தாலும்-
உன் புன்னகை மறையவில்லையே...?
நெஞ்சிலே நிறைந்த உன்னை-நித்தமும
நினைந்து நிற்போம்.

உற்றார், உறவினர், நண்பர்கள்


# SPOKEN ENGLISH

BY K. M. N. NALRAVI

இப்பொழுது வெள்ளவத்தையில்

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 18 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாகப் பேசப் பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: பழைய மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பம்.

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Col - 6. (Hotel Ceylon Innsக்கு அருகில்)


# விளக்கம் தர வேண்டும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து உதவி பெறும் மாணவர்கள் வவுச்சர்களை நிரப்பிக் கொடுக்கும் போது முத்திரையும் ஒட்டிக்கொடுக்கும் பழக்கம் காணப்படுகிறது.

உதவிப் பணங்கள் வழங்கப் படும்போது முத்திரை ஒட்டத் தேவையில்லையென்பது சட்டம். அப்படியிருந்தும் புலமைப்பரிசில் பரீட்சை விடயத்தில் இது எதிர் மாறாக உள்ளது.

கல்வித் திணைக்களங்களில் இதுபற்றி வினவும்போது முரணான விளக்கங்கள் தரப்படுகின்றன. இது பலரையும் சந்தேகங்கொள்ள வைத்துள்ளது. இதுபற்றி உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் சரியான விளக்கத்தைத் தர வேண்டும்.

சேனையூர்-அ.அச்சுதன்


குழந்தை பராமரிப்புக்கு ஆயா ஒருவர் தேவைப்படுகிறார்.
8, Mahewela Place,
Kirulapone, Colombo-06.
என்ற முகவரிக்கு ஞாயிறு அன்று நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.




## ஓராண்டு இதய அஞ்சலி

மண்ணில் மலர்வு
19.09.1932
(இலங்கை)

விண்ணில் மறைவு
02.08.1997
(சுவிற்ஸர்லாந்து)

சுந்தரம் லோகேஸ்வரன்
(சண்முகம்)

எங்கள் அன்புத் தெய்வமே!
வாழ்வினில்வழிகாட்டி,
ஒளியேற்றி, வைத்துவிட்டு,
சென்று விட்டீர்கள் எம்மைவிட்டு
உங்கள் நினைவு என்றும் மாறாது!
தங்கள் பாதங்களை தினம் தினம்
தொழுகின்றோம்-எங்கள் அப்பா!

உங்களின் ஆத்மா சாந்திக்காய் இறைவனிடம் பிரார்த்திக்கும் மனைவி (இரத்தினேஸ்வரி) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: பரன் (பரந்தாமன்) மகன். T.P: 01, 301 3752, 079-4119039

## 3வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் டிரூஸ்
28.07.1998

கருணானந்தன்-சித்திரா தம்பதியினரின் செல்வப் புதல்வன் டிரூஸ் தனது 3வது பிறந்தநாளை யாழ்ப்பாணத்தில் 28.07.1998அன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அண்ணன் சஜீதன், அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, யமுனா அத்தை, அமுதிமாமா, நோர்வேயிலிருந்து ஜெயா, சிவாமாமா, ஜேர்மனியிலிருந்து ராணி,பத்மா அத்தைமார், யேகன்மாமா, நிவேதா, பாரிஸிலிருந்து சுரேஸ் சித்தப்பா மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
நோர்வேயிலிருந்து
அப்பா-அம்மா

## 31ம் நாள் நினைவஞ்சலி

விண்ணிற்கு: 02-07-1998



02
08
1998

திருமதி கனகம்மா சங்கரப்பிள்ளை

(காலஞ்சென்ற நா. சங்கரப்பிள்ளை ஆசிரியரின் மனைவி)

"கனிமுகத்தின் அன்பினிலே கண்கலங்கி
நிற்கின்றோம்.
பாசத்தின் நினைவினிலே பரிதவிக்கும்
நாங்கள் இங்கே!"

உங்களின் ஆன்மா சாந்தியடைய உளம் உருகிப் பிரார்த்திக்கின்றோம்.
உங்களின் மறைவால் துயருறும்
மக்கள்: பரிமளம், கோமளம், கோகிலம், கோமதி, ஜெயமளம், ஜெயபால்.
மருமக்கள்: பிரான்சிஸ், அந்தோனிப்பிள்ளை, சுந்தரமூர்த்தி, தேவிகா.
பேரப்பிள்ளைகள்: வாசுகி, சஞ்சித், வாஜிதா, தர்ஷிகா, ஜெனிற்ரன், ஒஷானா, வர்சனா, ஜெமின்.

தகவல்: ச. ஜெயபால்.
"தேவிகா இல்லம்"
பெரிய கல்லாறு-01, கல்லாறு.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

ஸ்ரெல்லா மேரி (ஜான்சி)



துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஸ்ரீவன் ஒட்டுசுட்டானை சேர்ந்த ரதி லக்சுமி தம்பதியினரின் அன்பு மகள் ஸ்ரெல்லா மேரி தனது முதலாவது பிறந்தநாளை லெபனானில் வெகு சிறப்பாக 18.07.1998ல் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, பாபு சித்தா, சாரா, ராணி அத்தைமார், துணுக்காயில் வசிக்கும் அப்பம்மா, மாமா-மாமிமார், மச்சான்மார் நியூ, சித்தா ஒட்டுசுட்டானில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, அன்ரிமார், பெரியப்பாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், கவிதா சித்தி, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் லெபனான் மாமாமார், அத்தைமார், நண்பர்கள் அனைவரும் கரிஷ்சா மாதா அருள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ஞா. ஸ்ரீவன்-லெபனான



படிப்பகம்

www.padippakam.com

# குடாநாட்டில் மையம்கொள்ளும் கெரில்லாக்கள்

யாழ் குடாநாட்டுக்கு செய்தியாளர்களை அழைத்துச் சென்று காண்பித்துள்ளனர்.

இயல்பு நிலை தோன்றியுள்ளது, சிவில் நிர்வாகம் சீரும் சிறப்புமாக நடக்கிறது என்று படம் காட்டியிருக்கிறார்கள்.

யாழில் பஸ்சுக்கு பெண்கள் காத்திருக்கும் படத்தை வெளியிட்டு, இயல்பு நிலை தோன்றுவதன் உதாரணமாக அரச தகவல் ஊடகம் ஒன்றில் செய்தி வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறான சித்தரிப்புக்கள்தான் புலிகளைக்கூட தாக்குதல் நடத்த தூண்டிவிடுகின்றன.

புலிகளின் தாக்குதல் நடைபெறவில்லை என்றால், அதனை புலிகளின் பலவீனமாக கூறி, தமது முஸ்டிகளை உயர்த்திக் காட்ட முனையும் அரசினதும், படைகளினதும் பிரசார அணுகுமுறைகள் புலிகளை சீண்டிவிடுகின்றன.

அதன் பின்னர் புலிகள் தாக்குதல் நடத்துவர். உடனே, சிவில் நிர்வாகத்தை சீர்குலைக்க புலிகள் முயற்சிப்பதாக அரசும், சில அறிக்கை புகழ் தமிழ்க் கட்சிகளும் கூறத் தொடங்குவர்.

யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் என்பது தற்போதைக்கு நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. அங்கு மட்டுமல்ல வடக்கு-கிழக்கில் எங்குமே சிவில் நிர்வாகம் தற்போது நடத்த முடியாது.

வடக்கு-கிழக்கில் இன்று நடப்பது இராணுவ நிர்வாகம்தான். இராணுவ நலன், யுத்த நலன் என்பவற்றுக்கு அமைவாக நடைபெறும் நிர்வாகம்தான்.

இந்த நிர்வாகத்தில் அரச அதிபர்கள், மற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் போன்றோர் சிவில் உத்தியோகத்தர்களாக இருக்கின்றனர். இவர்கள்தான் நிர்வாக காரியங்களை கவனிக்கின்றனர்.

நிர்வாக காரியங்களை சிவில் உத்தியோகத்தர்கள் கவனிப்பதால், அந்த நிர்வாகம் சிவில் நிர்வாகம் என்று அர்த்தமல்ல.

இராணுவ நிர்வாகம் என்றால் கச்சேரிகளிலும், அரச அலுவலகங்களிலும் சீருடை தரித்த இராவணுவத்தினர்தான் அலுவல் பார்ப்பார்கள் என்பதுபோல கருதிவிடக் கூடாது.

நாட்டில் இராணுவப் புரட்சி நடந்து இராணுவ ஆட்சி நடந்தால்கூட அரச அலுவலகங்களில் இன்று போல அதே சிவில் அதிகாரிகள்தான் பணியில் இருப்பார்கள். அதனால் நடப்பது சிவில் ஆட்சி என்று அர்த்தமல்ல.

உள்ளாட்சி சபைகளான மாநகர சபை, நகரசபை, பிரதேச சபைகள் போன்றவை இயங்குவதாலோ, அல்லது அதிகாரமற்ற அந்த அமைப்புக்களுக்கு தேர்தல் வேடிக்கை நடந்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதாலோ நடப்பது சிவில் நிர்வாகம் என்று கூறிவிட முடியாது.

உதாரணமாக கூறுவதானால்; பாகிஸ்தானில் இராணுவம்தான் அதிகாரத்தில் இருக்கிறது. அங்கு பொதுத்தேர்தல்கூட நடந்து, பிரதமர் அமைச்சரவை எல்லாம் தெரிவு செய்யப்படுகின்றன. ஆனால் இராணுவ அதிபர் நினைத்தால் பிரதமரையே தூக்கி சிறையில் போட்டுவிடலாம்.

பாகிஸ்தானில் நடப்பது இராணுவ அதிகாரத்திற்கு கட்டுப்பட்ட வரையறைக்குட்பட்ட அரைகுறை ஜனநாயக ஆட்சிதான்.

நடப்பது யார் நிர்வாகம்? என்பதைக் கண்டறிய வேண்டுமானால், யாருடைய உத்தரவின் பேரில், யாருடைய மேலாண்மையின் கீழ் நிர்வாகம் அல்லது ஆட்சி நடக்கிறது? என்பதை வைத்தே தீர்மானிக்க முடியும்.

நிர்வாகத்தில் யார் வேலை செய்கிறார்கள் என்பதையல்ல, யார் வேலை செய்விக்கிறார்கள் என்பதை வைத்தே நிர்வாகம் யாருடையது என்ற முடிவுக்கு வரலாம்.

வடக்கு-கிழக்கில் மாகாண சபையின் தலைமைச் செயலாளரைக்கூட அங்கு ஒரு பகுதியில் உள்ள இராணுவ அதிகாரிகூட கட்டுப்படுத்த முடியும்.

உள்ளாட்சிச் சபைகளின் தலைவர்களது முடிவுகளைக்கூட இராணுவ அதிகாரிகள் தலையிட்டு நிறுத்த முடியும்.

திருமலையில் நகரசபை கொடுத்த சட்ட பூர்வ குத்தகையை இராணுவ பிரிகேடியர் தடுத்து நிறுத்தினார். அதே நகரசபை கட்டிய சந்தையை திறக்கவிடாமல் தடுக்கும் அதிகாரம் படைத்தவராகவும் பிரிகேடியரே இருக்கிறார்.

யாழ் குடாநாட்டிலும் அரசு வழங்கிய சமுர்த்தி வேலை வாய்ப்புக்களைக்கூட இராணுவ அதிகாரி ஒருவர் தலையிட்டு தடுக்கக் கூடியதாக இருந்தது. ஏனைய நிர்வாகச் செயற்பாடுகளும் இராணுவ மற்றும் யுத்த நலன்களுக்கு மாறானது என கருதப்படுமானால் இராணுவ அதிகாரிகள் தடுக்க முடியும்.

உண்மையில் இது தவிர்க்க முடியாததும் கூட. படைபலத்தை பயன்படுத்தி தக்கவைக்கப்படும் பகுதிகளில், படைநலன் சார்ந்த நிர்வாகம்தான் நடக்கமுடியும். படையினரின் அதிகாரம்தான் மேலோங்கியும் இருக்கும்.

யாழ் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்குவது, தொலைபேசிகள் வழங்குவதுகூட படையினரின் அனுமதியுடன்தான் நடத்தப்படுகிறது. இவ்வாறான சலுகைகளை யாழ் மக்களுக்கு வழங்குவது மூலம்தான் புலிகளை அவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தலாம் என்பதில் இராணுவ நலன் சார்ந்த தந்திரோபாயமும் அடங்கியிருக்கிறது.

அது தவிர யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்கிறோம் என்று கூறி வெளிநாடுகளில் அரசு உதவிகள் பெற் வேண்டுமானால் கொஞ்சமாவது யாழ்ப்பாணத்தை செப்பனிட்டாக வேண்டும்.

பிடித்த பகுதிகளில் சிவில் நிர்வாகம் கோலோச்சுகிறது என்று வெளிநாட்டுத் தூதர்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள், மற்றும் செய்தியாளர்கள் ஆகியோரை கூட்டிச் சென்று காண்பிக்கும்போதும் தொலைபேசிகள், மின்சாரம் என்பவை இருந்தால்தான் சிவில் நிர்வாகம் நடக்கிறது, அபிவிருத்தி நடக்கிறது என்று அவர்களை நம்பவைக்க முடியும்.

மின்சாரம், தொலைபேசி வசதிகள் என்ற ஆரவாரம் மத்தியில், யாழ் குடாநாட்டு மக்களின் நிவாரணத்தில் வெட்டு விழுந்திருக்கிறது.

இந்த நிவாரண வெட்டும் சிவில் அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டதல்ல. யுத்த செலவீனத்தை ஈடுசெய்ய பாதுகாப்பு அமைச்சினால் எடுக்கப்பட்ட முடிவே நிவாரண வெட்டு.

அரசின் விருப்பப்படி உள்ளாட்சித் தேர்தலில் குதித்த தமிழ்க் கட்சிகள் உடனடிப் பிரச்சனைகளை தீர்க்கத்தான் போட்டியிடுகிறோம் என்று கூறின.

நிவாரண வெட்டு மிக மோசமான உடனடிப் பிரச்சனை. இதனை தீர்த்து வைக்கவோ, தங்கள் கருத்தை அரசு ஏற்க வைக்கவோகூட இக் கட்சிகளால் முடியாமல் போனதுதான் சோகத்திலும் சோகம்.

காணாமல் போனோர் விவகாரத்தில் அரசின் அலட்சியம், காற்றில் பறந்த வாக்குறுதிகள், நிவாரண வெட்டில் அரசு காட்டும் உறுதி, செம்மணி புதைகுழி விவகாரத்தில் காட்டப்பட்ட திட்டமிட்ட தாமதம்... இவ்வாறு பல செயற்பாடுகள் அரசுமீது மட்டுமல்லாமல், அரசை ஆராதனை செய்யும் தமிழ்க் கட்சிகள் மீதான வெறுப்பாகவும் மாறிவிட்டது.

இதன் பலனை அறுவடை செய்ய புலிகள் தயாராகிவிட்டனர். யாழ் குடாநாட்டில் புலிகள் பல்வேறு ருபங்களில் மக்களோடு மக்களாக கலந்துவிட்டனர்.

ஆரம்பத்தில் புலிகள் பற்றிய தகவல்கள் படையினருக்கு கிடைத்தது போல தற்போது கிடைப்பதில்லை. எனினும் இடைக்கிடையே தகவல்கள் கிடைக்கவே செய்கின்றன.



எக்காலத்திலும் தகவல் கொடுப்பாளர்கள் இருக்கவே செய்வர். அவ்வாறான வழமை நிலையைவிட மேலதிகமாக பெருவாரியான மக்கள் தாமாக தகவல் கொடுக்கும் நிலை ஏற்படவில்லை. காரணம், இனரீதியான பிரச்சனை உள்ள நாட்டில் ஒரே இனம் சார்ந்த படையினரால் மக்களை பெருவாரியாக தம் பக்கம் திரட்ட முடியாது.

தமிழ்க் கட்சிகளையும் அரசினதும், படையினதும் அங்கமாகவே தமிழ் மக்கள் கருதுவதால் அக் கட்சிகள் ஊடாகக்கூட படையினர் தகவல்களை பெறுதல் அரிதானதாகவே இருக்கிறது.

யாழ் குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையில் பரவலாக புலிகள் ஊடுருவி விட்டனர் என்பது படையினருக்கும் தெரிந்ததுதான்.

யாழ் குருநகரில் புலிகள் 25.07.98 அன்று நடத்திய அதிரடித் தாக்குதல், இனித் தொடரப் போகும் புலிகளின் தாக்குதல்களுக்கு கட்டியம் கூறுவது போல அமைந்திருந்தது.

குருநகர் காவலரண்கள் மீதான தாக்குதல்களில் குறைந்தது 75 புலிகளாவது பங்கு கொண்டிருந்தனர்.

படகுகளில் ஒரு அணி வன்னியில் இருந்து வந்திறங்கியது. இன்னொரு அணி முன்கூட்டியே உள்ளே காத்திருந்திருக்கிறது.

கரையில் இருந்து சிக்னல் கொடுத்த பின்னர்தான் படகுகள் கரையை வந்தடைந்தன. தாக்குதல் முடிந்த பின்னர் படகில் வந்த அணி காயப்பட்ட தமது உறுப்பினர்களையும், பலியான உடல்களையும் ஏற்றிக் கொண்டு திரும்பிச் சென்றுவிட்டது.

இன்னொரு அணி ஆயுதங்களுடன் நல்லூர் ஊடாக கோப்பாய் நோக்கி சென்றுவிட்டதாகவும் அதனையறிந்து படையினர் சுற்றிவளைப்புக்கள் நடத்தியபோதும் புலிகளின் அணி எப்படியோ தப்பிச் சென்றுவிட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

குருநகர் தாக்குதலின்போது வன்னியில் இருந்து வந்த புலிகளின் அணிகளைச் சேர்ந்த சிலர் இருளில் திசை மாறிவிட்டனர். அவர்களுக்கு திசைகாட்ட யாழ்ப்பாணம் பெரிய கோவில் மணியை அடித்து ஒலி எழுப்பியபடி, மணி ஒலிக்கும் இடத்திற்கு வருமாறு தொலைத்தொடர்பு சாதனம் ஊடாக அறிவித்தாராம் பொறுப்பாளர்.

தாக்குதல் நடந்த சூட்டோடு புலிகளை குருநகருக்குள் வைத்து சுற்றி வளைக்க படையினரால் முடியவில்லை.

இத் தாக்குதலில் புலிகள் எதிர்பார்த்தளவு பலன் எட்டப்படவில்லை. படைத்தரப்புக்கு பேரிழப்பை ஏற்படுத்த முடியவில்லை.

ஆனால், புலிகளைப் பொறுத்தவரை இவ்வாறான தாக்குதல்கள் பெரும் தாக்குதல்களுக்கான ஒத்திகைகளாக அமைவதுதான் வழமை.

யாழ் குடாநாட்டில் புலிகளின் அணிகள் மூன்றுவிதமாக மக்களுடன் கலந்துறைந்துள்ளனர்.

1) உளவுப் பிரிவுனர். இவர்கள் பல்வேறு ருபங்களில் உள்ளனர்.

2) தகவல் வந்ததும் தாக்குதலுக்கு ஒன்று சேரத்தக்கதாக காத்திருப்பவர்கள்.

3) ஆயுதங்களுடன் நடமாடும் அணிகள். இவை பெரும்பாலும் படையினரின் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் தான் நடமாடித்திரிகின்றன.

தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள் மூலம் புலிகளை கண்டுபிடிக்க தீவிரம் காட்டுகிறது படைத்தரப்பு.

இத் தீவிரம் அவலை நினைத்து உரலை இடித்த கதையாகவும் கூடும். புலிகள் என்று நினைத்து அப்பாவிகளை பிடித்து புலிகளாக்கவும் கூடும்.

மினி சினிமாக்கள், கண்டும் காணாமல் விடப்படும் நீலப் படங்கள், தொலைக்காட்சி ஒளிபரப்புகள் போதை மருந்து பாவனைகள், மதுபான விடுதிகள் போன்ற கட்டுப்பாடற்ற சுதந்திரத்தால் மாணவர்கள், மற்றும் இளம் தலைமுறையின் கவனம் திசை திரும்பும் என்று கருதப்படுமானால், அது தற்காலிகமானதே. திகட்டும்போது மறுபடி அவர்கள் கவனம் இவற்றுக்கு எதிராகக்கூட திரும்பலாம்.

கெரில்லாக்கள் மையம் கொள்ளும் பூமியில் இனிமேல்தான் படையினருக்கு சவால்கள் காத்திருக்கின்றன.

●●●

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## நாரதர்

ஜயசிக்குறுய் இந்த ஆண்டுக்குள் பூர்த்தியாகக்கூடிய நிலை தென்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிக்கா, ஜயசிக்குறுய் குறுகிய காலத்தில் முடியும் என்று நினைப்பவர்கள் தப்புக்கணக்காளர்கள் என்பதுபோல கூறியுள்ளார்.

ஜனாதிபதி யாரை சாடியிருக்கிறார் என்பது தெரியவில்லை.

ஏனெனில் யுத்தப் பார்வையாளர்கள், விருப்பு வெறுப்பற்ற இராணுவ விமர்சகர்கள் மற்றும் பலர் 'ஜயசிக்குறுய்' குறுங் காலத்தில் முடிவுறும் நடவடிக்கையாக தெரியவில்லை என்றுதான் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசு, குறிப்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் போன்றோர்தான் குறுங்கால வரையறைகளை பல தடவைகள் கூறியிருந்தனர்.

ஜனாதிபதியேகூட யுத்தம் விரைவில் முடிந்துவிடும் என்று கூறியதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

தாம் கூறுவதையே பின்னர் வேறொருவர் கூறியதுபோல மறுத்துக் கூறும் போக்கையும் இன்றைய அரசாங்கத்தில் கண்டு இரசிக்க முடிகிறது.

எப்படியோ, முன்பு இருந்த உற்சாகமான எதிர்பார்ப்புக்கள் தற்போது இல்லை என்பதையும், காரணம் களநிலவரம் என்பதையும் யார்தான் அறியார்!

விரைவில் மறுபடி பருவமழைக் காலம் வன்னியில் ஏற்படப் போகிறது. அதற்குள் இலக்கை எட்ட பகீரதப் பிரயத்தனம் நடக்கலாம். அப்படி நடத்த வேண்டிய அரசியல் கட்டாயங்களும் அரசுக்கு உள்ளன. ஆனால், இந்த ஆண்டுக்குள் இலக்கு வசப்படுமா? நேர் மாறான கணிப்பே நம்மிடம் உள்ளது.



ஜயசிக்குறுய் ஓராண்டை முன்னிட்டு புலிகள் நடத்திய விழாவில் மாணவி ஒருத்தி புலிகளின் பெண்கள் அணி களத் தளபதியிடம் புலிக்கொடியை கையளிக்கிறார்.

யுத்தம் மூர்க்கமாக தொடருமானால் அதன் நெருக்கடிகள் புலிகளில் சேரவேண்டிய நிர்ப்பந்தத்தை வன்னியில் உள்ள இளம் தலைமுறையிடம் உருவாக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடிய விளைவுதான். அரசு இவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காதிருக்கிறது. வெற்றி குறித்த அதன் கனவுகளும், வெற்றியை மூலதனமாக கொள்ளும் திட்டங்களும் அரசின் கண்களை மறைக்கின்றன.

## அதிரடி அப்பாத்துரை



**கூட்டான கட்சியின்** யாழ் மாவட்ட அமைப்பாளர் சந்திரமுகராசாவாம். அண்ணர் எப்போதும் மப்பும் மந்தாரமுமாகக் காட்சி தருபவர். மினித் தேர்தல் நேரத்தில் கூட்டான கட்சி வெல்லாது என்று நினைத்து மூன்று தமிழ்க் கட்சிகளுக்காக ஒரே நேரத்தில் வேலை செய்தவர். மூன்று கட்சிகளிடமும் கிடைப்பதைப் பெற்றவராம். ஜனநாயகக் கட்சியிடம் சென்று மகளுக்கு வேலை கேட்டவராம். தனக்கு தானே விழா நடத்திய சாதனையும் உண்டாம். அளவோடு மது அருந்துவது தப்பில்லைத்தான், ஆனால் காந்தி அதையும் எதிர்த்தவர். காந்தியக் கட்சியில் பெரும்குடிமகனாருக்கு அமைப்பாளர் பதவி கொடுப்பது என்ன நியாயம்? காந்தியின் ஆன்மா மன்னிக்காது!

**"சார்க் மாநாட்டுக்கு** வந்த அயல் நாட்டு தலைவர்களைச் சந்திக்கக்கூட இப்படிக் காத்திருக்கவில்லை. கிட்டத்தட்ட ஏழு மணி நேரம் காக்க வைத்துத்தான் இந்நாட்டின் சக்தியானவரைக் காண அனுமதித்தனர். காத்திருந்து கண்களும் பூத்துவிட்டன; கால்களும் சோர்ந்தன". இப்படி புலம்பியவர் நம்நாட்டு பத்திரிகையாளர் ஒருவர். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் புலம்பவில்லை, புகைந்தனராம். எந்த நாட்டிலும் பத்திரிகையாளர்களை இப்படிக் காக்க வைத்து சந்தித்ததாக அறிந்ததில்லை என்று கூறிக் குமுறினவையாம். இதிலும் கொடுமை என்னவென்றால், பத்திரிகையாளர்களை வேன் ஒன்றில் ஏற்றியும் ஒரு மணி நேரம் காக்கவைச்சவையாம்.

**"இனப்பிரச்சனைக்கு** எங்கள் பொதியை விளக்கினோம். விரைவில் தீருங்கள் என்றார் அயலகப் பிரதமர்!" என்று ஜனாதிபதி கூறியதாக முதல் நாள் செய்தி வருகிறது. மறுநாள் "நாம் விளக்கினோம். அவர் எதுவும் பேசவில்லை!" என்று ஜனாதிபதி இன்னொரு பேட்டியளித்தார் எனச் செய்தி வருகிறது. இதில் தவறு யாருடையது? பேட்டி எடுத்தவருடையதா? அல்லது...? எல்லாமே ஒரே குழப்பம்தான்!

**வடக்கு-கிழக்கு** மாகாணத்தில் கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரி 'இரண்டு எழுத்து தலைவருடன் தனக்கு நெருக்கம், என்று கூறிக் கொண்டிருக்கிறாராம். முன்னர் வரை ரெண்டு எழுத்தாரின் சிவில் நிர்வாக விடயங்களுக்கு பயன்படுத்தினவையே தவிர, ஒரு கணக்கில் தான் வைத்திருந்தவை. தலைவருக்கு இவர் நெருக்கமும் இல்லை; நம்பிக்கையும் இல்லை. ஆட்களை எடை போடுவதில் வல்லவரல்லோ ரெண்டு எழுத்துத் தலைவர்! இவரையோ நம்புவார்?" என்று கேட்கிறார் இன்னொரு அதிகாரி. மேற்படி கல்வி அதிகாரியின் பெயர் ரிப்பேர் ஆகிக்கொண்டிருக்குது. தன் பெயருடன் ரெண்டு எழுத்தார் பெயரையும் சேர்த்து ரிப்பேராக்குகிறார். என்னாகப் போகுதோ?!

**மலையக தனித்துவத்** தலைவர் புதிதாக ஆரம்பித்த கூட்டமைப்பின் பெயரிலேயே அயலகப் பிரதமரை தனியாகச் சந்தித்து அளவளாவினவர். பேச்சுக்கு என்று தனியாக அவருக்கு மட்டும்தான் நேரமும் கொடுக்கப்பட்டது. ஏனைய தமிழ்க் கட்சிகளின் சந்திப்புக்கு விருந்து உபசாரத்தின் மத்தியில்தான் கொஞ்ச நேரம் கொடுக்கப்பட்டது. வடக்கு-கிழக்குக் கட்சிகளுக்கு உள்ள கௌரவத்தைப் பார்த்தியளோ? புல்லரிக்குது!

**கைதுகளை நியாயப்படுத்த** சில டெக்னிக்குகள் உபயோகப் படுத்தப்படுகிறதோ? என்று சந்தேகம் குடையுது. ரெண்டு எழுத்து பெண் உறுப்பினர் பலியானார். "அவர் டயரியில் பெயர் முகவரி இருந்தது" என்று பல பெண்கள் யாழில் பிடிபட்டவை. இயக்கப் பெயர்கள் ஒருவேளை டயரியில் இருக்கலாம். சொந்தப் பெயரோ முகவரிகளோ இருக்க சான்ஸ் இல்லையே? கண்டனக் குரல்கள் எழாமல் தடுக்கும் தற்காப்பு சோடனைகளோ?

**சார்க் கைதுகளை** பழம் தலைவர்கள் முதல், முன்னாள் போராளிகள்வரை நியாயமான கைதுகள் என்று நினைச்சுப்போட்டினமாக்கும். கண்டதுக்கெல்லாம் அறிக்கை விடுகிறவை, சார்க் நேரம் மட்டும் அறிக்கைகளை மடக்கி வைத்திருந்து நற்பெயர் சம்பாதித்துப் போட்டினம்.

**தனியான** சந்திப்பில் பொதிக்கு ஆதரவாகத்தான் கூட்டான கட்சியினர் அயலகத் தலைவரிடம் கதைத்தவையாம். பொதி பங்குதாரரில் ஒருவரான நீலமானரும் சேர்ந்து போன இடத்தில், சொந்த உற்பத்திக்கு மாறாக பேசவோ முடியும்? ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டாகச் சந்தித்தால் விஷயம் கசிந்து போகும் என்று தெரிந்துதான் தனியாகச் சந்திச்சவை. ஆனால் எட்டவேண்டிய இடத்திற்கு தகவல் போகாமல் இருக்குமோ?

**பத்திரிகைகளில் ஏதாவது தகவல்** பிழையாக இருந்தால் அதனை ஆதாரத்தோடு மறுத்தால் நியாயம். அரச வானொலி தமிழ் சேவை பெண்மணி பற்றி வாசகர் ஒருவர் முரசில் எழுதியிருந்தார். அதற்கு வானொலியில் பதில் சொன்ன அம்மணி, "பத்திரிகைகள் எழுதுவது பற்றி நான் கவலைப்படுவதில்லை" என்றார். அட்ரா சக்கை என்டாளாம். தனது வழக்கு ஒன்று பற்றிய செய்தியை போடும்படி முரசுக்கு ஃபோன் எடுத்து தொல்லைப்படுத்திய கதையை மறந்துபோனாராக்கும்! அவர் மறந்தாலும் தொலைபேசி பதிவு நாடாவில் அவர் குரல் இருக்கிறது.. என்ன சொல்லப் போகிறார்?

**ரெண்டு எழுத்தாரின்** பத்திரிகையில் புதுவையாரின் கவிதையில் இம்முறை புதிய ஒருவருக்கு சொல்லடி விழுந்திருக்கு. அவர் வேறு யாருமல்ல, யாழ் மாநகர பெரும் நாற்காலியில் இருப்பவர்தான்.

**முரசு, தினக்குரல் வீரகேசரி, உதயன்** எல்லாம் வியாபார நோக்கம் கொண்டவையாம். மாகாண சபை முன்னாள் அதிகார தமிழ்க் கட்சியின் பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கு. உண்மைதான்! கட்சியையே நீங்கள் வியாபார நிறுவனங்களாக மாற்றிப் போட்டியளே? அதைவிட இது பெட்டர். அதுசரி, ரியல் எஸ்டேட் பிஸினஸ், தெகிவளையில் வீடியோ கடை... இப்படியே நீளும் பட்டியலின் நோக்கம் என்ன? சமூக சேவையோ?

**இவ்வாரப் பொன் மொழி;** கடைப்பிடிக்க சற்றுக் கஷ்டமாகத்தான் இருக்கும்.

"இன்னும் கொஞ்சம் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் வரும்போது சாப்பாட்டை நிறுத்தினால் முதுமையிலும் இளமையாய் இருக்கலாம்!"


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது




யாழ் கோட்டை முற்றுகையை முறியடிக்க 'ஒப்பரேசன் போர்ட்' என்ற திட்டத்தை தீட்டியது படைத் தலைமை.

யாழ் குடாநாட்டு தீவுப்பகுதிகளில் ஒன்றான மண்டைதீவை கைப்பற்றி அங்கிருந்து முன்னேறி கோட்டை முற்றுகையை முறியடிப்பதுதான் படைத்தலைமையின் திட்டம்.

வான்படை, கடற்படை உதவியுடன் மண்டைதீவை கைப்பற்ற பலத்த முயற்சி நடந்தது.

புலிகளும் எதிர்த்து சண்டையிட்டனர். புலிகளின் பதுங்கு நிலைகளை நிர்மூலமாக்க விமானப் படையினர் பீப்பாய் குண்டுகளை போட்டனர்.

முற்றுகையை புலிகள் நீடித்துக் கொண்டிருந்தனர்.

விநாடிக்கு பத்து என்ற கணக்கில் கோட்டைக்குள் இருந்து எறிகணைகள் ஏவப்பட்டுக்கொண்டிருந்தன.

அவற்றில் பல எறிகணைகள் துல்லியமாக புலிகளின் காவலரண்களின் முன் பாகவும், அருகிலும், காவலண்களின்மீதும் விழுந்தன.

பண்ணைச் சந்தி காவலரண் சண்டையில் காயமடைந்த உறுப்பினர்கள் அந்த அகழி வழியாக கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ் கோட்டையிலிருந்து சுமார் 60 யார் தொலைவில் பண்ணைச் சந்தி காவலரண் தனித்து நின்றது.

பலமுறை அந்த காவலரணை விமானங்கள் குண்டு வீசித் தாக்கின. யாழ் கோட்டை மதிலில் இருந்து ஆர்.பி.ஜி. றொக்கட் லோஞ்சர் மூலமும் படையினர் தாக்கினார்கள்.

உக்கிரமான தாக்குதலால் பண்ணைச் சந்திக் காவலரண் புயலில் சிக்கிய கப்பல் போலாகியது.

தண்டவாளங்கள் உடைந்தன. ரயர்கள் எரிந்தன. காவலரண் பிய்ந்து விழுந்தது.

காயப்பட்ட புலிகள், அகழியூடாக கொண்டு செல்லப்பட புதியவர்கள் களின் அரணில் இருந்து 5 யார் முன்னால் உள்ள காப்பிடம் ஒன்றுவரை முன்னேறி படையினர் நிலை எடுத்துக் கொண்டனர்.

இன்னமும் ஒருமூச்சுப் பிடித்து பாய்ந்தால் புலிகளின் அரணை கைப்பற்றிவிடலாம்.

ஆனால், புலிகள் ஆவேசமாக சண்டையிடத் தொடங்கினார்கள். தங்கள் உயிர் பற்றியே கவலைப்படாமல் ஆவேச மோதல் ஒன்றை புலிகள் நடத்தினார்கள்.

அதேசமபம் விமானம் ஒன்று தாழப்பறந்து புலிகளின் அரணை நோக்கி குண்டு வீசியது.

தொடர்பு நிலையப்பகுதி ஆகியவற்றில் இருந்த பல புலிகளின் அரண்கள் சரிந்து வீழ்ந்தன.

பொலிஸ் நிலையப்பகுதியில் பிரதான புலிகளின் அரணாக நின்று, முன்னேறிய படையினரை கடுமையாக தாக்க உதவிய காவலரண் பீரங்கித் தாக்குதலால் சரிந்து வீழ்ந்தது.

இந்த அரணில் கப்டன் ஆனந்தபாபு தலைமையில் புலிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

## வீழ்த்தப்பட்ட விமானம்

புலிகளின் நிலை என்று குறி தவறி கட்டடங்கள்மீதும் குண்டுகள் போடப்பட்டன.

இருதரப்பிலும் பலர் பலியாகினர். கடும் மோதல் நிகழ்ந்தது.

எனினும் தாக்குப்பிடித்து புலிகள் சண்டையிடக்கூடிய பூகோள நிலை மண்டைதீவில் இருக்கவில்லை.

1[illegible].09.1990 அன்று அதிகாலை 5 மணியளவில் வை.12 ரக விமானம் யாழ் நகரப்பகுதிக்கு மேலாக வட்டமிட்டது.

மண்டைதீவை கைப்பற்றும் திட்டத்தை பூர்த்தி செய்யும் உக்கிரத் தாக்குதல் ஒன்றுக்காகவே வை 12 குண்டுகள் சுமந்தபடி யாழ் நகரை சுற்றியது.

ஒவ்வொன்றும் 300 கிலோ எடையுடைய குண்டுகளை வீசத்தொடங்கியது.

இறுதியில் பலத்த சண்டையின் பின்னர் மண்டைதீவை படையினர் கைப்பற்றினர். இச் சண்டையில் புலிகள் தரப்பில் 44 பேர் பலியாகினார்கள்.

மண்டைதீவில் இருந்து கோட்டையை நோக்கி படையினர் முன்னேறாமல் தடுப்பதற்காக கடற்பகுதியை நோக்கி புலிகளின் துப்பாக்கிகள் திருப்பப்பட்டன. கண்காணிப்பு செலுத்தப்பட்டது.

கடற்பகுதியால் படகுகளில் முன்னேறி கோட்டையை அண்மிக்கவும், கடற்கண்காணிப்பில் உள்ள புலிகளின் கவனத்தை கோட்டைப் பக்கம் நோக்கி திருப்பும் விதமாகவும் திட்டம் ஒன்றை தீட்டியது படைத்தலைமை.

யாழ் கோட்டைக்குள் இருந்த படையினருக்கு வோக்கி டோக்கி மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் கோட்டைக்கு அருகிலுள்ள புலிகளின் காவலரண்களை குறிவைத்து சரமாரியாக தாக்க வேண்டும்.

அப்படித் தாக்கினால் கோட்டைக்குள் உள்ள படையினர் முன்னேறி தாக்க ஆயத்தமாவதாக புலிகள் நினைப்பர். அதனை தடுக்க தம் கவனத்தை திருப்புவர்.

அவ்வாறு கவனம் திரும்பும்போது கோட்டைக்கு தெற்கே உள்ள சிறுத்தீவு என்ற இடத்தில் இருந்து படகுகளில் கோட்டையை நோக்கி முன்னேறுவதுதான் படையினரின் நோக்கம்.

அதனால் காவலரண்கள் சரிந்து விழுந்தன. அக் காவலரண்களில் இருந்த புலிகள் பலர் பலியாகினர். காயமடைந்த புலிகளை காவலரணிற்குள் இருந்து வெளியே கொண்டு செல்லக்கூட சந்தர்ப்பம் இருக்கவில்லை.

காயமடைந்தவர்கள் முனகிக் கொண்டிருக்க, பலியான புலிகளது உடல்கள் அருகே கிடக்க, அவற்றின் மத்தியில் இருந்து புலிகள் கடற் பக்கம் நோக்கி தாக்கிக் கொண்டிருந்தனர்.

ஆறு படகுகள் புலிகளின் தாக்குதலால் கடலில் மூழ்கின. ஏனைய படகுகள் கோட்டையை நோக்கி முன்னேற முடியாமல் தடுக்கப்பட்டன.

அதே சமயம் மூழ்கிய படகுகளில் இருந்து குதித்த படையினர் சிலர் கோட்டையை நோக்கி நடந்து செல்ல முற்பட்டனர்.

அவ்வாறு நடந்து சென்றவர்களை நோக்கி புலிகளது துப்பாக்கிகள் சடசடத்தன. பலர் பலியாகினர்.


புலிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து, அவர்களது காவலரண்களை கைப்பற்றும் படையினரின் முயற்சி தோல்வி கண்டது.

### காவலரண்கள்

அதனையடுத்து இரண்டு விதமான தாக்குதல் உத்திகள் மூலம் புலிகளின் முற்றுகையை உடைக்க படையினர் முயன்றனர்.

1. பொலிஸ் நிலையக் கட்டடங்கள்மீது தொடர்ச்சியான எறிகணை தாக்குதல்களை நடத்துவது.

2. தொலைத் தொடர்பு நிலையம் மற்றும் பண்ணைச் சந்தி காவலரண்கள்மீது விமானத் தாக்குதல்களையும், கோட்டையிலிருந்து பீரங்கித் தாக்குதல்களையும் நடத்துவது.




வந்து சண்டையிட்டபடி இருந்தனர்.

பலத்த தாக்குதல்களை எதிர்நோக்கியும் பண்ணைச் சந்தி காவலரணில் புலிகள் தாக்குப் பிடிப்பது எப்படி? படையினர் ஆராய்ந்தனர்.

### விமானங்கள்மீது குறி

தொலைத் தொடர்பு நிலையத்திற்கும், பண்ணைச் சந்தி காவலரணுக்கும் இடையே உள்ள தொடர்பை படையினர் கண்டுகொண்டனர்.

காவலரணில் இருந்த புலிகளின் பிடரிப் பக்கம் மோதுவது போன்ற ஒசையுடன் தாழப் பறந்து இரண்டு மூன்று தடவை குண்டுகளை வீசியது.

அப்போது நேரம் 11.15 மணி. தாழப்பறந்த விமானம் பண்ணைக் கடற்பக்கமாக சென்றது.

தாழப் பறக்கும் விமானங்களை குறி பார்த்து 50 கலிபர் துப்பாக்கிகளோடு உருமறைப்பு செய்யப்பட்ட நிலைகளில் புலிகள் சிலர் பல நாட்களாக காத்திருந்தனர்.

பீரங்கித் தாக்குதலால் வீழ்ந்த காவலரணுக்குள் ஆனந்தபாபு உட்பட அவருடன் நின்ற புலிகளும் பலியாகின்றனர்.

அதேசமயம் கோட்டை முகாம் சண்டைகளில் முக்கிய பொறுப்பு வகித்த சுரேஸ் என்பவரும் கையில் காயமடைந்தார்.

ஏற்கனவே வன்னிக் காட்டில் இந்திய படையுடனான மோதலில் சுரேஸ் தன் ஒரு கையை இழந்தவர். ஒரு கையுடன் தான் கோட்டை முகாம் முற்றுகைச் சண்டைகளில் பங்கு கொண்டிருந்தார்.

விமானக் குண்டுவீச்சுக்கள், பீரங்கித் தாக்குதல்களால் பொலிஸ் நிலையக் கட்டடங்கள் அநேகமாக உடைந்துவிட்டன. அதனால் புலிகள் அங்கு நிலை கொண்டிருக்க முடியாது.

பல காவலரண்களும் தகர்ந்தும், சரிந்தும் வீழ்ந்து விட்டன. புலிகள் பதுங்கு நிலை எடுத்து நிற்கக்கூடிய வசதிகள் இனியில்லை. எனவே இறுதித் தாக்குதல் ஒன்றை தொடுத்து முற்றுகையை உடைக்க வேண்டியதான் என்று படையினர் திட்டமிட்டனர்.

### கவச வண்டி

அன்று பிற்பகல் ஒரு மணியளவில் கோட்டை முகாமுக்குள் இருந்து இராணுவகவச வண்டி ஒன்று முன்னேறி வந்தது.

அதில் மண்மூடைகள் அடுக்கப்பட்டிருந்தன. அதன் உள்ளே பத்து இராணுவத்தினர் இருந்தனர்.

## முன்னேறிய கவச வாகனம்

### கவனம் திரும்பவில்லை

சிறுத்தீவில் இருந்து 20 விசைப்படகுகளில் படையினர் கோட்டையை நோக்கி முன்னேறினர்.

ஆனால் படையினர் எதிர்பார்த்தது போல புலிகளின் கவனம் கடற்பகுதியை விட்டு திரும்பவில்லை.

20 விசைப்படகுகள் கோட்டையை நோக்கி விரைந்து வருவதை கண்டு விட்டனர்.

படகுகளை நோக்கி புலிகளின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. அதே நேரம் சிறுத்தீவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரு கடற்படை பீரங்கிப் படகுகளும் குண்டுகளை பொழியத் தொடங்கின.



பொலிஸ் நிலையக் கட்டிடம், பண்ணைச் சந்தி உட்பட தொலைத் தொடர்பு நிலையப் பகுதிகளிலும் புலிகளின் காவல் அரண்கள் இருந்தன.

அவற்றை குறிவைத்தே கடற்படை பீரங்கிப் படகுகள் குண்டுகளை ஏவின. விமானத் தாக்குதல்களும் அப்பகுதிகளை குறிவைத்தே நடத்தப்பட்டன.

ஒரு புறம் படகுகள் முன்னேற முயற்சி;

இன்னொரு புறம் பீரங்கிப் படகில் இருந்து பொழியப்படும் குண்டுகள்;

மற்றொரு பக்கம், கோட்டைக்குள் இருந்து நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள்;

இவற்றை எதிர்கொண்டபடி தமது

பண்ணைச் சந்தியில் புலிகள் அமைத்திருந்த காவலரணை கைப்பற்றினால், கோட்டை முற்றுகையை உடைத்து விடலாம் என்பதே படையினரது நம்பிக்கையாக இருந்தது.

பண்ணைச் சந்தியில் வெட்ட வெளியில் புலிகள் கச்சிதமாக அக் காவலரணை அமைத்திருந்தனர்.

தண்டவாளங்கள், மண்முட்டைகள், ரயர்கள் கொண்டு சதுரவடிவில் பலமான காவலரணாக அமைக்கப்பட்டிருந்தது.

இக் காவலரணில் இருந்து தொலைத் தொடர்பு நிலைய காவலரணை சென்றடையத் தக்கதாக எலிவளை போன்ற தொடர் அகழியையும் புலிகள் அமைத்திருந்தனர்.

அத் தொடர்பை துண்டிக்க விமானத் தாக்குதலை உக்கிரமாக்கினர். தொடர்பை துண்டித்தால் பண்ணை பகுதி காவலரண்கள் மட்டுமல்லாமல், தொலைத் தொடர்பு நிலைய காவலரணும் சேர்ந்து விழும் என்று திட்டமிட்டனர்.

மூன்று போர் விமானங்க்ள் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியில் மாறி மாறி குண்டுகளை வீசின.

அவ்விமானங்கள் குண்டுகளை பொழிய இராணுவத்தினர் பண்ணைச் சந்தியை கைப்பற்ற முன்னேறினர்.

முன்னேறிய இராணுவத்தினரை நோக்கி புலிகள் தாக்கினார்கள். பண்ணையில் புலி

அப்படிக் காத்திருந்த புலி ஒருவருக்கு அன்று குறி அமைந்தது. கடற்பக்கம் தாழப் பறந்த விமானத்தை நோக்கி ரவைகள் பறந்தன.

விமானம் கரணமடித்து, பண்ணை வீதிக்கு கிழக்குப் பகுதியில் கோட்டைக்கு நேரே முன்னால் சுமார் ஆயிரம் யார் தொலைவில் விழுந்தது.

மறுநாள் அதன் பாகங்கள் சிலவற்றை கடற்புலிகள் கண்டெடுத்தனர்.

விமானம் வீழ்ந்ததும் பண்ணை சந்தி நோக்கி முன்னேறிய படையினர் வந்தவழியே திரும்பத் தொடங்கினார்கள்.

### மற்றொரு நகர்வு

பண்ணைச் சந்தியை கைப்பற்றும் முயற்சியை கைவிட்டு படையினர் பின்வாங்கிய அதேநேரம்:

மீண்டும் பலத்த தாக்குதல் நடத்தி கடல்வழியாக கோட்டைப் பகுதியை வந்தடைந்தனர் படையினர்.

அவர்கள் பொலிஸ் நிலைய கட்டடப் பகுதிகளில் இருந்த புலிகளின் நிலைகளை நோக்கி முன்னேறத் தொடங்கினார்கள்.

கோட்டையின் பின்புறமுள்ள கடற்கரை வீதி வழியாகவும் ஒரு பகுதியினர் செல்லத் தொடங்கினார்கள்.

புலிகள் வைத்திருந்த மிதிவெடிகளில் சிக்கி அவர்களில் பலர் வீழ்ந்தனர். அதே நேரம் புலிகளின் அரண்களில் இருந்து சரமாரியாக நடத்தப்பட்ட தாக்குதல்களால் பலர் பலியாகினர்.

மண்டைதீவில் இருந்தும், கடலில் இருந்தும் சுமார் ஒரு மணிநேரமாக தொடர்ச்சியாக நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களால் பொலிஸ் நிலையக் கட்டடப் பகுதி, தொலைத்

ருந்தன. அதன் உள்ளே பத்து இராணுவத்தினர் இருந்தனர்.

பொலிஸ் நிலையக் கட்டடத்திற்குள் உடைக்கப்பட்டுக் கிடந்த புலிகளின் காவலரணை தாண்டி உள்ளே சென்றது கவச வண்டி.

அந்த கவச வண்டியை காப்பரணாக பாவித்து இராணுவத்தினர் புலிகளின் ஏனைய நிலைகளை நோக்கி முன்னேற முயன்றனர்.

புலிகளின் எதிர்ப்புக்கு வாய்ப்பில்லை. அரண்கள் இல்லாத நிலையில் முன்னர்போல மோத முடியாது என்றே படையினர் நினைத்துக்கொண்டிருந்தனர்.

களக் காட்சி அந்த நினைப்புக்கு மாறாக இருந்தது.

உடைந்த அரண்களையே காப்பரண்களாக கொண்டு பதுங்கி இருந்தனர் புலிகள்.

கவச வாகனத்தில் வந்தவர்கள் தாக்கத் தொடங்கமுன்னரே புலிகளின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின.

அந்த உக்கிர தாக்குதலை கவச வண்டியில் வந்தோர் எதிர்பார்க்கவில்லை.

பொலிஸ் நிலைய வாசலில் ஏழு இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் கோட்டைக்குள் பின்வாங்கினார்கள். பலியானவர்களது சடலங்களையும் எடுத்துச் செல்லமுடியவில்லை.

அந்த தாக்குதல் முயற்சியும் தோல்வி கண்டது.

அதனையடுத்து அவ்ரோ விமானம் ஒன்று விரைந்து வந்தது. அதன் உள்ளே இருந்தவை ஒருவிதமான இரசாயனக் குண்டுகள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வந்தார்—சென்றார்

# வாயே திறக்கவில்லை!

அலசுவது- இராஜதந்திரி

சார்க் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் வாஜ்பேயி இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக வாயே திறக்காமல் சென்றுவிட்டார்.

இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை என்றாலும், இந்தியப் பிரதமரின் வருகையின்போது இனப்பிரச்சனை அலசப்படும் என்று கற்பனை செய்து கொண்டிருந்த தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்கும், விமர்சகர்கள் சிலருக்கும் அதிர்ச்சியை கொடுத்திருக்கும்.

தங்கள் சொந்த விருப்பங்கள், ஆசைகளுக்கு ஏற்ப கற்பனைகளையும், ஊகங்களையும் வெளியிடுவோர் தமிழ் பேசும் மக்களையும் நம்பி ஏமாறும் நிலைக்கு இட்டு செல்லுகின்றனர்.



தெற்காசியப் பிராந்தியத்தின் இன்றைய அரசியல், இராணுவ நிலவரங்கள் மற்றும் இந்திய உபகண்டத்தின் அரசியல் நிலவரங்கள் என்பவற்றை உற்று நோக்கும் எவருக்கும், இந்திய அரசு இலங்கை இனப்பிரச்சனை பற்றி சார்க் மாநாட்டு தருணத்தில் பேசமாட்டாது என்பது நன்கு விளங்கக்கூடியதேயாகும்.

சார்க் மாநாடு என்பதே ஒரு இராஜதந்திர நாடகமாகவே அரங்கேறி முடிந்திருக்கிறது.

தெற்காசியப் பிராந்தியத்தில் வல்லரசாக உள்ள இந்தியாவுக்கும், அதற்கும் சமமாக உருவெடுக்க முனையும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பிணக்கு சார்க் மாநாட்டில் தீர்க்கப்படக்கூடியதல்ல.

தெற்காசியாவில் இன்றுள்ள முக்கிய பிரச்சனையானது, இப் பிராந்தியத்தில் தளம் தேட முனையும் அமெரிக்காவுக்கும், பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கும் இடையிலான பிரச்சனையாகும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான முரண்பாடுகளை கூர்மைப்படுத்தி, அந்தப் பூசலில் குளிர்காய்வதே அமெரிக்காவின் தந்திரோபாயமாக இருந்து வருகிறது.

பாகிஸ்தானை மட்டுமன்றி, இலங்கை பங்களாதேஷ் போன்ற நாடுகளையும் இந்தியாவுக்கு எதிரான சதிவலைப் பின்னலில் சேர்த்துக்கொள்ள அமெரிக்கா முயன்றுவருகிறது.

பாகிஸ்தானை தவிர ஏனைய தெற்காசிய நாடுகள் இந்தியாவுக்கு சவால்விடக்கூடிய நாடுகளாக இல்லாவிட்டாலும், அந்த நாடுகளை தனது தளமாக மாற்றிக்கொள்வதே அமெரிக்காவின் நோக்கம்.

இலங்கையின் இனப்பிரச்சனையும் யுத்தமும் அமெரிக்காவுக்கு இங்கு இலங்கை அரசின் நலம் நாடும் நண்பனாக மூக்கை நுளைக்க சாதகமாக இருந்து வருகின்றன.

எனவே, தெற்காசியப் பிராந்திய நாடுகள் மத்தியிலான பிரச்சனைகள் என்பவை, இப் பிராந்தியத்திற்கு அப்பாற்பட்ட அமெரிக்க வல்லரசுடனும் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகும்.

இந்நிலையில் இந்திய, பாகிஸ்தான் உறவுகள் என்பவை வாஜ்பேயியும், நவாஸ் ஷெரிப்பும் புன்னகைகளை பரிமாறிக்கொள்வதாலோ, அல்லது கட்டியணைத்து கைகுலுக்கிக் கொள்வதாலோ மேம்பாடு அடைந்துவிடும் என்று கருதுவது சிறுபிள்ளைத்தனமானதேயாகும்.

முன்னர் குஜ்ரால் இந்தியப் பிரதமராக இருந்தபோதும் இந்திய-பாகிஸ்தான் உறவுகள் புதிய கட்டத்தில் பிரவேசித்துக் கொண்டிருப்பதாக விமர்சனங்கள் வெளியாகின. ஆனால் அக் கட்டத்திலும் இந்தியாவும், பாகிஸ்தானும் அணுக்குண்டு தயாரிப்பதற்கான முயற்சிகளில் ஆய்வுகள் நடத்திக் கொண்டிருந்தன.

இந்தியாவிலோ பாகிஸ்தானிலோ ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்டாலும்கூட இருநாடுகளின் உறவுகள் அந்த ஆட்சியாளர்களால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை.

சர்வதேச சூழல், அந்தந்த நாட்டு நலன், உள்நாட்டு அரசியல் நிலை, இராணுவ நிலை, போன்ற பல காரணிகள் ஒன்று சேர்ந்தே வெளியுறவுக் கொள்கைகள் உருவாகின்றன. அந்தக் காரணிகளை கணக்கில் எடுக்கத் தவறினால் ஆட்சிகள் கவிழும் நிலை உருவாகுமேதவிர, கொள்கைகள் மாறாது.

வாஜ்பேயி, நவாஸ் ஷெரீப் ஆகியோர் விரும்பினால்கூட தங்கள் நாடுகளது நலன்களுக்கு மாறான முடிவுகளை மேற்கொள்ள முடியாது.

இந்தியாவில் உள்ள காஷ்மீர் பாகிஸ்தானுக்கு உரித்தானது என்பது பாகிஸ்தானின் கௌரவப் பிரச்சனையாக மாறியுள்ளது. அதனை விட்டுக் கொடுப்பது இந்தியாவுக்கும் கௌரவப் பிரச்சனையாக உள்ளது. இப்பிரச்சனையை அமெரிக்கா நன்கு பயன்படுத்தி வருவதுடன், பாகிஸ்தானுக்கு சார்பான நிலைப்பாட்டையும் மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவும், பாகிஸ்தானும் தமக்கிடையே ஊடுருவல்கள், உளவு பார்த்தல்கள், சதிவலை விரிப்புக்கள், எல்லை மோதல்கள் போன்றவற்றில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றில் பல திரைமறைவில் நடந்துகொண்டிருப்பவையாகும்.

இந்நிலையில் சார்க் மாநாட்டில் இரு நாட்டுத் தலைவர்களும் புன்னகைத்ததும், சந்தித்ததும் இராஜதந்திர நாடகமேயன்றி நட்புக்கான ஆரம்பமோ, உறவுகளில் ஏற்பட்ட முன்னேற்றமோ அல்ல என்பது தெளிவானது.

இந்த இராஜதந்திர நாடகத்தை யாரும் உண்மை என்று நம்பியிருந்தால், அதேநாள் காஷ்மீர் எல்லையில் இரு நாடுகளும் நடத்திய மோட்டார் ஷெல் தாக்குதல்கள் அந்த பிரமையை தவிடுபொடியாக்கிவிட்டன. இந்த மோட்டார் தாக்குதலில் 50ற்கும் அதிகமானோர் இருதரப்பிலும் கொல்லப்பட்டனர். பலநூறுபேர் காயமடைந்தனர்.

மொத்தத்தில் சார்க் மாநாடு என்பது விரயமான ஒன்றாகவே அமைந்திருந்தது. சார்க் நாடுகளுக்கிடையே உள்ள பிரதான பிரச்சனைகளை சார்க் கூட்டமைப்பால் ஒதுபோதும் தீர்க்க முடியாது என்பதும் நன்கு தெரிந்த உண்மையாகும்.

சார்க் மாநாடு பற்றிய செய்திகளும், சார்க் தலைவர்களது சந்திப்பு பற்றிய புகைப்படங்களும் ஆரவாரங்களும் போலித்தனமான தோற்றத்தையே ஏற்படுத்தியுள்ளன.

இலங்கை, மாலைதீவு, பூட்டான், நேபாளம் போன்ற நாடுகளின் தலைவர், தலைவிகளுக்கு மாறிமாறி தலைமைப் பதவிகளை வழங்கி, அதனை ஏதோ பெரும் கௌரவம் போல கருதி அந்தந்த நாடுகளை போலிச் சந்தோசம் கொள்ள வைப்பது மட்டுமே சார்க் கூட்டமைப்பின் இதுவரைகால முக்கியமான சாதனையாகும்.

சார்க் மாநாடு என்ற இராஜதந்திர நாடகத்தில் பங்குகொள்வதன் மூலம் தாங்கள் சமாதானத்திற்கும் சுகவாழ்வுக் கொள்கைக்கும் மாறுபாடானவர்களல்ல என்பதை உலகுக்கு காண்பிக்கவே இம்முறை இந்தியாவும், பாகிஸ்தானும் நாட்டம் கொண்டிருந்தன.

அணுக்குண்டு தயாரிப்பின் காரணமாக தங்கள் நாடுகள்மீது ஏற்பட்டிருந்த சந்தேகங்களை போக்குவதற்கான ஓர் களமாகவே இருநாடுகளும் சார்க் மாநாட்டை இம்முறை பயன்படுத்த முனைந்திருந்தன.

சர்ச்சைக்குரிய பிரச்சனைகளை மாநாட்டில் கிளப்பாமல் வேறு பிரச்சனைகளை ஆராய்ந்து மாநாட்டை பூர்த்தி செய்வதையே இந்தியாவும் விரும்பியிருந்தது.

ஆக, இவ்வாறான சூழ்நிலையில் சார்க் மாநாட்டுக்கு வரும் பிரதமர் வாஜ்பேயி இலங்கை இனப்பிரச்சனைபற்றி பேசி புதிய சர்ச்சை ஒன்றை உருவாக்குவார் என்று நினைத்திருந்தால் அது எத்தனை பெரிய அறிவீனம்?

இலங்கை இனப்பிரச்சனை பற்றி இந்தியா கருத்துக் கூறுவதை இலங்கை அரசு விரும்பவில்லை என்பது, முன்னாள் தூதர் நாகேந்திரநாத் ஜாவின் இலங்கை விஜயத்தின்போது நன்கு புலனாகியது.

வடக்கு-கிழக்கு இணைந்த அரசியல் தீர்வு தொடர்பாக அவர் கூறிய கருத்தையடுத்து, இந்தியத் தூதரிடம் இலங்கை அரசு தன் ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது. சிங்களப் பேரினவாதிகளும் ஜாவை கண்டித்து கிளர்ந்தெழுந்திருந்தனர்.

அவ்விவகாரத்தின் முழு விபரமும் இந்தியத் தூதரகம் ஊடாக இந்திய வெளியுறவு அமைச்சருக்கும், பிரதமருக்கும் அறிக்கையிடப்பட்டிருக்கும்.

எனவே, இலங்கை அரசு விரும்பாத ஒன்றை, இலங்கை விஜயத்தின்போது தெரிவித்து புதிய பூதம் ஒன்றை கிளப்ப வாஜ்பேயி மட்டுமல்ல வேறெந்த இராஜதந்திரமுள்ள தலைவர்களும் முன்வரமாட்டார்கள்.

இலங்கை அரசு அமெரிக்காவுக்கு இங்கு அதிக இடம் கொடுக்கிறது என்பதை இந்திய உளவுத்துறை அறிந்து வைத்திருக்கிறது. அவ்விவகாரத்தில் விழிப்பாக இருந்தாலும்கூட இலங்கை அரசை பகைக்கக்கூடிய விதமாக தற்போதைக்கு இந்திய அரசு நடந்து கொள்ளாது.

சார்க் மாநாடு போன்ற இராஜதந்திர நாடகங்களில் இந்தியா தனிமைப்படாமல் இருக்க இத்தகைய உறவுகள் உதவும்.

எவ்வகையில் நோக்கினாலும் தனது நலன் என்ற கண்ணோட்டத்தில் மட்டுமே இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சனையை நோக்கும் என்பது முக்கியமான விடயமாகும்.

இந்தியாவில் தமிழக மக்களும், தமிழக அமைப்புக்கள் சிலவுமே தமிழர்கள் என்ற இன உணர்வோடும், தொடர்போடும் இலங்கை இனப்பிரச்சனையை நோக்குவார்கள். அதே உணர்வை இந்திய மத்திய அரசிடமோ, அதன் வெளிவிவகார கொள்கை வகுப்பாளர்களிடமோ எதிர்பார்க்க இயலாது.

கடந்த காலத்தில் இலங்கை இனப்பிரச்சனையில் இந்திய அரசு தலையிட்டமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருந்தன.

1. தமிழக மக்களின் எழுச்சி.

2. இலங்கையில் அமெரிக்கா தளம் காண முனைந்தமை.

தனது நலனின் அடிப்படையில் மட்டும் இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காணமுற்பட்டதுதான் இந்தியா செய்த மாபெரும் தவறாக அமைந்திருந்தது.

இந்தியா தனது நலனை பேண நினைத்தது தவறல்ல. ஆனால் தனது நலனுக்காக இலங்கைத் தமிழர்களது நலன்களை கீழ்படுத்த முனைந்ததே தவறாகும். தனது நலனையும், இலங்கைத் தமிழர் நலனையும் பாதுகாக்கக்கூடிய ஒரு தீர்வினை அன்றைய இந்திய அரசு முன்வைக்க தவறியிருந்ததே இந்தியாவுக்கு எதிரான யுத்தம் செய்யும் நிலைக்கு புலிகளையும் இட்டுச் சென்றது.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமான வடக்கு-கிழக்கை பிரிக்க வழிசெய்யக்கூடிய தீர்வொன்றுக்கு முதன் முதலில் சட்டபூர்வ வடிவம் கொடுத்ததும் இந்தியாதான்.

ஆனால், பாரதிய ஜனதா அரசின் வெளியுறவு கொள்கை வகுப்பாளரில் ஒருவரான நாகேந்திரநாத் ஜா அவர்கள், 'வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வே நியாயமானது' என சமீபத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். பாரதிய ஜனதா கட்சியும் அதே கருத்தையே கொண்டிருக்கிறது. எனினும் ஆளும் கட்சியாக இருப்பதால் இராஜதந்திர காரணங்களால் அதனை வெளிப்படையாக கூறாமல் உள்ளனர்.

இவ்வாறான நிலைப்பாட்டை அன்று ராஜீவ்காந்தியும் எடுத்திருப்பாரேயானால், துரதிஷ்டமான பிற்கால நிகழ்வுகளும், கசப்புக்களும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டிருக்கும்.

நாகேந்திரநாத் ஜா போன்றவர்கள் இன்று கூறும் கருத்துக்கள் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை கணக்கில் எடுப்பவையாக அமைந்துள்ளன.

எனினும் இந்திய அரசு ஓடி வந்து பிரச்சனைகளை தீர்த்துவைக்கும், இந்தியாதான் ஒரே இரட்சகர் என்பதுபோல அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புக்களை உருவாக்குவது தமிழ் பேசும் மக்களை அந்நியக் கரங்களை நம்பி வாழும் மனநிலைக்கே கொண்டுபோய்ச் சேர்க்கும்.

தமிழ் பேசும் மக்களிடம் நம்பிக்கைகளை வளர்த்து, அவர்களை போராட்ட பாதையில் தலைமை தாங்கிச் செல்ல வக்கற்ற தமிழ்க் கட்சிகள் 'இந்தியா வரும், அதுவும் எங்கள் முயற்சியால் வரவைப்போம். எங்களுக்கு இந்தியாவோடு நல்ல நெருக்கம் உண்டு' என்று மக்களிடம் அம்புலிமாமா கதை கூறிக்கொண்டிருப்பதுதான் வேடிக்கை.

இந்த தமிழ்க் கட்சிகளை இங்குள்ள இந்தியத் தூதரகம்கூட கணக்கில் எடுக்கவில்லை. இவர்களை நம்பி மறுபடி இந்தியா தலையிடும் என்பது கனவிலும் நிகழாத ஒன்றாகும்.

இக் கட்சிகள் வாஜ்பேயி ஒரு வார்த்தை பேசினால்கூட அதனை வைத்து தமிழ் மக்களிடம் அரசியல் வியாபாரம் செய்யலாம் என்று கனவு கண்டிருந்தன. அதற்காக ஆண்டவனிடம் பிரார்த்தனையும் செய்தன.

இந்தியப் பிரதமர் மட்டுமல்ல அந்த ஆண்டவனும் இவர்கள்மேல் கருணை காட்டவில்லை. பிரதமர் வாஜ்பேயி இவர்கள் கூறியதை எல்லாம் கேட்டாரே தவிர, ஒரு வார்த்தை பேசவில்லை.

இந்த தமிழ்க் கட்சிகளுக்கு உள்ளூர் அரசியலும் தெரியவில்லை. உலக அரசியலும் புரியவில்லை.

## வாஜ்பேயி வந்தால் பேசுவாரா?

### சர்ச்சையை உருவாக்க விரும்பாராம்!

இந்தியப் பிரதமர் வாஜ்பேயி இலங் கைக்கு விஜயம் செய்யும்போது இனப் பிரச்சனை பற்றி பேசுவார் என்று பெரிதாக எதிர்பார்க்க முடியாது என்று இந்திய வெளியுறவுத்துறை வட்டாரங்கள் கூறியுள் ளன.

இலங்கை அரசு ஏனைய நாடுகள் தலையீடுவதை விரும்பவில்லை. இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகளும் இன்றுவரை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக வலியுறுத்தவில்லை. இலங்கை அரசில் நம்பிக்கை கொண்ட கட்சிகள் போன்றே கருத்துக்கள் கூறிவருகின்றன.

இவ்வாறான நிலையில் இந்தியப் பிரதமர் இனப்பிரச்சனை தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்துக்கள் எதனையும் கூறப்போவதில்லை எனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

அதேசமயம் சில தமிழ்க் கட்சிகள் இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையை தமது விருப்பப்படி திரித்துக் கூற முற்படு[illegible]

தமிழக தலைவர் ஒருவர் 'முரசு'க்கு கருத்துத் தெரிவிக்கும்போது: "இலங்கைத் தமிழர் களுக்கு நீதியான தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்!" என்று கூறினார்.

**எதிர்ப்பும் இல்லை**

'இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர் பான பொதுக் கொள்கை ஒன்று வகுக்க வேண்டும்' என்று பாரதிய ஜனதா விரும்பு கிறதா? அப்படியானால் புலிகள் தொடர்பாக அதன் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விக்கு அவர் கூறியதாவது:

"புலிகளுக்கு எதிரான நிலைப்பாடு எதனையும் நாம் மேற்கொள்ளமாட்டோம். அதேசமயம் ஆதரவான நிலைப்பாடும் கிடை யாது. புலிகளுக்கு மட்டும் அல்ல, எந்த[illegible] தமிழ்க் கட்சியையும் நாம் [illegible]

முரசு அன்று தந்த செய்தி- ஜூன் 28-ஜூலை 04,1998

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

இந்தியப் பிரதமர் வாஜ்பேயியை சந்திக்க தமிழ்க் கட்சிகள் தனித்தனியாக நேரம் கேட்டிருந்தன. நான்கு தமிழ்க் கட்சிகளுக்கு ஒரே நேரம்தான் இந்தியத்தூதரகத்தால் ஒதுக்கப்பட்டது. தனிச் சந்திப்புக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இத்தனைக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இந்தியாவின் கடைக்கண் பார்வையை மறுபடி பெற்றுவிடும் ஆசையில் பிரார்த்தனைகள், அறிக்கைகள் விட்டு 'இந்தியாதான் தேவதூதர்' என்று புகழாத குறையாக 'ஒடுப்பட்டு திரிந்தது. அக் கட்சிக்கும் தனிச் சந்திப்புக்கு அனுமதி கொடுக்காததுதான் சோகம்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மட்டும் தனியான சந்திப்புக்கு நேரம் ஒதுக்கியது இந்தியத் தூதரகம். அதுபோல முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. போன்ற கட்சிகளுக்கும் தனியாக நேரம் ஒதுக்கித் தரப்பட்டது.

இந்த நேரம் ஒதுக்குதலில் இந்தியாவின் நீண்டகால கொள்கை ஒன்று நினைவூட்டப்பட்டது.

தமிழர்கள் மத்தியில் மிதவாதக் கட்சியான கூட்டணியை முன்னிலைப்படுத்தவே இந்தியா அன்று தொட்டு அக்கறை காட்டி வருகிறது. உதாரணங்கள் சில:

1. இலங்கையில் செயற்பாடே இல்லாமல் சென்னையில் இருந்த கூட்டணியை திம்பு பேச்சுக்கு அழைத் தது.

2. வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபையில் புலிகளுடன் கூட்டணிக்கும் சில ஆசனங்கள் ஒதுக்கியது.

3. இந்தியப் படை காலத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கூட்டணிப் பட்டியலிலும் சின்னத்திலும் போட்டியிடுமாறு மாகாண

## கூட்டான சந்திப்பும்—தூதரின் குறுக்கீடும்

சபையில் அதிகாரத்தில் இருந்த ஈ.பி. ஆர்.எல்.எஃப். உட்பட தமிழ்க் கட்சிகளை நிர்ப்பந்தித்தது.

இப்படியே பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. வாஜ்பேயியை சந்திக்க கூட்டணிக்கு தனியாக நேரம் ஒதுக்கப்பட்டதையும், ஏனைய தமிழ்க் கட்சிகளில் இருந்து இரண்டு பிரதிநிதிகளை மட்டுமே அனுமதித்துவிட்டு, கூட்டணிக்கு மட்டும் நாலுபேருக்கு அனுமதி கொடுத்து அழைத்ததையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

புலிகளின் பலம் காரணமாகத்தான் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபைக்கு புலிகளுக்கு அதிகமாகவும், கூட்டணிக்கு சிலவாகவும் அப்போது இடம் ஒதுக்கப்பட்டது. ஏனைய இயக்கங்கள் போல புலிகளும் பலவீனமாக இருந்திருந்தால் இடைக்கால நிர்வாகத்திற்கு கூட்டணிதான் தலைமை என்றுகூட அன்று இந்தியா முடிவு செய்திருக்கும். புலிகளின் பலம் இல்லாவிட்டால் கூட்டணியேகூட தனக்கு தலைமை ஸ்தானம் கேட்டிருக்கும்.

ஆயுதம் தாங்கிய இயக்கங்களை இந்தியா பயன்படுத்த நினைத்ததே தவிர, அவர்களுக்கு உரிய கௌரவம் கொடுக்க நினைத்ததில்லை.

'கெட்ட பையன்கள்' என்று ரமேஷ் பண்டாரி கூறியதும் அந்த எண்ணத்தின் எதிரொலிதான்.

இன்று முன்னாள் இயக்கங்கள் தங்கள் கொள்கைகள் அனைத்தையும் பாராளுமன்ற அரசியலுக்காக தாரைவார்த்துள்ளன என்பது மெய்தான். ஆனால் அன்றைய கட்டத்தில் தியாகத்திலும், போராட்ட பங்களிப்பிலும் இயக்கங்கள் எதனுடனும் கூட்டணியை ஒப்பிட முடியாது. ஒவ்வொரு இயக்கமும் நூற்றுக் கணக்கான தங்கள் உறுப்பினர்களை பலி கொடுத்திருந்தன.

அப்படியிருந்தும், கூட்டணியை முதன்மைப்படுத்தி ஏனைய இயக்கங்களை இளக்காரமாக நோக்கும் கெட்ட பார்வைதான் இந்திய அரசிடம் இருந்தது.

தாம் சொல்வதையெல்லாம் தட்டாமல் கேட்பார்கள். பணிவாக பவ்வியமாக நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் மிதவாத தலைவர்களை அன்று இந்தியா முன்னிறுத்த முனைய முக்கிய காரணம்.

ஆனால் இன்று புலிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் கூட்டணியின் பாணியிலேயே உள்ளன. இந்தியா எள் என்றால் எண்ணெயாக மாறி நிற்கவும் இவை தயங்கமாட்டா.

அப்படியிருந்தும் இன்றுகூட முன்னாள் இயக்கங்களான தமிழ்க் கட்சிகளை இந்தியா இளக்காரமாகத்தான் நோக்கியுள்ளது.

இவை பல பெயர்களில் பல குழுக்களாக இருந்தாலும், ரகம், தரம், குணம் எல்லாம் ஒன்றுதான் என்பதே இந்தியாவின் கணிப்பு. அதனால்தான் ஒன்றாக சந்திக்கலாம் என்று நேரம் ஒதுக்கினார்கள்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி., ரெலோ ஆகிய கட்சிப் பிரதிநிதிகளின் சந்திப்பின்போது, ஈ.பி.ஆர்.எல்.எஃப். சுரேஸ் பிரேமச்சந்திரன் சில வார்த்தைகள் பேச, பிரதமர் வாஜ்பேயி குறுக்கிட்டு: "உங்களுக்கு எத்தனை எம்.பிகள்?" என்று கேட்டாராம். "ஒன்றுமில்லை!" என்றார் சுரேஸ். அதன்பின்னர் அவர் கூறியதை காதில் வாங்காததுபோல இருந்துவிட்டாராம் வாஜ்பேயி.

இதற்கிடையே இந்தியத் தூதர் குறுக்கிட்டு; "இக் கட்சிகள் இடையே புரிந்துணர்வு கிடையாது!" என்று பிரதமருக்கு கூற தமிழ்க்கட்சி பிரதிநிதிகள் அசடு வழிந்தனர். பிரதமரின் முகம் மாறிவிட்டதாம்.

இக்கட்சிகளின் நெற்றிக்கு நேராகவே இளக்காரமாக கருத்துக் கூறுமளவுக்கு இந்தியத் தூதர் முன்வந்தது எப்படி? அந்தளவுக்கு இருக்கிறது மரியாதை.

இன உரிமைக்காக போராட்டம் நடைபெறும் மண்ணில் எம்.பி. பதவிகளை வைத்தோ, தேர்தல்களை வைத்தோ கட்சிகளின் பலத்தை கணக்கிட முடியாது. ஆனால் தமிழ்க் கட்சிகளும் எம்.பி. பதவிகளை வரப்பிரசாதமாக நினைக்கின்றன. அதனால் வாஜ்பேயியின் கேள்விக்கு எண்ணிக்கை சொல்ல முடியவில்லையே என்று சுரேஸ் வருந்த, எம்.பி. பதவி உள்ள இருகட்சிகளும் கொடுப்புக்குள் சிரித்திருக்கக்கூடும்.

தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு வேண்டுகோள்; "இந்திய மக்களை நேசியுங்கள். இந்தியாவை பூசிக்காதீர்கள். மண்டியிட்டு நின்றால் இந்திய அரசுகூட உங்களை மதிக்காது!"


படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

உண்மைத் தொடர்

அதிர் இடி 21

**கடந்தவாரம்**

**லுஸிரா சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒபேடேயின் விசுவாசிகளான இராணுவம், பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்த 800 பேரை விடுதலை செய்யப்போவதாக இடி அமீன் கூறினான். சிறை அதிகாரி அதிர்ச்சியடைந்தார். அவர் காதுகளையே அவரால் நம்ப முடியவில்லை.**

இனி....

லுஸிரா சிறை அதிகாரி கிட்டத்தட்ட ஒரு சிலை போலவே விறைப்பாக நின்றுகொண்டிருக்க, இடி அமீன் தன் வழக்கமான இடிச் சிரிப்பை உதிர்த்தான்.

**"நான் பதவி ஏற்று ஓர் ஆண்டாகப் போகிறது! அதற்கு கொடுக்கும் பரிசுதான் விடுதலை!"** என்றவன், **"அதில் பாதிப் பேரை சொர்க்கத்துக்கு அனுப்பப் போகிறேன்! ஆம், மீளாச் சொர்க்கத்துக்கு!"** என்று முடித்தபோதுதான் சிறை அதிகாரிக்கு தன் காதுகளை நம்பமுடிந்தது.

"எத்தனை பேரை சொர்க்கத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்?" என்றான் விறைப்பாக நின்ற சிறை அதிகாரி.

இடி அமீன் வெகு அலட்சியமான தோரணையில்: **"ஒரு 290 பேரை"** என்றபடி தன் மேசையில் இருந்த பட்டியல் ஒன்றை எடுத்துக் கொடுத்தான்.

அப்பட்டியலில் 290 பேரின் விபரங்கள் இருந்தன. ஒபேடேயின் தீவிர விசுவாசிகள் என்றும், மிக ஆபத்தானவர்கள் என்றும் உளவுப் பிரிவினரால் குறிப்பிடப்பட்டவர்களது பெயர்கள்தான் அதில் இருந்தன.

1971 டிசம்பர் 29ம் திகதி லுஸிரா சிறைக்குள் இராணுவ வண்டிகள் பல அணிவகுத்து நின்றன.

பட்டியலில் குறிப்பிடப்பட்ட 290 பேரும் சிறைக் கூண்டுகளைவிட்டு வெளியே கொண்டுவரப்பட்டு ஒன்றாக நிறுத்தப்பட்டனர்.

"உங்கள் அனைவரையும் நாடு கடத்தி விடுதலை செய்ய உத்தரவு. அதனால் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும்!" என்று சிறை அதிகாரி உரத்த குரலில் அறிவித்தான்.

அதனையடுத்து அனைவரது கண்களும் கறுத்த துணியால் கட்டப்பட்டது. அனைவரும் வண்டிகளில் ஏற்றப்பட்டனர்.

முன்னாலும், பின்னாலும் இராணுவப் பாதுகாப்புடன் முட்டுக்குள சிறைக்கு அனைவரும் கொண்டு செல்லப்பட்டனர்.

290 பேரில் 45பேர் அதிகாரிகள். ஏனையோர் சிப்பாய்கள்.

45 அதிகாரிகளும் தனியாக அழைத்துச் செல்லப்பட்டு, நிலத்தில் தோண்டப்பட்டிருந்த குழிகளில் நிறுத்தப்பட்டனர்.



சிப்பாய்கள் கொல்லப்படும் காட்சி

தங்களுக்கு நேரப்போகும் கதியை ஊகித்த அதிகாரிகள் பலர் மன்றாடத் தொடங்கினார்கள். தங்களை உயிரோடு விடுமாறும், அமீனுக்கு விசுவாசமாக இருப்போம் என்றும் கூறினார்கள்.

தங்கள் மனைவி, பிள்ளைகள் அநாதைகளாகிவிடுவர் என்றும் சிலர் கதறினார்கள்.

எக்குரலும் அமீனின் ஆட்களது காதில் ஏறவில்லை. அவர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருந்தனர்.

அடுத்து நிகழ்ந்தது மாபெரும் கோரம்.

குழிக்குள் நின்ற அதிகாரிகளின் உச்சந்தலைகளில் இரும்புச் சட்டங்களால் ஓங்கி அடித்தனர்.

ஒரே போடு! தலைகள் தகர்ந்தன.

குருதி சிதறி மண்ணை நனைக்க, வரிசையாக அத்தனை பேரும் மிக மிக கோரமாகக் கொல்லப்பட்டனர்.

இக் காட்சியை இடி அமீனுக்காக புகைப்படமும் எடுத்தனர்.

ஏனைய 250 சிப்பாய்களும் ஐம்பது ஐம்பது பேராக பிரிக்கப்பட்டு நிறுத்தப்பட்டனர்.

பளபளக்கும் கூரான வாட்களால் அவர்களது தலைகள் சீவப்பட்டன.

கொடூரமான இக் கொலைகளுக்கு இடி அமீன் சொன்ன காரணம்: **"தோட்டாக்களை விரயமாக்குவதை நான் விரும்பவில்லை!"**

கொல்லப்பட்ட அனைவரும் புதைக்கப்பட்டனர்.

லுஸிரா சிறையில் இருந்த மீதிப்பேருக்கு தனது ஆட்சிக்கால முதலாண்டுப் பரிசாக விடுதலை கொடுத்து பெயர் தேடிக் கொண்டான் அமீன்.



என்னதான் இரகசியமாக கொலைகள் செய்தாலும், எப்படியோ வெளியே கசிய ஆரம்பித்தன.

உகண்டாவில் நடக்கும் கொலைகள் பற்றி உகண்டா பத்திரிகைகள் வெயியிடுவதில்லை. அதனால் உகண்டா மக்களே அறியாத பல தகவல்கள் வெளிநாட்டு பத்திரிகைகளில் வெளியாகின. வெளியாகிக் கொண்டே இருந்தன.

எங்கே ஓட்டை? என்று அமீன் குழப்ப முயற்றான்.

**"என்ன, எவளை வைத்து.... கொண்டிருக்கிறாய்? இன்னமுமா யார் மூலம் தகவல் வெளியே போகிறது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை?"** என்று உளவுப்பிரிவு பொறுப்பதிகாரியை அழைத்து பாய்ந்து

## தருவது ரசிகன்

விழுந்தான் அமீன்.

அந்த உளவுப்பிரிவு அதிகாரிக்கு அன்று கெட்ட நேரம். ஏதோ சாத்தான் உள்ளிருந்து அவனை பேசவைத்திருக்க வேண்டும்.

**"நீங்கள் என்னை அவமானப்படுத்துகிறீர்கள்? பெண்கள் பின்னால் அலைபவன் நான்அல்ல!"** என்றார்.

இடி அமீன் முகம் சட்டென்று கோர முகமானது. தன் எதிரில் இத்தனை துணிச்சலோடு பேசுகிறானே என்று வியப்பும் சேர்ந்து கொண்டது.

**"நீ துணிச்சல்காரன். என் ஒரு வருட கால ஆட்சியில் இப்படி ஒரு துணிச்சல் காரனை இன்றுதான் சந்திக்கிறேன்! அதனால் உனக்கு நான் பரிசுதரப்போகிறேன்!"** என்று நகைத்த நகைப்பில் வஞ்சகம் கொப்பளித்தது.

மறு நொடியே இடி அமீனின் கையில் பிஸ்டல் இருந்தது.

அதே நொடியே அந்தப் பிஸ்டல் வெடித்தது.

'டுமீல்!'

உளவுப் பிரிவு அதிகாரியின் மார்பில் பிஸ்டல் இரத்தப் பொத்தல் போட்டது.

மல்லாந்து சரிந்து விழுந்த அதிகாரியின் அருகில் மண்டியிட்டு மிக நிதானமாக, சர்வசாதாரணமாக தோட்டா போட்ட துவாரத்தில் வாய்வைத்து இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கினான்.

அன்றே அந்த அதிகாரியின் உடல் புதைக்கப்பட்டது.

முதலாண்டு நிறைவை தன் மனைவியரில் ஒருவரான சாரா வீட்டில் கொண்டாடினான் அமீன்.

நீண்டநாட்களாக அங்கு செல்லவில்லை அமீன். ஏனைய மனைவியருடன் செலவிட்ட இரவுகள் போக, தற்காலிக காதலிகளுடன் சல்லாபிக்கவே இரவுகள் போதவில்லை.

ஆனாலும் சாரா நளினமானவள். அவனுக்கு பிடித்தமான விதத்தில் நடந்து கொள்பவள்.

அதனால் ஏனைய மனைவியரைவிட சாராவிடம் இடி அமீன் அதிக சலுகை காட்டினான்.

சாரா இன்று அவனை இறுகத் தழுவி தன்மேல் போட்டுக் கொண்டாள்.

நீண்டநாட்கள் பசியாக இருந்த தேகத்திற்கு, இன்று நிறைவான தீனி தேவைப்பட்டது.

இறுக அணைத்தபடி தன் இதழ்களாலும், கைகளாலும் எதையோ தேடினாள். இடி அமீனும் அவளிடம் தேடினான்.

தேடல் முடிந்தபோது விடிந்திருந்தது. சாராவின் கையில் ஓர் பட்டியல் இருந்தது.

**"என்ன இது?"** என்றான்.

"இதில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு தரவேண்டும்!"

**"யார் இவர்கள்? உன் காதலர்களா?"** என்று கேட்டு உரத்துச் சிரித்தான்.

"என் உறவினர்கள்! சிலர் என் சிநேகிதிகளின் கணவன்மார்!"

**"வீட்டமைச்சு என்பது இதுதானா? சரி கொடு!"** என்று வாங்கி பையில் போட்டுக் கொண்டு சென்ற இடி அமீன் அடுத்து செய்த காரியம் பயங்கரமானது.

புதிதாக நியமிக்கப்பட்ட உளவுப் பிரிவு பொறுப்பு அதிகாரியிடம் அப்பட்டியலை கொடுத்து; **"இதில் உள்ள இளம் வயதான, திருமணமாகாத ஆண்களைப் பற்றிய விபரம் உடன் தேவை! பதவி உயர்வு கொடுக்கப்போகிறேன்!"** என்றான்.

ஒரு மணி நேரத்தில் விபரம் வந்தது மூன்றுபேர் மிக இளைஞர்கள்.

மூன்று பேரும் அமீன் முன்னால் நிறுத்தப்பட்டனர்.

மூன்று பேரும் கம்பீரமானவர்கள் திட காத்திரமானவர்கள். பெண்களைக் கவரக் கூடியவர்கள்.

தங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப் போவதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர்.

"உங்களுக்கு சாராவைத் தெரியுமா?" என்று நேராகவே கேட்டான் அமீன்.

கேட்டுவிட்டு அவர்கள் முகங்களை உற்று நோக்கினான்.

"தெரியும்!" என்றனர்.

**"எப்படி, எப்படித் தெரியும்?"** என்றான் தன் தாடையை தடவியபடியே.

"அவரது ஊர்தான் நாங்களும்!"

**"ஓ.. இப்போது அடிக்கடி பழக்கம் உண்டோ?"** என்ற கேள்விக்கு, அவர்கள் முகங்களில் தோன்றிய சலனத்தை அமீன் பதிவு செய்து கொண்டான்.

அவர்கள் பதில் சொல்லத் தயங்கியதை, தடுமாறியதை எல்லாம் அளவெடுத்துக் கொண்டான்.

அமீன் தங்களை துளைப்பது போல பார்க்க, அவர்கள் படிப்படியாக பயம் கொள்ளத் தொடங்கினார்கள். பதவி உயர்வு சந்தோசம் காணாமல் போய்க்கொண்டிருந்தது.

தன் உதவியாளர்களை அழைத்த அமீன் கட்டளையிட்டான்: **"மூன்று பேரையும் பிறந்த மேனியராக்குங்கள்!"**

(இடி தொடரும்)

# இங்கும் மாத்திரை



அமெரிக்காவில் அறிமுகமான 'வயாகரா' மாத்திரைக்கு உலகெங்கும் பயங்கர மரியாதை

இளமையை திருப்பி, தாம் பத்தியத்தில் திருப்தி தரும் மாத்திரை என்றதும் ஆண்கள் பட்டாளம் எழுந்து நின்று வரவேற்கிறது.

ஆனால் பல நாடுகளில் இம்மாத்திரைகள் விற்பனை செய்வதற்கு தடை உள்ளது.

நம்நாட்டில் கூட கொழும்பில் கறுப்பு சந்தையில் இம் மாத்திரை விற்கப்படுகிறது. விலை என்ன தெரியுமா? அதிகமில்லை ஜென்டில்மேன், பத்தே பத்து மாத்திரைகள் ஆக 40 ஆயிரம் ரூபாய்.

இதில் இன்னொரு சிக்கல் யாதெனில், போலி மாத்திரைகளும் நடமாடத் தொடங்கியுள்ளனவாம்.

இலண்டனிலும் இம் மாத்திரை விற்பனைக்கு இது வரை அனுமதி தரப்படவில்லை. இரகசியமாக பெட்டி பெட்டியாக கடத்தி வந்து சில கடைகளில் விற்பனை செய்தனர்.

தகவல் அறிந்த இலண்டன் பொலிசார் லபக்கென்று பாய்ந்து கடைக்காரர்களை கைது செய்துள்ளனர்.

# தமிழக பொலிசை கலக்கும் சமாச்சாரம்



ஷீலா

இந்தியாவிலேயே முதன் முதலாக மகளிர் பொலிஸ் படையை நிறுவியது தமிழ் நாடு மாநில அரசு.

அந்தப் பெருமைக்கு சவால் விடுவது போல உருவாகியிருக்கிறது விநோத செக்ஸ் விவகாரம்.

தமிழக மகளிர் பொலிஸ் பிரிவுக்குள் சீதாலட்சுமி என்னும் பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தனக்கு கீழ் பணிபுரியும் பெண் பொலிசாரில் அழகானவர்களை விட்டுவைக்கமாட்டார்.

சலுகைகள் கொடுத்து தன் கையில் போட்டுக் கொள்வார். பின்னர் அவர்களுடன் ஓரினச் சேர்க்கை வைத்துக் கொள்வார்.

இந்த பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் வலையில் இரு பெண் கான்ஸ்டபிள்கள் மட்டுமல்லாமல், பெண் நீதிபதி ஒருவரும் சிக்கியிருக்கிறார்.

இந்த திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி தமிழக பொலிசின் மானமே கப்பல் ஏறிக் கொண்டிருக்கிறது.

சீதாலட்சுமியின் கணவர் சுந்தர் ராஜனும் பொலிஸ் உயர் அதிகாரி. அவரும் பெண் பொலிசரை தன் ஆசைக்கு தீனியாக்கி கொள்வாராம்.



செந்தமிழ்ச் செல்வி

சீதாலட்சுமியின் அந்தரங்க தோழியான ஷீலாவுடன் சுந்தர்ராஜனும் தொடர்பு வைத்திருந்ததால், ஷீலா கர்ப்பமானார். குழந்தை பிறந்தது.

"என் குழந்தைக்கு தகப்பன் சுந்தர் ராஜன்" என்று ஷீலா உரிமைப் போர் தொடுத்ததால் விஷயம் பத்திரிகைகளில் பரபரப்பாக வெளியாகியது.

சுந்தர்ராஜனிடமும், அவர் மனைவி சீதாலட்சுமியிடமும் தான் பட்ட செக்ஸ் அவஸ்தைகளை ஷீலா பத்திரிகைகளுக்கு கூறத் தொடங்க, தமிழக பொலிசில் கௌரவமானவர்கள் தலை குனிந்து நிற்கின்றனர்.

அது மட்டுமல்ல, இன்னொரு குண்டையும் தூக்கிப் போட்டுள்ளார் ஷீலா. "தமிழக பொலிஸ் மகளிர் பிரிவில் இருப்பவர்கள் ஆண் பொலிசாரின் ஆசைகளுக்கு தீனி போட இருப்பவர்கள்தான்" என்று கூறியிருக்கிறார்

"இது அபாண்டம். சீதாலட்சுமியிடம் கவனமாக நடந்துகொள் என்று கூறியும், சில சலுகைகளுக்காக அவரது உறவை நாடினார் ஷீலா. இப்போது சகலர் மீதும் பழி சுமத்துவதா?" என்று தமிழக பெண் பொலிசார் குமுறுகின்றனர்.



சீதாலட்சுமி

உயர் பொலிஸ் அதிகாரிகளிடம் சில காரியங்கள் ஆக வேண்டும் என்றால் தன் அந்தரங்க தோழிகளை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து காரியம் சாதிப்பாராம் இன்ஸ்பெக்டர் சீதாலட்சுமி.

ஷீலா, செந்தமிழ்ச் செல்வி ஆகியோர் சீதாலட்சுமிக்கு எழுதிய காதல் கடிதங்களும் மாட்டியிருக்கின்றன. சீதாலட்சுமி அவர்களுக்கு எழுதிய கடிதங்களும் சிக்கியிருக்கின்றன.

தமிழக பொலிசார் மட்டுமல்ல தமிழக மக்களும் தலையில் அடித்துக் கொள்கின்றனர்.

# மதிப்பா? மிதிப்பா?



"பெண்களை தாயாக மதிக்கிறோம்". "தெய்வமாக மதிக்கிறோம்" என்றெல்லாம் கூறும் நாடு இந்தியா. உண்மையிலேயே பெண்களுக்கு அங்குளள மரியாதையை சமீபத்தில் பாராளுமன்றத்தில் காணமுடிந்தது.

பெண்களுக்கு 31 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் சட்ட மூலம் இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் இச் சட்டத்தை எதிர்த்து ஒற்றைக்காலில் நின்றனர்.

பெண்களை தங்கள் கீழ்ப் பட்டவர்களாக நடத்தவே பெரும்பாலான ஆண்கள் விரும்புகின்றனர். பெண் விடுதலைக் கருத்துக்களை கொச்சைப்படுத்தி பேசுபவர்களும் இவர்கள்தான்.

பெண் விடுதலை என்றால், ஆண் புடவை தேய்ப்பது, சமைப்பது என்று அர்த்தம் என கிண்டலடித்து தங்கள் ஆதிக்க உணர்வை மறைப்பதும் இவர்களே. குறிப்பாக தன்னம்பிக்கை இல்லாத ஆண்கள் பெண்களின் சுதந்திரத்தை விரும்பமாட்டார்கள். தங்களை ஓரம் கட்டிவிடுவார்களோ என்று பயம்.

இந்திய சினிமாக்களிலும் பெண் விடுதலையை கொச்சைப் படுத்தி பெண்களை அடிமைப்படுத்தக்கூடிய கருத்துக்களையே புனிதமாக காட்டுகிறார்கள்.

இந்திய பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தங்கள் தரத்தை தாழ்த்திக் கொண்டனர்.

இந்தியப் பத்திரிகைகள் பல எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பை கண்டித்து ஆசிரியர் தலையங்கங்கள் தீட்டியிருந்தன.

"பெண்ணை தெய்வமாக மதிக்க வேண்டாம், சக மனுஷியாக மதித்தால் அதுவே போதும்!" என்று கூறியுள்ளன முற்போக்கு பெண்கள் அமைப்புக்கள்.

# வித்தியாசப் படம்



பிரிட்டனில் வீடியோ பார்த்தவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

விவகாரமான வீடியோ படமாக இருக்குமோ? என்று நீங்கள் எண்ணக்கூடும்.

அவர் பார்த்தது வித்தியாசமான வீடியோபடம். ஒரு பெண் முட்டைப் பூச்சி, தவளை மீன், பல்லி ஆகியவற்றை தனது காலால் நசுக்கிக் கொல்லும் காட்சிகளைக்கொண்ட வீடியோ படத்தைத்தான் கண்டு களித்தாராம்.

அகோரமான மனிதத் தன்மையற்ற காட்சிகளை கண்டு களித்ததாக அவர் கைதானார். நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது.

நீதிபதி விதித்த அபராதம் எவ்வளவு தெரியுமா? ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்.

அபராதம் கட்டிய தொழிலாளியின் பெயர்: செய்ருட். வயது 44.



படிப்பகம்

www.padippakam.com



# ஏலம்போன பேனா

படத்தில் இருப்பது சாதாரண பேனாதான், ஆனால் மிகப் பழைய பேனா. 1930ம் ஆண்டில் தயாரான பேனா. அதனால் அதன் விலை இன்று எக்கச்சக்கம்.

சமீபத்தில் இப்பேனா ஏலம்போட்டபோது பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் வாங்கினார். என்ன விலை கொடுத்தார் தெரியுமா? 16 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்.

பழையது என்பதால் பாரம்பரிய கலைப்பொருட்களாகி பயங்கர விலை போயிருக்கிறது!

# எதை எழுதும்



இந்தப் பேனாவால் உங்கள் தலை எழுத்தையே தீர்மானிக்க முடியும். உங்கள் வாழ்க்கைக் கதைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

என்னடா, புதுரகமான பேனாவாக இருக்கிறதே என்று ஆச்சரியப்படு கிறீர்களா?

இது பேனாவே அல்ல பேனா வடிவத்தில் உள்ள குட்டித் துப்பாக்கி. நீளம் எட்டு சென்றி மீட்டர். இதன் குண்டு பதினைந்து மீட்டர் வரை பாயக்கூடியது.

பல்கேரியாவில் 40 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. இனி யாராவது உங்கள் முன் பேனாவை உருவினால் ஜாக்கிரதையாக இருங்கள்.

# தாவும் மனிதர்



உயரமான கட்டடங்களைக் கண்டால் உடனே இவருக்கு கை, கால்கள் குறுகுறுக்கும் அதனால் இவரை 'ஸ்பைடர்மேன்' என்று ஃபிரான்ஸில் அழைக்கிறார்கள். இவரது பெயர்; அலெய்ன் ரொபர்ட்.

ஒபிலிக்ஸ் நகரின் புகழ்பெற்ற பண்டைய கோபுரம் டிலாகன் கார்டி. அந்தக் கோபுரம்மீது எவ்வித உபகரணமும் இல்லாமல் சரசரவென்று ஏறி சாதனை படைத்திருக்கிறார். இமயமலை உச்சிவரை எவ்வித உபகரணமும் இல்லாமல் ஏறி முடிப்பதுதான் இவரது இலட்சியமாம்.



# நிறைவேறாத ஆசை

நிறைவேறாத ஆசையோடு செத்துப்போனால் ஆவியாக சுற்றிக்கொண்டு திரிவார்கள் என்று சிலர் நம்புவதுண்டு. இந்த மூடநம்பிக்கை அமெரிக்காவில் இருப்பவர்களையும் விட்டுவைக்கவில்லை.

நியூயோக்கில் 'ரே' என்பவருக்கு 'பென்ஸ் கார்' ஒன்று வாங்க வேண்டும் என்று கொள்ளை ஆசை. கார் வாங்கமுன்னரே காலன் அவரது உயிரை வாங்கிக் கொண்டான்.

அவர் இறந்தபின்னர் அவரது சகோதரர் டேவிட் தனது அண்ணனுக் காக கட்டிய கல்லறைதான் இது. தன் அண்ணனின் நிறைவேறாத ஆசையை நிறைவேற்ற கார் வடிவில் பெரும் செலவில் இந்த கல்லறையை அமைத்துள்ளார். செலவு இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர்கள். நம்மூர் மதிப்பில் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய்கள்.




# கருங்கல்லில் செதுக்கியது

இது பியானோ வாத்திய வடிவில் கட்டப்பட்ட கல்லறை. அமெரிக்காவைச் சேர்ந்த மச் வேர்ட் என்பவர் பிரபல பியானோ வாத்தியக் கலைஞர். மக்களைக் கவர்ந்தவர்.

அவர் இறந்த பின்னர் 25 தொன் எடையுடைய கருங்கல்லில் தத்ரூபமாக பியானோ போல் வடிவமைத்து இக்கல்லறையை உருவாக்கினார்கள். பியானோ வைக்கப்பட்டிருக்கும் கல்லறை மேடை வெள்ளைக் கல்லினால் செய்யப்பட்டது. இதன் எடை 12 தொன்.

# பந்துடன் தூங்குகிறார்



பந்துக்கு நினைவுச் சின்னமா? என்று நினைக்காதீர்கள். பந்து விளையாட்டு வீரருக்கு நினைவுச் சின்னம்.

அமெரிக்கா சிக்காக்கோவின் 'பேஸ் போல்' விளையாட்டுப் புலி வில்லியம் ஹால்பேர்ட். தான் இறந்து போனால் கல்லறையை பந்து போல அமைக்குமாறு கூறியிருந்தாராம். மறந்துவிடாமல் அப்படியே அமைத்துவிட்டனர்.



# இது யாருக்காக?

ராக்கெட் ஒன்று மண்ணிலிருந்து விண்ணுக்கு விசுக்கென்று கிளம்புகிறதா? என்று நினைக்க வேண்டாம். இதுவும் மண்ணில் நிரந்தரமாக உறங்குபவருக்காக கட்டப்பட்ட கல்லறைதான்.


செய்மதிகளில் இருந்து பூமிக்கு அனுப்பப்படும் படங்களை வர்ணப்படங்களாக வடிவமைப்பவர் கார்ல் பிக்ஸ்பி. அமெரிக்க ஹொலிவூட்டைச் சேர்ந்தவர்.

இவர் இறந்த பின்னர் 'அட்லஸ் ரொக்கெட்' என்ற செய்மதி போன்று இவரது கல்லறையில் அமைத்துள்ளனர்.

# ஆடி அழிந்தவர்

வாழ்க்கையை சீட்டாட்டம், சூதாட்டம், மது, மங்கை என்று கரைத்துக் கொண்டவர் பெடபேர்ட்ஹீ.

சீட்டாடியும் சூதாடியும் பணத்தையும் கரைத்தார். இறுதியில் அந்தக் கவலையிலேயே உயிரையும் துறந்தார். அவர் இறந்தபின்னர் அவரது மனைவி கட்டிய கல்லறை இது. சீட்டாடி, சூதாடி வாழ்க்கையை தொலைத்தவர் இங்கு உறங்குகிறார். என்பதை கல்லறையைக் காண்பவர்கள் அறியட்டும். அவர்களாவது இத்தப்புக்களை செய்யாதிருக்கட்டும் என்பதற்காகத்தான் இந்தக் கல்லறை.




## தகவல் பெட்டி



# பற்றறி தேவையில்லை

டோர்ச் லைட்டின் பற்றறியின் சக்தி தீர்ந்துவிட்டதே என்று இனிக் கவலைப்பட வேண்டியதில்லை.

சூரியச் சக்தியால் இயங்கக்கூடிய டோர்ச் லைட் ஒன்று ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. மின் சக்தி தீர்ந்துவிட்டால் வெயிலில் பிடித்தால் போதும், சக்தி சேமிப்பிற்கு வந்துவிடும். பற்றறி வாங்கவேண்டும் என்ற கவலையே தேவையில்லை. செலவும் மிச்சம்.



படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

* மலையாள சூப்பர் ஸ்டார்களான மம்முட்டி-மோகன்லால் இணைந்து நடிக்க, பாஸில் இயக்கும் படம் ஒன்று தமிழில் தயாராகவுள்ளது. இப்படத்தில் முக்கிய வேடத்தில் பிரபு நடிக்க இருக்கிறார்.

* பி.வாசு இயக்கத்தில் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'பொண்ணு வீட்டுக்காரன்' படத்தில் கதாநாயகி ப்ரீதா விஜயகுமார். ஆனால் சத்யராஜிற்கு ஜோடியாக கௌரவ வேடத்தில் குஷ்பு நடிக்கிறார்.

* தமிழில் வெற்றி பெற்ற 'ஆஹா' படம் தெலுங்கில் தயாராகி வருகிறது. தெலுங்கில் ஜெகபதிபாபு-சங்கவி நாயகன்-நாயகியாக நடிக்கும் இப்படத்தை நடிகர் நாகார்ஜுனா சொந்தமாகத் தயாரித்து வருகிறார்.

* சுரேஷ்-ஊர்வசி நடித்த 'நானும் ஒரு இந்தியன்' படம் நீண்ட நாட்களாக வெளியாகாமல் உள்ளது. (நம்மூரில் இதன் வீடியோ கசெட் எப்போதோ வந்துவிட்டது) இப்போது இப்படம் 'மாலினி' என்ற பெயர் மாற்றம் பெற்று விரைவில் வெளியாகவுள்ளது.

* 'சங்கராபரணம்', 'சிப்பிக்குள் முத்து' 'சலங்கை ஒலி' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் தெலுங்கு இயக்குநர் கே.விஸ்வநாத். கமலின் 'குருதிப் புனல்' படத்தில் நடித்த இவர் தற்போது 'சாமி கொடுத்த வரம்' படத்தில் ப்ரீதாவுக்கு அப்பாவாக நடிக்கிறார்.

* 'பந்தா' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் டயானா, அந்தப்படம் வெளிவருவதற்கு முன்பே 'தாலாட்ட வருவாளா' என்ற புதிய படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக ரஞ்சித் நடிக்கிறார்.

* மணிரத்னம் இந்தியில் இயக்கிய 'தில்சே' படம் தமிழில் 'உயிரே' என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது. ஷாருக்கான்-மனிஷா கொய்ராலா நடிக்கும் இப்படத்தில் ஷாருக்கானுக்கு அரவிந்தசாமியும், மனிஷா கொய்ராலாவுக்கு சுஹாசினியும் தமிழில் பின்னணி பேசுகிறார்கள்.

* 'துள்ளித் திரிந்த காலம்' படத்திற்குப் பின் அருண்குமார் கதாநாயகனாக நடிக்கும் படம் 'கண்ணாலே பேசவா' இப்படத்தை இயக்குபவர் ராஜ் கண்ணன் என்ற புதுமுக இயக்குநர்.

* நக்மா குடும்பத்தில் இருந்து அவரது சகோதரிகள் ரோஷினி, ஜோதிகா ஆகியோர் சினிமாவில் நுழைந்தது போல் இப்போது மாலாஸ்ரீ, சுபாஸ்ரீயைத் தொடர்ந்து சினிமாவில் நுழைபவர் லேகாஸ்ரீ. இவர் 'மனைவிக்கு மரியாதை' படத்தில் அறிமுகமாகிறார்.

* 'மணமகள் தேவை' இது ஜெயராம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படமொன்றிற்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர். இப்படத்தை மணி வண்ணனிடம் உதவி இயக்குநராக இருந்த கருப்பையா என்பவர் இயக்குகிறார்.

## 'நட்புக்காக' சிம்ரான் நெருக்கம்–நக்மா பொறாமைப்படுவார்


சரத்குமாருக்கு மற்றொரு சூப்பர் ஹிட் படம் 'நட்புக்காக'. திரையிடப்பட்ட இடமெல்லாம் வசூலை அள்ளுகிறது.

சரத்குமாருடன் தயவு தாட்சண்யம் இல்லாமல் ஒட்டி நடித்துள்ளார் சிம்ரான். நக்மா பார்த்தால் பொறாமைப்படும் அளவுக்கு சிம்ரான் சரத்குமாரை புரட்டி எடுத்திருக்கிறார். விஜயகுமாரின் நடிப்பு சரத்குமாரையே பல இடங்களில் ஓரம்கட்டி விடுகிறது. 'நாட்டாமை' படப்பாணியில் இருவரும் இணைந்து தூள் கிளப்பியுள்ளனர்.

விஜயகுமார் நடிக்க இருந்த வேடத்தில் முதலில் சிவாஜி தான் நடிக்க இருந்தார். பின்னர் சரத், ஜெயலலிதா மோதல் காரணமாக சிவாஜி ஒதுங்கிக்கொண்டார்.

சன் ரி.வி. படத் தேர்வில் ஜீன்ஸ் படத்தை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்தில் வந்துள்ளது நட்புக்காக.

சரத்குமார் இரட்டை வேடத்தில் நடித்தால் சூப்பர் ஹிட் என்ற செண்டிமெண்டை இப்படமும் காப்பாற்றியிருக்கிறது.



சரத்குமார்-சிம்ரான்
படம்: நட்புக்காக



முரளி-சுவலட்சுமி-சிவாஜி
படம்: என் ஆச ராசாவே

## உரிமை...

இந்த ஆண்டு கவிஞர் ...
விழா கொண்டாடப்பட்...
துறப்பதாக அறிவித்த...
யார் இவருக்கு க...
தார்கள். இப்போ...
என்று அதற்கும் கி...
எதிர்த்தரப்பு.
பிறந்தநாள்...
வைரமுத்து ...
னார்: "வ...
கவிஞர்க...
வதைவி...
யும் ...
என்...

## மேல்நாட்டு மருமகள்!

இலண்டன் சென்ற விஜய் தமிழக அரசின் கலைமாமணி விருதைப் பெற தமிழகம் வந்தார். முதல்வர் கருணாநிதியிடம் விருதைப் பெற்றுக் கொண்டு மறுபடி இலண்டன் பறந்துவிட்டார்.

தன் மகனுக்கு இலண்டனில் கிடைத்துள்ள மருமகள் பற்றி இயக்குநர் சந்திரசேகரன் புகழ்ந்து தள்ளுகிறார்.

"தமிழ்ப் பண்பாடு மாறாத மருமகள். இப்படியான ஒரு பெண் என் மகனுக்கு மனைவியாக வருவது பெரும்பாக்யம்!" என்கிறார்.

## தாய்க்குல லொள்ளு!

முகப்பில் பலூன்களுடன் களையாக காட்சி தருபவர் சுவாதி. அஜித்குமாரின் முன்னாள் காதலி. பின்னர் விக்னேஷ் போன்ற இளம் நாயகர்களையும் காதலித்தார். விஜய் சுவாதி இருவரும் ஒரு கட்டத்தில் ராசியாக இருந்தனர்.

சமீபத்தில் படப்பிடிப்பு ஒன்றில் பகிரங்கமாகவே சுவாதியின் அம்மா சொன்ன விஷயம்: "இன்னைக்கு வேணுமானா அவன் பெரிய ஆளா இருக்கலாம்! ஆனா அன்னிக்கி என் மகளின் காலுக்குள் சுத்தி சுத்தி வந்தவன்தானே" என்று கூறினாராம். அவர் சொன்னது விஜய் பற்றி என்றதும் படப்பிடிப்பில் இருந்த சிலர் கொதித்துப்போக, தகராறு ஆகிவிட்டதாம்.

அதனால்தான் 'புத்தம் புதுபூவே' படத்தில் இருந்து சுவாதிக்கு கல்தா கொடுத்து விட்டனர். இப்போது 'பொன்விழா' என்றொரு படத்திலும் சுவாதியின் தாய்க்குலம் செய்யும் லொள்ளு தாங்க முடியவில்லையாம். சுவலட்சுமிக்கு இப்படத்தில் முக்கிய பாத்திரம்.

"சுவலட்சுமி என்ன பெரிய அழகியா? கார்த்திக் கூட என்ன பண்ணினான் என்று தெரியாதா? கார்த்திக் நம்ம வீட்டில் கிடந்தவன் தானே!" என்று பலரின் காதுபடவே பேசுகிறாராம். 'பட்டும் அறிவுவரவில்லையே' என்று விஷயமறிந்தோர் முணுமுணுக்கிறார்கள்.

## வீட்டுச் சாப்பாடு

'என் உயிர் நீதானே' படத்தில் பிரபுவுடன் தேவயானி நடிக்கிறார். படப்பிடிப்பு இடைவேளைகளில் தேவயானியை தன்னுடனேயே வைத்திருந்து அறுக்கிறார் பிரபு. அதுமட்டுமல்ல பிரபுவுக்கு வரும் வீட்டுச் சாப்பாட்டைத்தான் தேவயானியும் சாப்பிடுகிறார்.

இளைய திலகம் தன்னுடன் நடிக்கும் நடிகைகளின் அன்பை சம்பாதிப்பதில் வல்லவர். அதிலும் வாட்டசாட்டமாக இருக்கும் நடிகைகள் என்றால் தனி அன்பு செலுத்துவாராம்.

## இரத்த வாச...

'தர்மா' வெளியாகி...
விஜயகாந்த் புகுந்து...
ப்ரீதா விஜய...
சூடேற்றுவதற்கா...
ஏன் நடிக்க ...
மிகப் பிரம...
இசை: இளை...
முரட்டு...
ரஞ்சித். இ...
அவர் ...
அதிக...



## சமாதானப்பேச்சு

சுந்தர்.சி.யின் 'நாமிருவர் நமக்கிருவர்' படத்தில் இருந்து இடை நடுவே கழற்றிவிடப் பட்டவர் ரம்பா.

சுந்தருடன் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சனைதான் படப்பிரச்சனையாகி ரம்பா கழற்றப்பட்டார். அதனால் சுந்தரின் காதலி குஷ்பு மகிழ்ந்தார்.


சுந்தர் தன்னை மிரட்டியதாக நடிகர் சங்கத்தில் புகார் செய்தார் ரம்பா. இதெல்லாம் பழைய கதையாகப் போகிறது. ரம்பா என்ன பண்ணினாரோ, ஏது பண்ணினாரோ சுந்தர் மறுபடி ரம்பாவுடன் சமாதானமாகிவிட்டார். சுந்தரின் இயக்கத்தில் ரம்பா ஒரு படத்தில் விரைவில் நடிக்க உள்ளாராம். குஷ்புதான் வயிற்றில் நெருப்பைக் கட்டியது போல் அலையப் போகிறார்.

வினிதா
படம்: விடிவெள்ளி

## கா...
## பு...

'கி...
தின் ...
மார் ...
நிமிர்...
போது...
கார்த்...
படத்தி...
பெயர்...
விலே.
க...
நடந்த...
முழுக்...
பாண...
படத்...
தாரிற...
பாடட்...
படங்...
தற்பே...
நடிக்...
ராசா...
இயக்...
இ...
நியாய...
போ...
தயார...
இப்ப...
மாண்...
ளது.

முகப்பில் ...
ப்ரீதா விஜ...
படம்: 'காதல் ...
சுவா...



விஜய்-கௌசல்யா
படம்: ப்ரியமுடன்

www.padippakam.com

## குரல்

...ரமுத்து பிறந்தநாள்
...கவியரசு பட்டத்தை
...வைரமுத்து.
...ரசு பட்டம் கொடுத்
...எதை துறக்கிறார்?
...டல் பண்ணியுள்ளது

...ழாவில் பொன்மணி
...மைக்குரல் எழுப்பி
...ா வருஷம் ஆண்
...கே சிறப்புச் செய்
...பெண் கவிஞர்களை
...ரவிக்க வேண்டும்!"
...கூறினார்.

## விஜய் காட்டிய பிடிவாதம்

நடிகர் விஜய்-சங்கீதா திருமண அறிவிப்பின் பின்னணி பற்றி பல தகவல்கள் வெளியாகி வருகின்றன.

விஜய்யின் காதலுக்கு முதலில் தந்தை சந்திரசேகர் ஒப்புக்கொள்ளவில்லை. 'இப்போது கல்யாணம் நடந்தால் இமேஜ் போய்விடும்' என்று கூறினாராம்.

'போனால் போகட்டும் காதல் தான் முக்கியம்' என்று கூறிவிட்டார் விஜய்.

தானே தனியாக இலண்டன் போய் சங்கீதாவை கல்யாணம் செய்யப்போவதாக கூறிவிட்டார் விஜய்.

இலண்டனில் சங்கீதா வீட்டில் விஜய்மீது நம்பிக்கை இல்லை. "நடிகர்தானே உன்னை ஏமாற்றிவிடுவார். நம்பியிருக்காதே" என்று கூறிவிட்டனர். விஜய்யிடம் ஃபோனில் அழுதிருக்கிறார் சங்கீதா. அதன்பின்னர்தான் படப்பிடிப்புக்கு இலண்டன் வரும்போது நிச்சயதார்த்தம் நடக்கும். யார் தடுத்தாலும் நடக்கும்! என்று உறுதியாக கூறிவிட்டாராம் விஜய்.

இனிமேலும் மகனை கட்டுப்படுத்த முடியாது என்ற கட்டத்தில்தான் மனம் மாறினார் சந்திரசேகர். மகனுடன் இலண்டன் சென்று சங்கீதா குடும்பத்தினருடன் பேசினார்.

காதல் கல்யாணம் என்றால் விஜய் ரசிகைகள் கோபப்படுவார்கள் என்பதால் 'பெற்றோர் பார்த்து நடந்த ஏற்பாடு' என்று வெளியே சொல்ல முடிவெடுகப்பட்டதாம்.

நிச்சயதார்த்தம் என்று அறிவித்தாலும்கூட கல்யாணமே நடந்து முடிந்துவிட்டது. சங்கீதாவுடன் தேனிலவையும் முடித்துவிட்டுத்தான் திரும்புகிறார் விஜய் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

## மாணவி மயக்கம்

விஜய் ரசிகைகள் பலர் அவரது திருமண அறிவிப்பால் கலங்கிப் போயிருக்கிறார்கள்.

விஜய் திருமண அறிவிப்பை பத்திரிகையில் படித்த சென்னை அண்ணா நகரைச் சேர்ந்த மாணவி ஒருவர் தூக்கமாத்திரை சாப்பிட்டு விட்டாராம். உடல் நிலை மோசமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பல ரசிகைகள் கண்ணீர் விட்டு கடிதம் எழுதியுள்ளார்களாம்.

## கார்த்திக் தாமதம்

'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படப்பிடிப்புக்கு தாமதமாகவே வந்து கொண்டிருந்தார் கார்த்திக். இயக்குநர் விக்ரமன் பொறுமை இழந்துபோனார்.

ஒரு நாள் தாமதமாக வந்த கார்த்திக்கை மேக் அப் போட வைத்து இரண்டு மணி நேரம் காத்திருக்கச் செய்து பழிவாங்கினாராம் விக்ரமன்.

## காதோடு சொல்லுகிறோம்

'குமார' நடிகர் காதல் சோகத்தில் புட்டியுடன் அலைகிறார். அவரை தேறுதல்படுத்த சில குட்டிகளும் பின்னால் அலைகின்றனவாம். பட்டினத்தார் போல தத்துவம் பேசுகிறாராம் 'குமார' நடிகர்.

**வி**னோதமான நடிகையை தொழிலதிபர் ஒருவர் வசமாக ஏமாற்றிவிட்டார். திருமணம் செய்வதாகக் கூறி அவருடன் ஜாலியாக இருந்த காட்சிகளை வீடியோவில் இரகசியமாக பதிவு செய்துவிட்டாராம். இவ்விவகாரம் நடிகைக்கு துபாய் நண்பர் ஒருவர் மூலம் தெரியவந்துள்ளதாம். அந்த நண்பர் முன்னர் வினோதினியுடன் நட்பாக இருந்தவர் என்பதால் தகவலை உடன் தெரிவித்தாராம். நம்பிக்கைத் துரோகி என்று தொழிலதிபரை திட்டுகிறார் நடிகை. கொடுத்த பணத்துக்கு வட்டியும் முதலுமாக கறந்துவிட்டார் தொழிலபர்.

**தி**லக வாரிசு நடிகர் சிகரெட், மது இரண்டையும் விட்டுவிட்டார் என்ற தகவலை, அவரது முன்னாள் காதலியான 'பூ' நடிகைமிடம் கூறினார்களாம். அதற்கு 'பூ' நடிகை என்ன கூறினார் தெரியுமா? 'லேடீஸ் விஷயத்தை மட்டும் இன்னமும் தொடர்கிறாரே அதையும் விட்டா அவர் உத்தம புருஷன்தான்.' என்றாராம்.

**மூ**ன்றெழுத்து 'மு' நடிகரின் காதல் விவகாரத்தை அறிந்த மனைவி, அவரைக் கண்காணிக்க ஆள் வைத்திருக்கிறாராம். நடிகரின் உதவியாளர் ஒருவருக்கு மனைவி தனியாக பணம் கொடுத்து தகவல் சேகரிக்கிறார். இதனால் நடிகரின் ஒவ்வொரு அசைவும் மனைவிக்கு தெரிந்துவிடுகிறது. மிக, இரகசியமாக நடிகர் மேற்கொள்ளும் 'அந்த மாதிரியான' சமாச்சாரங்கள் மனைவிக்கு தெரிய வருவதால், குறுக்கு விசாரணை நடக்குமாம். தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கிறார் நடிகர்.

**"மா'** நடிகையை எப்படியாவது அடைந்தே தீருவேன்" என்று சபதம் போட்டிருக்கிறாராம் 'சர' நடிகர். "அதையும்தான் பார்க்கலாமே. அவர் வீரம் எனக்கா தெரியாது" என்று பதில் சவால் விட்டுள்ளார் நடிகை.

**ரா**ஜாவுக்கு எதிர்ப்பால் பெயர் கொண்ட கவர்ச்சி நடிகை வாய்ப்புத் தேடி கிளு கிளு தம்பதியின் உதவியை நாடியுள்ளாராம். அவர்களும் தமது வீட்டில் நடக்கும் ஸ்பெசல் கேளிக்கைகளில் நடிகையை அழைத்து, அறிமுகப்படுத்த வேண்டியவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய முறையில் அறிமுகப்படுத்தி வருகிறார்களாம்.

**வெ**ற்றி காந்தமான நடிகரை அவரது பல படங்களுக்கு வசனம் எழுதிய 'லியா' ஏமாற்றிவிட்டாராம். காசோலை மோசடி செய்தாராம். செமத்தியாக நாலு சாத்து சாத்தி முகத்தில் இரத்தக் களரி விளைவித்துவிட்டு விரட்டிவிட்டாராம் நடிகர்.

**கா**தல் கோட்டை நாயகிக்கு ஏகப்பட்ட படங்கள் கைவசம் இருக்கின்றன. அதனால் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட படப்பிடிப்புக்களுக்கு செல்ல முடியாமல் தவிக்கிறார். அது தவிர பிரபலங்களின் துரத்தலும் தொடர்கிறதாம்.

## தேனிலவுப் பயணம்

புதிதாக திருமணமான கௌதமி தன் கணவனோடு தேன்நிலவை சுவைக்க அமெரிக்கா பறந்துவிட்டார்.

இன்னொரு புதுமணமகள் நடிகை ரஞ்சிதா தன் இராணுவக் கணவரோடு அசாம் போய்விட்டார். அங்குதான் அவருக்கு தேன்நிலவு இனிக்கப் போகிறது.



பிரபு-மீனா
படம்: மனம் விரும்புதே உன்னை

## ...ந்திக்கின் ...ய படம்

...க்கு வாசல்' படத்
...ம்தான் கார்த்திக்
...கெட மறுபடி
...நின்றது. இப்
...ன்னொரு கிழக்கு
...நடிக்கும் புதிய
...சூட்டப்பட்டுள்ள
...கிழக்கு செவக்கை

...நாயகி தேர்வு
...கொண்டிருக்கிறது.
...முழுக்க கிராமிய
...ல் தயாராகும் இப்
...இயக்குவது கஸ்
...ஜா. 'நாட்டுப் புறப்
...' போன்ற வெற்றிப்
...ளை இயக்கியவர்.
...து சிவாஜி, முரளி
...ம் 'என் ஆச
...வ' படத்தையும்
...வருபவர்.
...: இளையராஜா.
...தராசு, இனியவளே
...ற படங்களை
...த பட நிறுவனம்
...த்தையும் பிர
...மாக தயாரிக்கவுள்



விஜயகாந்த்
படம்: கள்ளழகர்

திரையுலக மறுபக்கம் 66

## சிம்ரானின் புயல் வேகத் தாக்குதல்
## டிஸ்கஷனுக்கு சென்ற நடிகை

'கண் எதிரே தோன்றினாள்' படப்பிடிப்பு கம்பியூட்டர் நிறுவனம் ஒன்றில் நடந்து கொண்டிருந்தது. மூன்று நாட்கள் தொடர்ச்சியான படப்பிடிப்பு.

மூன்றாம் நாள் ஹீரோ பிரசாந்த் வரவில்லை. சிம்ரான் சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்கினார்கள்.

மூன்றுபக்கம் கறுப்பு கண்ணாடித் தடுப்பு போடப்பட்ட, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறை ஒன்றை சிம்ரானுக்கு ஒதுக்கி இருந்தனர். அந்த அறையில்தான் சிம்ரானுக்கு நெருக்கமான இரண்டு துணை நடிகைகளும் தங்கி இருந்தனர்.

ஒவ்வொரு காட்சி எடுத்து முடித்த பின்னரும், தன் அறைக்குச் சென்று உடை மாற்றுவார் சிம்ரான்.

அந்தச் சமயங்களில் தன்னை யாரோ கவனிப்பது போன்ற ஒரு பிரமை சிம்ரானுக்கு. யாரோ கண்ணாடித் தடுப்புக்கு வெளியே நின்று தான் உடைமாற்றுவதை கவனிப்பது போல அசைவுகளும் தெரிந்தன.

தனது மனப்பிரமையாக்கும் என்றுதான் நினைத்தார் சிம்ரான். மூன்றாம் நாளும் உடை மாற்றும்போது அதே பிரமை.

ஆனால், இப்போது கூர்ந்து பார்த்தபோது பிரமை அல்ல, உண்மையாகவே கண்ணாடித் தடுப்புக்கு அப்பால் ஓர் உருவம் அசைவது நன்கு தெரிந்தது.

சிம்ரானின் தோழிகளான இருவரும் 'அங்கே பார்' என்று குரல் கொடுக்க, புயல் வேகத்தில் கதவைத் திறந்து வெளியே பாய்ந்தார் சிம்ரான்.

சிம்ரான் கண்டுபிடித்துவிட்டார் என்று தெரிந்து அந்த உருவம் தப்பியோடத் தொடங்கியது.

### ஆவேசம்

சிம்ரான் 'பிடி அவனை' என்று குரல் கொடுத்தபடி ஆவேசமாகத் துரத்த படப்பிடிப்பு குழுவில் உள்ளவர்களும் சேர்ந்து துரத்தினர்.

மாட்டிக்கொண்டது அந்த உருவம். அதன் சட்டையை பிடித்து இழுத்த சிம்ரான் பளார் பளார் என்று கன்னத்தில் அறைந்ததுடன், காலாலும் உதைத்தார்.

சிம்ரானின் ஆவேசம் கண்டு அனைவரும் திகைத்து நின்றனர். பின்னர் 'நீங்க தள்ளுங்க மேடம்' என்று கூறிவிட்டு தம் பங்குக்கு அந்த ஆசாமியை மொத்தி நார் நாராக பிய்த்துவிட்டனர்.

அந்த ஆசாமி வேறு யாருமல்ல, குறிப்பிட்ட கம்பியூட்டர் கம்பனியின் முக்கிய அதிகாரிகளில் ஒருவராம்.

சிம்ரானின் உடல் அழகைக் காணும் ஆசையில், கறுப்பு கண்ணாடியில் ஒரு இடத்தில் மட்டும் உள்ளே பார்க்கக்கூடிய வசதியை முன்கூட்டியே செய்து வைத்திருந்தாராம்.

எதையெல்லாம் பார்த்துத் தொலைத்தாரோ? என்று கடும் சீற்றத்தில் இருக்கிறாராம் சிம்ரான்.

எப்படியோ இந்த விவகாரம் பத்திரிகைகளுக்கும் தெரிந்து பரகசியமாகிவிட்டது. 'எத்தனை பெரிய மனிதருக்கும் இத்தனை சிறிய குணமிருக்கு' என்பதற்கு அந்த அதிகாரியும் உதாரணம். நடிகைகள் என்றால் பெரும் புள்ளிகளும் ஜொள்ளு விடுகிறார்கள்.

"காணாத ரகசியத்தை காணவந்த கண்ணனுக்கு நானாக முகம் தருவேன் நாள் முழுவதும் — அந்த ரகசியம் தெரிந்துவிடும் உன் முழுவதும்"

### இரண்டு இலட்சம்

இன்றைய இரண்டு எழுத்து ஹீரோயின் அவர். எப்படியாவது அவரை அடையவேண்டும் என்று துடித்தார் ஒரு தொழிலதிபர். தேக்குமரம் வளர்த்து விற்பனை செய்யும் கோடிக்கணக்கான ரூபாய் முதலீட்டு திட்டத்தை அறிவித்த தொழிலதிபர் அவர். பல நடிகைகளுடன் அனுபவப்பட்டவர்.

இரண்டெழுத்து நடிகையின் சமீபத்திய படம் ஒன்றை பார்த்தார். குடும்பக்கட்டுப்பாட்டு வாசகம் போல பெயர் உள்ள அப்படத்தில் கட்டுப்பாடு இன்றி கவர்ச்சி காட்டி இருந்தார் நடிகை.

அப்படத்தில் நடிகையின் உடல் அழகைக் கண்ட பின்னர் தொழிலதிபருக்கு தூக்கம் போச்சு. நடிகைக்கு தூதுமேல் தூதுவிட்டார்.

நடிகையின் தாய்க்குலம் அரசியல் கட்சி ஒன்றில் செல்வாக்கான மூப்பான தலைவரின் அன்பை பெற்றவர். அதனால் நடிகையை மிரட்டி பணிய வைக்கமுடியாது.

பணிய ஆசை காட்டினார். ஒரு மணிநேரம் மட்டும் 'டிஸ்கஷன்' பண்ண வருவார். இரண்டு இலட்சம் கொடுக்க வேண்டும் என்று நடிகை தரப்பு கண்டிஷன் போட்டது. சம்மதித்தார் தொழிலதிபர். இரண்டு இலட்சத்தை களையாக எண்ணிக் கொடுத்த பின்னர்தான் டிஸ்கஷனுக்கு சென்றார் நடிகை.

தொடர்ந்து கறக்கக் கூடிய தொழிலதிபர் என்பதால் நடிகையும் நுட்பமாக நடந்துகொண்டார். தொழிலதிபருக்கு திகட்டாத டிஸ்கஷன்.




விஜயகாந்த்-ப்ரீதா விஜயகுமார்
படம்: தர்மா

## தாங்க முடியாத தேவ தீர்ப்புக்கள்

வெள்ளைச் சேலைக்குள்
காதலை மறைத்து-அவன்
கனவுகளைத்
தாண்டிப் போனாய்;
தேவ தீர்ப்புக்களைத்
தாங்கமுடியாது தேவி!
-o-
தங்க உலகொன்றில்-நீ
கிரீடம் சூடுவதற்காக
உன் மௌனத்தால்
அவன் மனதில்
ஆணிகளை அறைந்து
அதன்மீது
விரல் ஊன்றி நடந்தாய்!
-o-
ஆலய வளவுக்குள்ளே
உனது வாழ்க்கை
சுற்றிவரத் தீர்மானித்த பின்
ஒப்பாரியின் தலைவாயில்கள்
அவன் மனதினுள்ளே
அகலத் திறந்தன!
-o-
வாழ விரும்பாதவனை-நீ
வழிமறித்து நின்றாய்;
சாவை வேண்டியவனிடம்
சத்தியம் கேட்டு நின்றாய்;
எதற்காகப் பெண்ணே
வசப்படாத வாழ்வை நோக்கி
அவனை வழி நடத்தினாய்!
-o-
தேவி...!
அவன் விழிகள் பார்த்து
அன்று ஏன் அழுதாய்?
தவிக்கும் உனது காதலைக்
கண்டு தடுமாறியவனை-உன்
துறவுக் கோலத்தால்
தூர நிறுத்தி வைத்தாய்!
-o-
பாலை வனமொன்றில்
அவனது வாழ்க்கை
அலைகையில்
சாபமிடப்பட்ட
தீர்த்தமாக
உனது அன்பு
எட்டி நிற்கிறது;
தேவ தீர்ப்புக்களைத்
தாங்க முடியாது தேவி!
-o-
வெண்ணிற மலர்களையும்
ஆராதனை மணியோசையையும்
தலைக்குமேலாக
ஆனந்தமாகப் பறந்து செல்லும்
சோடிப் பறவைகளையும்
சந்திக்கும் பொழுதெல்லாம்
உனது நினைவுகளால்
அதிர்ந்து அழுகிறான்!
-o-
உயர்ந்து நின்று
தலையசைத்திடும்
தேவதாரு மரங்களினிடையே-நீ
திருவசனங்களை
மீட்டி மீட்டி
மன அமைதியை வேண்டிப்
போராடித் திரிகிறாய்!
-o-
கடினமான முடிவுகளை
காலம் கட்டாயப்படுத்தி
உனக்குத் தந்ததுவோ!
வாழ்வின் கனவுகளுக்குள்
வாழப் பிரார்த்தித்தவனின்
வாழ்க்கை சிதைந்த காயத்தைக்
காலம் ஆற்றுமோ தேவி?

பஹீமா ஜஹான்- மெல்சிரிபுர.

# இது ஒரு வரலாற்றுப் பாடம்




ஒரு வரலாற்று நிகழ்வு இங்கே பதிவாகியுள்ளது. பல்லாயிரம் உயிர்களின் சாவுக்கு காரணமானவர்கள் நண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாம் உலகப்போரில் ஜெர்மன் ஹிட்லரும், இத்தாலிய முசோலினியும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் மாதிரி செயற்பட்டு உலகை சல்லடையாக்கினார்கள்.
1945 ஏப்ரல் மாதத்தில் இத்தாலி வீழ்ந்தது. முசோலினியும் அவன் சகாக்களும் கைது செய்யப்பட்டு தலைகீழாக கட்டித் தொங்க விடப்பட்டனர்.
அதிகாரம் கண்ணை மறைக்க ஆணவத்துடன் தலைகீழாக நடந்தவர்களை காலத்தின் கரங்கள் தலைகீழாக கட்டி தொங்க விட்டது தான் சர்வாதிகாரத்திற்கு கிடைத்த பாடம். இடமிருந்து மூன்றாவதாக தொங்குவது தான் முசோலினி. அருகில் அவரது மனைவியும் தொங்குகிறார். சர்வாதிகாரிகளை வரலாறு மன்னிப்பதுமில்லை. மறப்பதுமில்லை!

## தொலைத்துவிட்டேன் எனது பெயரை...!

தொலைத்துவிட்டேன்
எனது பெயரை
முதல்
எழுத்துக்களுடன்!
**
வாலிப
வெள்ளத்தால்
அடித்துச் செல்லப்பட்டது
**
இளமை
விளையாட்டுக்கள்,
பருவத்து
அத்துமீறல்கள்,
இமாலயத் தவறுகள்
ஆகின'
**
கண்ணனின்
விளையாட்டுக்கள்
லீலைகளாய்ப்
போற்றப்பட்டது!
அதையே
நான் செய்ததால்
ரவுடித்தனமானது!
**
தொலைந்தது
எனது பெயர்
**
அண்ணலும் நோக்கி
அவளும் நோக்கியதால்
அது காவியமானது.
அண்ணலும் நோக்கி
அவள் அப்பரும்
நோக்கியதால்
இது!
காவாலித்தனமானது!
**
இந்த
தவறுகளைகூட
செய்யவில்லை
என்றால்?
வாலிபம்
நம்மைப் பாதது
சிரிக்காதா?

இணுவையூர்
உத்திரன்.

## அனுபவம் புதுமை

உன் பெயர்
வடிக்கத்
துடிக்கும்
என் பேனா...

உன் கைக்குள்
கைக்குட்டையாகும்
மனம்!

நிலவுக்கும்
என்மேல்
கொஞ்சம் கோபம்,
உன்னால்..

நிமிடத்துள்
நூற்றாண்டையே
பிரசவிக்கும்
உன் கண்கள்!

வாழ்விலும்
புதிராகும்
உன் அசைவுகள்

இனி..
என்னையே
தொலைத்துவிட்டேன்
உன் நினைவுகள்
தொலையாமல்!

இணுவையூர்
இராகுலன்.

## புதுவித ஆசை

எனக்கொரு ஆசை
காலியிலிருந்து...
கொழும்பு வரும் பேரூந்தில்
நானோ...
நெற்றியில் திருநீறிட்டு...
"சிவ...சிவா" என்றே...
செப்பியே வர வேண்டும்!
••
எனக்கொரு ஆசை
செக்பொயிண்டில்
தமிழர்கள் என்றவுடன்
"போங்கள்" என்று
ஆணையிட வேண்டும்!
••
எனக்கொரு ஆசை
"முன்னால் இறக்கம்" என்று
மினிபஸ்ஸில் சொல்லி...
இறங்க வேண்டும்!
••
எனக்கொரு ஆசை
'கிரிக்கெட்' வருணனையைத்
தூயத் தமிழில்
கேட்டு இன்புற வேண்டும்!
••
எனக்கொரு ஆசை
எங்கள் பகுதித் தலைவர்கள்
எமக்காகவும் கொஞ்சம்
பாடுபடுவதை(ப்)
பார்க்க வேண்டும்!
••
எனக்கொரு ஆசை
தன்மானத் தமிழ்க் கட்சி...
ஒன்றையாவது...
ஆயுள் முடியுமுன்னே..
அறிந்திட வேண்டும்!
••
இன்னுமொரு ஆசை
இந்தக் கவிதை
முரசில்
வந்தாக வேண்டும்!

சோ. ஸ்ரீதரன்-
பொகவந்தலாவை.

## தேன் கிண்ணம்



## புதுமை!

பனிப்பூவின்
பார்வைகள்,
சுடுவது புதுமை!

தென்றலின் விரல்கள்
தீய்ப்பது புதுமை!

எறும்பினைக்
கரும்புகள்
எதிர்ப்பது புதுமை!

பகலினில்
இருளொன்று,
படர்ந்தது புதுமை!

இதயத்தில்
முள்ளொன்று,
மலர்ந்தது புதுமை!

என் நினைவுகள்
அவளை மறந்தால்
அதுவும் புதுமை!

ஈச்சையூர் சிவா.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். ஜெஸ்மின்
வயது: 18
முகவரி:
13, வாக்கொல்லவத்தை,
பறகஹதெனிய, வேவுட.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்:
ஜீவராணி,
வயது: 19
முகவரி:
எல்/3, நவகம்புர,
கொழும்பு-13
பொழுது போக்கு:
பத்திரிகை, பேனாநட்பு.

## இந்த வாரம் உங்கள் பலன்

(09.08.1998 தொடக்கம் 15.08.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- கடன் தொல்லை, பொருள் நட்டம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பொருள் வரவு. | பிப. | 2 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, முன்னேற்றம். | காலை | 7 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | பகல் | 12 | மணி |
| சனி- காரிய சித்தி, மனக்குறை நீங்கும். | முப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, வெளியிடப் பயணம். | காலை | 7 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | பிப. | 2 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, இனசன விரோதம். | பிப | 1 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை | 9 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- காரிய சித்தி, மனத் தைரியம். | காலை | 6 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவுமிகுதி. | பிப | 2 | மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செல்வாக்கு. | காலை | 7 | மணி |
| திங்கள்- தெய்வானுகூலம், காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை | 6 | மணி |
| புதன்- பெரியோர் சகாயம், தேகசுகம் பாதிப்பு. | பிப | 2 | மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், பொருள் இழப்பு. | காலை | 9 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-8

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பிப | 2 | மணி |
| புதன்- துயரம் நீங்கும், பண வரவு. | காலை | 7 | மணி |
| வியாழன்- வெளிமிட வாழ்க்கை, செலவு அதிகம். | முப. | 10 | மணி |
| வெள்ளி- இனசனச் சேர்க்கை, மனச்சஞ்சலம். | பகல் | 11 | மணி |
| சனி- தெய்வ தரிசனம், மன அமைதி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, மனக்கவலை நீங்கும். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- காரியக் கேடு, பணச் செலவு. | காலை | 6 | மணி |
| வெள்ளி- மனக் குறை நீங்கும், கௌரவம். | பிப. | 2 | மணி |
| சனி- முயற்சி பலிதம், அதிகார விருத்தி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பிப. | 2 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், இல்லச் சிறப்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், உறவினர் சேர்க்கை | காலை | 7 | மணி |
| புதன்- காரியத் தடை, பொருள் நட்டம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- மனக் குறை நீங்கும், பெரியோர் நட்பு. | காலை | 7 | மணி |
| வெள்ளி- தனலாபம், பொருள் விருத்தி. | பிப. | 2 | மணி |
| சனி- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### நவக்கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் - சூரியன், புதன், வெள்ளி.
சிம்மம் - இராகு.
கும்பம் - கேது.
மீனம் - வியாழன்.
மேடம் - சனி.
மிதுனம் - செவ்வாய்.
12.08.98- கடகராசியில் செவ்வாய்.
சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், மனச்சோர்வு நீக்கம். | பகல் | 12 | மணி |
| புதன்- துன்பம் நீங்கும், புத்துணர்ச்சி. | பிப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், இல்லச் சிறப்பு. | காலை | 7 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| சனி- முயற்சித் தடை, மனக் குழப்பம். | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, குடும்ப சுகம். | பிப | 2 | மணி |
| திங்கள்- வெளிமிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பிப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், உறவினர் உதவி. | காலை | 7 | மணி |
| புதன்- வீண் சந்தேகம், மனச் சஞ்சலம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை | 8 | மணி |
| வெள்ளி- இனசன விரோதம், நண்பர்கள் தொல்லை. | பகல் | 11 | மணி |
| சனி- துயர் நீங்கும், மன அமைதி. | காலை | 9 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பிப. | 1 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, தொழில் விருத்தி. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், கௌரவம். | பிப. | 3 | மணி |
| புதன்- வீண் குறைகேட்டல், மனச் சஞ்சலம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | பிப. | 2 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, இனசன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், முயற்சித் தடை. | காலை | 6 | மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், மனத் துயர். | காலை | 8 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளிமிட வாழ்க்கை, செலவதிகம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- முயற்சி வெற்றி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- கடன் தொல்லை நீங்கும், மனநிம்மதி. | காலை | 7 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, தெய்வானுகூலம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | காலை | 7 | மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, அதிகார விருத்தி. | காலை | 7 | மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும் பொருள் வரவு. | பகல் | 11 | மணி |
| சனி- அந்நியர் தொல்லை, பொருள் இழப்பு. | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, பொருள் வரவு. | பிப. | 2 | மணி |
| திங்கள்- பயனற்ற செயல், பணச் செலவு. | காலை | 8 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனச்சோர்வு. | காலை | 7 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனத் தைரியம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- உறவினர் வருகை, இல்லச் சிறப்பு. | பிப. | 1 | மணி |
| சனி- முயற்சித் தடை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

## மூக்கு கண்ணாடி

### பாவனை யோசனைகள்



**க**ண்ணுக்குக் கண்ணாடி உபயோகிக்கும்போது கவனிக்க வேண்டியவை:

* கண்ணாடியைக் கழற்றிக் கண்ட இடத்தில் வைக்காமல், அதற்குரிய பெட்டி அல்லது கவருக்குள் வையுங்கள்.

* கழற்றி வைக்கும்போது கண்ணாடிப் பகுதி கீழ்ப்பக்கமாக இருந்து விடக்கூடாது. அவ்வாறு இருந்தால் கண்ணாடியில் உராய்வு ஏற்பட்டுவிடும்.

* கண்ணாடி அடிக்கடி போட்டுக் கழற்றுவதால் சற்று விரிவடைந்து போய் விடும். கண்ணாடியை மடக்கும் பாகத்தில் இருக்கும் 'ஸ்குரூ'வை இறுக்குவது மூலம் அதைச் சரி செய்யலாம். இதற்காக கண்ணாடிக் கடைக்குத்தான் செல்ல வேண்டும் என்றில்லை. தையல் மெஷினுடன் கிடைக்கும் சிறிய 'ஸ்குரூ' ட்ரைவரை அதற்குப் பயன்படுத்தலாம். இல்லாவிட்டால் அதற்கென்று ஒரு ஸ்குரூ ட்ரைவரை வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

* அலுவலகத்தில் வைத்தோ, பயணத்தின் போதோ கண்ணாடி உடைந்துவிட்டால் 'செலோ டேப்'பைப் பயன்படுத்தி லேசாக ஒட்டிப்பயன்படுத்தலாம். அதற்காக நீள வாக்கில் முழுமையாக ஒட்ட வேண்டியதில்லை. உடைந்த பாகத்தின் ஓரத்தை மட்டும் ஒட்டினால்போதும். புதிய கண்ணாடி வாங்கும் வரை சில நாட்கள் அதைப் பயன்படுத்தலாம்.

* சவர்க்கார் நீர் அல்லது வினிகர் சேர்த்த தண்ணீரால் கண்ணாடியைக் கழுவிப் பயன்படுத்துங்கள். இல்லாவிட்டால் பிரேமுக்குள் அழுக்கு சேர்ந்துவிடும்.

## பற்கள் பளீரிட....



✿ பற்கள் வெண்மையாக, பளீரென்று பளிச்சிட உலர்ந்த பிரிஞ்சி இலையைப் பற்களில் நன்கு தேய்க்கவும். பிறகு வழக்கம் போல் பற்பசையால் பல் துலக்குங்கள். பற்கள் பளீரென்று மின்னும்.

✿ பொடி உப்பைக் கொண்டு, வாரம் ஒருமுறை பற்களைத் தேய்த்தால் பற்கள் பளபளக்கும்.

✿ பற்களில் மஞ்சள் நிறக் கறை படிந்திருந்தால், பஞ்சில் சிறிதளவு ஹைட்ரஜன் ஃபெரொக்சைட்டை நனைத்து, நன்கு பிழிந்துவிட்டு, பின்னர் தேய்த்து வரவும். கொஞ்சம் கொஞ்சமாகப் பற்கள் வெண்மை நிறம்பெறும்.

## பார்வை பதமாக

○ கண்பார்வை நன்றாக இருக்க, சூரியன் உதிக்கும் நேரத்தில், தினமும் விடியற்காலையில் இளம் சூரியனைப் பார்த்து வர வேண்டும்.

○ கண்கள் சோர்வடைந்து காணப்பட்டால் ஒரு அகன்ற பாத்திரத்தில் குளிர்ந்த நீரை நிரப்பி, ஒரு கரண்டி தூள் உப்பைச் சேர்க்கவும். பின்னர் முகத்தை அந்த நீரில் முழ்கவைத்து, கண்களை மூடி முடித் திறந்தால், கண்கள் புத்துணர்வு பெறும்.

○ பெண்களுக்கு கண்களைச் சுற்றிக் காணப்படும் கருவளையம் முக அழகைக் குறைக்கும். அதை நீக்குவதற்கு மஞ்சள் தூளும், தேங்காய் எண்ணெயும் உதவுகிறது. தேங்காய் எண்ணெயில் மஞ்சள் தூளை நன்கு குழைத்துக் கண்களைச் சுற்றியும் பூசி பத்து நிமிடங்களுக்குப் பிறகு குளித்து வர கருவளையம் மாறிவிடும்.

○ சிறிதளவு பஞ்சை, பன்னீரில் நனைத்து, கண்களின்மேல் அரைமணிநேரம் வைத்திருந்தால், கண்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

○ கண்களுக்கு மஸ்காரா போடும்போது, மேல் நோக்கிப் போட வேண்டும். ஒரே தடவையாகப் போட்டால் பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. கொஞ்சமாக எடுத்து, இரண்டு, மூன்று தடவையாக எடுத்துப் போட்டால்தான் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

○ இரவு படுக்கப்போகுமுன், கண் இமைகள் மற்றும் புருவங்களில் விளக்கெண்ணெய் தடவி வந்தால் முடி கருகருவென்று வளரும்.

## மேக் அப்பிற்கு முன்...



❀ முகத்திற்கு மேக்-அப் செய்வதற்கு முன் ஒரு துண்டு ஐஸ் கட்டியை எடுத்து, முகம் முழுவதும் நன்கு தேய்த்து, உலர்ந்தபின் மேக்-அப் போட்டால், நீண்ட நேரம்வரை அழியாமல் இருக்கும்.

❀ முதுகுப் பகுதியில் வெய்யில் படும் இடங்களில் கறுத்துக் காணப்படும். அந்தக் கருமையைப் போக்க, எலுமிச்சம் பழத் தோலை முதுகுப் பகுதியில் தேய்த்து, அரைமணிநேரம் ஊறிய பிறகு குளிக்கவும். நாளடைவில் கருமை நிறம் மாறிவிடும்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் (47)

**நே**பாளம் சென்ற டயானா அங்கு பிரபலமான ஒருவருடன் தங்கியிருந்து இரவைக் கழித்ததாக இலண்டன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

நேபாளம் சென்ற டயானாவை காண அங்குள்ள பிரபலங்கள் பலர் சென்றனர். அதில் சிலர் டயானாவின் மனதைக் கவரும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

நடுத்தர வயதைத் தாண்டிய பெரும் தனவந்தர் ஒருவர் டயானாவை மரியாதையாக கன்னத்தில் முத்தமிடும் சாட்டோடு, டயானாவின் பின்புறத்தை தட்டிக்கொடுத்தார்.

இதேபோன்ற சங்கடங்களை பல தடவைகள் சந்தித்த அனுபவம் உள்ளதால் அவரை நாசூக்காகத் தவிர்த்தார் டயானா.

தனது நேபாள விஜயம் தொடர்பாக வெளியான தகவலால் அதிர்ச்சியடைந்தார் டயானா.

அதனால் நேபாள விஜயத்தை சுருக்கமாக முடித்துக்கொண்டு இலண்டன் திரும்பினார்.

சாள்ஸ்ஸின் நண்பர் ஒருவர்தான் மேற்படி செய்தியின் பின்னணியில் இருந்தார் என்பதை டயானா அறிந்துகொண்டார்.

தனது பெயரைக் கெடுக்க ஒரு பெரிய கூட்டமே திட்டமிட்டு வேலை செய்கிறது என்பதை டயானா புரிந்துகொண்டார்.

டயானா தைரியசாலி - என்றாலும், அடிக்கடி ஊசலாடும் மனம் கொண்டவராக இருந்தார்.

"அரச குடும்பத்தையும், தன் உடமைகள் அனைத்தையும் துறந்துவிட்டு இரவோடு இரவாக எங்காவது ஓடிவிடலாமா? என்றும் யோசிக்கிறேன்!" என்று தன் நண்பிகளிடம் இடைக்கிடையே கூறுவார்.

பின்னர் திடீரென்று: "நான் ஏன் திருடி போல் ஓடவேண்டும்? நான் யார் என்பதை இவர்களுக்குப் புரியவைக்கிறேன்!" என்றும் கூறுவார்.

"டயானா தங்க முட்டையிடும் வாத்து. அதனைக் கொல்ல முடியாவிட்டாலும் மனதைப் புண்படுத்துவதில் அவ்வப்போது அரச குடும்பத்தினர் ஓரளவு வெற்றி கண்டனர்," என்று டயானாவின் நண்பிகள் கூறுகின்றனர்.



வியக்கப்பட்ட ஜோடிப் பொருத்தம்

### இந்திய விஜயம்

1992ம் ஆண்டின் முற்பகுதியில் சாள்ஸ், டயானா இருவரும் இந்தியாவுக்கு விஜயம் செய்தனர்.

இந்த விஜயத்தின் போதும் இருவரும் இரு துருவங்களாகவே காணப்பட்டனர்.

இந்திய விஜயத்தின்போது நடைபெற்ற ஒரு சம்பவம் டயானாவின் மனதையும், அவர் சாள்ஸ்மீது எத்தகைய வெறுப்பைக் கொண்டிருக்கிறார் என்பதையும் எடுத்துக்காட்டியது.

இந்தியாவில் உள்ள காதல் சின்னமான தாஜ்மஹாலைப் பார்வையிட சாள்ஸ்-டயானா தம்பதியை அழைத்துச் செல்லத் திட்ட மிடப்பட்டிருந்தது.

ஆனால் டயானா அதற்கு மட்டும் கண்டிப்பாக மறுத்துவிட்டார். "தனியாகத் தான் செல்லுவேன்!" என்று கூறிவிட்டார்.

அதன்படியே டயானாவைத் தனியாக அழைத்துச் சென்றனர். தாஜ்மஹால் முன்பாக தனியாக நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

சாள்ஸ்சுடன் இணைந்து சென்று அந்தக் காதல் சின்னத்தைக் களங்கப்படுத்த விரும்ப வில்லை.

காதலிக்காகக் கட்டப்பட்ட தாஜ்மஹாலின் முன்னால், தன் மனைவிக்கு உயிரோடு கல்லறை கட்ட நினைக்கும் ஒருத்தரோடு செல்ல எப்படி மனம் வரும்?

அதனால்தான் டயானா பிடிவாதமாக-தனியாகச் சென்று புகைப்படம் எடுத்திருந்தார்.

தாஜ்மஹால் முன்பாக சாள்ஸ்சுடன் டயானா இணைந்து புகைப்படம் எடுத்திருந்தால் அது ஒரு தமாஷாக இருந்திருக்கும் என்று கூறினார்கள் அவரது சிநேகிதிகள்.

தாஜ்மஹால் முன்னால் டயானா எடுத்த புகைப்படம் சகல பத்திரிகைகளிலும் அப்போது பிரசுரமாகின.

பிரிட்டிஷ் அரச குடும்பமும் அப்புகைப்படத்தைக் கண்ணுற்றது. கடும் புகைச்சல் கொண்டது.

சாள்ஸ்சை டயானா வேண்டுமென்றே பழிவாங்கி இருக்கிறார் என்பதை ஊகிப்பது கடினமல்ல.

இலண்டன் பத்திரிகை ஒன்று சாள்ஸ்-டயானா இருவரும் கீரியும் பாம்புமாக நடந்து கொள்வதைக் குறிப்பிட்டு, "இத்தகைய பரிதாபமான நிலை இன்னும் எத்தனை காலம் தான் தொடரப்போகிறதோ?" என்று எழுதியது.



தாஜ்மஹால் முன்னால் டயானா

### பிரதமர் அறிக்கை

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் இளவரசர் சாள்ஸ், இளவரசி டயானா இருவரும் இனிமேலும் இணைந்து வாழ்வது நடக்கிற காரியமல்ல என்பதை அனைவரும் நன்கு உணர்ந்தனர்.

விவாகரத்துக்கு முன்னர் தம்பதியர் இருவரும் பிரிந்து வாழ்வது என்பதற்கு அரச குடும்பத்தினர் வேறு வழியின்றி சம்மதித்தனர்.

1992ம் ஆண்டு டிசம்பர் 9ம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இளவரசர் சாள்ஸ்சும், டயானாவும் பிரிந்து வாழ்வார்கள் என்பதை பிரிட்டிஷ் மக்களுக்கும் உலகுக்கும் அந்த அறிக்கை வாயிலாக அறிவிப்புச் செய்யப்பட்டது.

இந்த அறிவிப்பு வெளியாகும்போது தன் பிள்ளைகள் இருவரையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டார் டயானா.

உலகின் புகழ்பெற்ற திருமணம் எனப் போற்றப்பட்ட திருமணம் பிரிவில் முடிந்தது.

மிகப்பொருத்தமான ஜோடி என்று உலகம் வியந்த ஜோடியின் பிரிவை உலகம் கவலையுடன் செவிமடுத்தது.

பிரிட்டிஷ் அரச குடும்பம் மற்றொரு பிரிவைச் சந்தித்தது. எலிசபெத் மகாராணி இன்னொரு மருமகளைப் பிரிந்தார்.

## பிரிந்து வாழ சம்மதம்

பிரிந்து வாழ்வது என்று அறிவிப்பு வெளியானது பற்றி டயானா கூறும்போது: "தேவதையின் கதை ஒரு சோகமான முடிவினை எட்டிவிட்டது!" என்றார்.

அதனை அவர் உண்மையாகவே மன வேதனையுடன் கூறினாரா? அல்லது ஒரு விதமாக முதற்கட்ட விடுதலை கிடைத்து விட்ட திருப்தியில் கேலியாகக் கூறினாரா, என்று தெரியவில்லை.

இந்த ஆண்டு பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கு துரதிஷ்டம் பிடித்த ஆண்டாக அமைந்தது.

இந்த ஆண்டில்தான் வின்சர் மாளிகையில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்தை "டயானாவுக்கு செய்த கொடுமைகளுக்கு கிடைத்த ஊதியம்!" என்றும் பலர் பேசிக்கொண்டனர்.

### இழந்த மரியாதை

சாள்ஸ், டயானா பிரிவுச் செய்தி வெளியானபின்னர் பிரிட்டிஷ் அரச குடும்ப மரியாதை மேலும் சரிந்தது.

'உன்னதமான ஒழுக்கமுள்ள குடும்பம்' என்று உலகெங்கும் நம்பப்பட்ட குடும்பம் எத்தனை போலியானது என்பதை அந்தரங்கத் தகவல்கள் அம்பலமாக்கின.

டயானா என்ற தம் தேவதையை அரச குடும்பம் உதாசீனம் செய்ததை பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலோர் வெறுப்புடன் நோக்கினர்.

**புவனா**

ஜேம்ஸ் ஹெவிட், ஜேம்ஸ் கில்பி ஆகியோரை டயானா நாடுவதற்கு தூண்டியது சாள்ஸ்சின் துரோகம்தான் என்று பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

'சோரம்போன தன் மகனைக் கண்டிக்க இலாய்க்கில்லாத மகாராணி, தன் மருமகளை கண்டிக்கும் தார்மீக உரிமையை இழந்துவிட்டார்!' என்று இலண்டன் பத்திரிகைகளும் கருத்துத் தெரிவித்தன.

வானுயர்ந்த மாளிகைகளின் உள்ளே ஆடிப்போய் நின்றது அரச குடும்பம்.

டயானா தன் அடுத்த கட்ட வாழ்க்கை பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார்.

**(அடுத்த வாரமும் வரும்)**


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EE

பெயர்:........................

முகவரி:..............................

..................................

தொழில்:............................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-08-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? லபுக்கெலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ **திருமதி ஆர். பூபதி,** கொண்ட கெலை, லபுக்கெலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 13

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.

❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.

❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.





மின்ன லனையதிறல் ஓங்குமே-உயிர்
வெள்ளம் கரையடங்கிப் பாயுமே;
தின்னும் பொருளமுதம் ஆகுமே-இங்குச்
செய்கை யதனில் வெற்றி யேறுமே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## அய்யோ அய்யோ



ஓர் ஊரில் ராமய்யா என்பவன் வசித்து வந்தான். மூடனான இவனது வாயில் இருந்து ஒரு போதும் நல்ல வார்த்தைகள் வரவே வராது. மற்றவர்களைக்கூட மரியாதை இல்லாமல்தான் அழைப்பான்.

இவனது இக்குணத்தைக் கண்ட பலர் இவனுக்குப் பல புத்திமதிகள் கூறினர். மற்றவர்களுடன் மரியாதையாகப் பழக வேண்டும் எனவும், இன்சொல் பேச வேண்டும் எனவும் எவ்வளவோ புத்திமதிகள் கூறினர்.

ஆனால் ராமய்யா இவற்றைக் காது கொடுத்துக் கேட்பதில்லை.

ஒருநாள ராமய்யா விறகு வெட்டுவதற்காகக் காட்டுக்குப் புறப்பட்டுச் சென்றான். காட்டில் நின்ற பெரிய மரமொன்றை வெட்டி விறகாக்க நினைத்தான். அந்த மரத்தைத் தறிப்பதற்கு முன் அதன் கிளைகளை வெட்டியெறிய எண்ணினான்.

கிளைகளை வெட்டுவதற்கு அம் மரத்தின் உச்சிக் கிளைக்குக் கோடரியுடன் ஏறினான் ராமய்யா. கிளையின் நுனியில் அமர்ந்து கொண்டு, அதன் அடிப் பகுதியை வெட்ட ஆரம்பித்தான்.

'இப்படி வெட்டினால் மரக்கிளையுடன் தானும் விழுந்து விடுவேன்' என்று மூடனான ராமய்யாவுக்குத் தெரியவில்லை. அவன் தொடர்ந்து வெட்டிக் கொண்டே இருந்தான்.

அப்போது, அந்தக் காட்டில் இருந்த இரண்டு வனதேவதைகள் ராமய்யா மரம் வெட்டுவதைப் பார்த்தன. இதைப் பார்த்த வனதேவதைகளுக்கு அவன் மேல் இரக்கம் உண்டானது. எனவே அவனைக் காப்பாற்ற எண்ணின.

உடனே ஒரு வனதேவதை மற்ற வன தேவதையிடம்;

"அந்த மரம் வெட்டுபவன் கீழே விழும் போது 'அம்மா' என்று சத்தம் போட்டுக் கொண்டு விழுந்தால், நீ அவனைக் காப்பாற்று. அவன் 'அப்பா' என்று சத்தம் போட்டுக்கொண்டு விழுந்தால் நான் காப்பாற்றுகிறேன்." என்று கூறியது.

அதற்கு மற்ற வனதேவதை "சரி" என்று கூறியது.

அந்நேரத்தில் ராமய்யா வெட்டிய கிளை படாரென முறிந்து கீழே விழ, அவன் அம்மா என்றோ, அப்பா என்றோ சத்தம் போடாமல், "அய்யோ, அய்யோ!" என்று சத்திக்கொண்டு கீழே விழுந்தான்.

ராமய்யா 'அய்யோ அய்யோ' எனச் சத்தியதால் இரு வனதேவதைகளும் அவனைக் காப்பாற்றவில்லை. மரத்தில் இருந்து விழுந்த ராமய்யாவின் கால் முறிந்தது. காட்டில் இருந்த வேறு சிலர் அவனை வீட்டிற்குக்கொண்டு போய்ச் சேர்த்தனர்.

ராமய்யா எப்போதும் இன்சொல் பேசிக் கொண்டிருந்திருந்தால் ஆபத்து வேளையில் 'அய்யோ' என்ற வார்த்தையே வந்திருக்காது. அவனுக்குக் காலும் முறிந்திருக்காது. எனவே நாமும் இனிமேல் இன்சொல் பேசுவோம்.

## அதிசயம் - ஆனால் உண்மை!





→ நெவிலி பேட்டன் என்ற அவுஸ்திரேலிய நாட்டுக்காரர் 19 மில்லி மீட்டர் குறுக்களவு கொண்ட சைக்கிளைத் தயாரித்து அதை 4.1 மீட்டர் தூரம் ஓட்டிக் காட்டினார். இவர் இதை 1988ம் ஆண்டு செய்து காண்பித்தார்.

↖ இங்கிலாந்தைச் சேர்ந்த அல்பிரட் வெஸ்ட் என்பவர் ஒரு சாதாரண பிளேட்டைக் கொண்டு, ஒரு தலைமுடியை 18 இழைகளாக வெட்டிக்காட்டினார்.

↓ கலிஃபோர்னியாவைச் சேர்ந்த டேவ் மூர் என்பவர் தயாரித்த சைக்கிளின் உயரம் 11 அடி 2 அங்குலம். முன் சக்கரத்தின் விட்டம் மட்டும் 10 அடி.





→ அவுஸ்திரேலிய நாட்டின் மார்க்சன் ஸ்பார்க்ஸ் என்பவர் 150 அடி நீளமும் 10 அடி குறுக்களவும் கொண்ட பட்டாசைத் தயாரித்துச் சாதனை படைத்தார்.

## வாரம் ஒரு நாடு

### மைக்ரோனேஷியா



தலைநகர் - பாலிகிர்.
பரப்பு - 702 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை - 1.11 இலட்சம்.
மொழி - ஆங்கிலம், வட்டார மொழிகள்.
எழுத்தறிவு - 90%.
சமயம் - கிறிஸ்தவம்.
நாணயம் - யூ.எஸ்.டொலர்.
தனிநபர் வருமானம் - 1500 டொலர்.

**அமைவிடம்:**

மிகப்பெரும் மலைகளையும், தாழ்ந்த பவளத் தீவுகளையும் கொண்ட இந்நாடு பசிபிக் பெருங்கடலில் மலேசியா, போணியோ ஆகிய நாடுகளின் கிழக்கேயும் அவுஸ்திரேலியாவின் வடக்கேயும் கரோலின் தீவுக்கூட்டங்களுடன் சேர்ந்திருக்கிறது. பல சிறுதீவுகள் ஒன்றிணைந்ததுதான் இந்நாடு.


**வரலாறு:**

அமெரிக்காவின் ஆதிக்கத்தின்கீழ் உள்ளது. 1979 மே 10 முதல் 'ஃபெடரல் மைக்ரோனேஷிய நாடுகள்' என அழைக்கப்படுகிறது. 1991 செப்டெம்பர் 17ல் ஐ.நா. உறுப்பு நாடானது. அமெரிக்கா இதன் இராணுவத் திட்டங்களைக் கவனித்து வருகிறது.

**பொருளாதாரம்:**

அமெரிக்காவிடம் இருந்து நிதியுதவி பெற்று வருகிறது. மீன்பிடித்தல், சுற்றுலாத்துறை போன்றவை மிக முக்கிய தொழில்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.08.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 257**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 255

**பரிசுக்குரியவர்:**
சுஜீகரன் விஜயகுமார்,
சென்/பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நித்தியாஸ்ரீ சுப்பிரமணியம்,<br>பெண்கள் உயர்தரப் பாடசாலை, கண்டி. | மொஹமட் பாஹீம்,<br>கம்மல்துறை, கொச்சிகடை. |
| செல்வி பிரியங்கா சிவலோகநாதன்,<br>விகாரமாதேவி மகளிர் கல்லூரி, கண்டி. | எஸ். அருண் உதர்ஷன்,<br>நம் மாதா பாடசாலை, நுவரெலியா. |
| ஏ.ராஜா,<br>பாமன்கடை வீதி, கொழும்பு-06. | ச. ரேகா வாணிஸ்ரீ,<br>கவரவில த.ம.வி., சாமிமலை(அப்கட்). |
| ஏ.எம்.சாஜிதா பானு,<br>ஒக்ஃபர்ட் தேசிய கல்லூரி, பலாங்கொடை. | வெ.கலைராணி,<br>நு/மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலயம், கந்தப்பளை. |
| ஜவீஸ் ஆஞ்சலோ பெனடிக்ற்,<br>புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. | வி. இராசநாயகம்,<br>மட்/ களுதாவளை மகா வித்., களுவாஞ்சிக்குடி. |

## சோனார்



★ **சோனார் என்றால் என்ன?**
ஆழ்கடலில் மறைந்துள்ள பொருட்களைக் கண்டுபிடிக்க உதவும் சாதனம் தான் சோனார் என அழைக்கப்படுகிறது.

★ **இது எத்தனை வகைப்படும்?**
இது இரு வகைப்படும். ஒன்று அக்டிவ் சோனார். இது வேகமான சத்தத்தை உண்டாக்கி அவை அப்பொருட்களின் மீது மோதிவிட்டு திரும்பும் வேகத்தை வைத்து பொருட்கள் இருக்கும் தூரத்தை அறியப் பயன்படுகிறது.
மற்றது பொஸிவ் சோனார். இது பொருட்கள் இருக்கும் திசையை மட்டும் காட்டும்.

★ **சோனார் எப்படி உருவானது?**
வெளவால் தன் இரையை எதிரொலி மூலம் அறிகிறது. அந்த முறையைப் பயன்படுத்தியே சோனார் உருவாக்கப் பட்டது.

★ **சோனார் எப்போது முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது?**
1921ம் ஆண்டு முதல் உலகப்போரின் போது இங்கிலாந்துக் கடற்படை, ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடிக்க முதன் முதலாக சோனாரைப் பயன்படுத்தியது.

★ **சோனாரின் பயன்கள் என்ன?**
போர்க்காலங்களில் எதிரிப்படையின் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடிக்கவும், உடைந்து மூழ்கிய கப்பல்கள் இருக்கும் இடத்தை அறியவும், மீன்கள் அதிகமுள்ள பகுதியைக் கண்டுபிடிக்கவும் பயன்படுகிறது.

## முடியாது


* பறவைகளால் நுகர முடியாது.
* சந்திரனில் எந்த உயிரினமும் உயிர் வாழ முடியாது.
* ஒட்டகச் சிவிங்கியால் எந்த ஒலியையும் எழுப்ப முடியாது.
* கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு தும்ம முடியாது.
* தீக்கோழியால் பறக்க முடியாது.
* முழு இருட்டில் பூனையால் பார்க்க முடியாது.
* பாம்பு வாய்க்குள் போனதை அதனால் துப்ப முடியாது.
* தானாகவே மூச்சையடக்கி உயிரைப் போக்கிக் கொள்ள முடியாது.

## கனிப்பொருட்கள்

எமது உடல் ஆரோக்கியத்திற்கு 16 வகையான கனிப்பொருட்கள் அவசியம். அவை:

| | |
|---|---|
| 1. கல்சியம் | 2. குளோரின் |
| 3. மக்னீசியம் | 4. பொஸ்பரஸ் |
| 5. பொட்டாசியம் | 6. சோடியம் |
| 7. சல்ஃபர் | 8. குரோமியம் |
| 9. கோபால்ட் | 10. கொப்பர் |
| 11. புளோரின் | 12. அயடின் |
| 13. மலிப்டின் | 14. செலுயம் |
| 15. இரும்பு | 16. எஸிங்க் உப்பு. |

## இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர்



இரத்தம் உடல் முழுவதும் பல திசைகளில் பாய்கிறது என்றும் சில வேளைகளில் அது கூடவோ குறையவோ இருக்கிறது என்றும் பண்டைக்காலத்தில் நம்பியிருந்தார்கள்.

இரத்தம் ஓடும் முறையை 1578 முதல் 1657 வரை வாழ்ந்த ஆங்கில மருத்துவ விஞ்ஞானியான வில்லியம் ஹார்வி நீண்ட நாட்களாகக் கவனித்து வந்தார்.

நவீன கருவிகள் இல்லாத அந்தக் காலத்தில் இதயம். நாளம், நாடி வழியாக இரத்தம் ஒரே திசையில் பாய்கிறது என்றும் இதயத்திலும், நரம்புகளிலும் ஒரு வழி வால்வுகள் இருப்பதாகவும், அது எதிரெதிர் திசைகளில் இரத்தம் பாய்வதைத் தடுக்கிறது என்றும் கண்டறிந்தார். நரம்புகளும் தமனிகளும் சிறுசிறு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருப்பதாக ஹார்வி நம்பினார்.

தனது கருத்துக்களை 1628ம் ஆண்டு புத்தகமாக எழுதி வெளியிட்டார். ஆரம்பத்தில் இதைப்படித்தவர்கள் சிரித்தார்கள். அதன் பின்னர் இவர் சொன்னது சரியென்பதை இத்தாலிய உடற்கூற்று வல்லுநரான 'மார்செல்லோ மால்பிகி' என்பவர் மைக்கிரஸ்கோப் உதவியுடன் நிரூபித்தார்.

## ஏன் தெரியுமா?



பல பூக்களில் இருந்து சேகரிக்கப் படும் தேன் எவ்வளவு நாட்களானாலும் கெட்டுப் போவதில்லை. இது ஏன் என்று தெரியுமா?

ஒவ்வொரு பூக்களில் இருந்து எடுக்கும் தேனை தேனீக்கள் தமது வயிற்றில் உள்ள பையில் சேகரிக்கின்றன. இந்த வயிற்றில் இருக்கும் பையினுள் இருக்கும் தேன் பல இரசாயன மாற்றங்களுக்கு உட்படுகின்றது.

பூவில் இருந்து எடுக்கப்படும்போது இருந்த இனிப்புச்சுவை தேனீயின் பையில் ஏற்பட்ட இரசாயன மாற்றத்தின் பின் மாறுபடுகிறது. பின் தேன் கூட்டில் சேமித்து வைக்கப்படுகிறது.

தேன் கூட்டின் சூடும், காற்றோட்டமும் சேர்ந்துகொண்டு, தேனில் உள்ள நீர்த்தன்மையை நீக்குகிறது. இதனால்தான் தேன் அதிக நாட்களுக்குக் கெட்டுப்போகாமல் இருக்கிறது.

www.padippakam.com

அமோக வாரம் 08

# மேற்கே ஒரு குற்றம்

எழுத்துலக வேந்தன் சுஜாதா

வரவேற்பில் இருந்த பெண்ணிடம் ஃப்ரான்சு தேசத்து பர்ஃப்யூம் வாசனை அடித்தது.

"மே ஐ ஹெல்ப் யூ?" என்றாள்.

"இங்கிருந்து ஜெர்மனிக்கு டிக்கெட் எவ்வளவு ஆகும்?" என்றான்.

"ஸிங்கள் ஆர் ரிடர்ன்?"

"ரிடர்ன் ஹோப்ஃபுல்லி."

"ஜெஸ்ட் எ ஸெக்கண்ட்."

"மிஸ்! டாய்லெட் எங்கிருக்கிறது?" என்றான்.

"நேராகப் போய் வலது பக்கம் திரும்புங்கள்" என்றாள்.

"வா வசந்த்!" என்றான்.

"எனக்கு வரலை பாஸ்."

"வாடான்னா!"

நேராகப் போனார்கள். வலது பக்கம் திரும்பவில்லை. நேராகப் போய்க் கொண்டே இருந்தான் கணேஷ். வசந்த் சந்தேகத்துடன் தொடர டைப் ரைட்டர் ஒலித்த ஆபீஸ் அறைகளைக் கடந்து கட்டடத்தின் பின்புறம் கதவைத் திறந்து வெளிப்பட்டார்கள். கண்டா முண்டா சாமான்கள். ஓர் ஏர்-இண்டியா லாரி நின்று கொண்டிருந்தது. ஒரு ஷெட் தெரிந்தது. இடுப்புயர காம்பவுண்டு சுவர் தெரிந்தது. கணேஷ் அதில் ஏறி அந்தப் பக்கம் குதித்தான். "பேசாம என் பின்னாடி வா!" அங்கிருந்து ஒரு சந்தைப்பிடித்து சாலைக்குவந்து முதலில் கிடைத்த டாக்ஸியை நிறுத்தி வசந்த்துடன் ஏறிக்கொண்டு, "எக்மோர் போப்பா, கமிஷனர் ஆபீஸ்" என்றான்.

வசந்த், "இப்ப புரியுது பாஸ். அவுங்க ஃபாலோ பண்ணமா இருக்கிறதுக்காக இந்த ஜாக்கிரதை! ஜெர்மனிக்குப் போகத்தான் தீர்மானம் பண்ணிட்டிங்களாக்கும்னு நினைச்சேன்!"

"இன்னும் இல்லை!" என்றான்.

ராஜேந்திரன் சமீபத்தில் கோயமுத்தூரிலிருந்து மாற்றலாகி சென்னை போலிஸில் உதவி கமிஷனராகச் சேர்ந்திருந்தார். கணேஷைப் பார்த்ததும், "ஹலோ கணேஷ்! பார்த்து ரொம்ப நாளாச்சு" என்றார்.

"கல்யாணம் கில்யாணம் பண்ணிக் கிட்டிங்களா?"

"இல்லை, நேரம் வரலை!"

"ரொம்ப பிரபலமாயிட்டிங்க போலிருக்குதே! எங்கே இந்தப் பக்கம்? சும்மா பார்க்க வந்தேன்னு பொய் சொல்லாதீங்க. ஏதாவது கேஸ் இருக்கும்!"



"இருக்குது ராஜேந்திரன். ஒரு காகிதம் கொடுங்க முதல்ல."

காகிதத்தில் சில எண்களை எழுதினான்.

"என்னது?"

"இந்த நம்பர்களில் பத்து ரூபா நோட்டுக்கள் எங்கேயாவது பாங்கிலேயோ அல்லது வேறு எங்கேயோ தென்பட்டுதுன்னா ட்ரேஸ் பண்ணமுடியுமா?"

"விவரமா சொல்லுங்க!"

கணேஷ் முதலிலிருந்து சொன்னான். தீபா அவனிடம் வந்தது; விபத்தில் இறந்தது; விளம்பரம் கொடுத்தது; இருட்டு வண்டியில் எங்கேயோ சென்றது; வியாபாரம் பேசியது; டிக்கெட் வாங்கச் சொன்னது; கலாராதனாவின் மேல்நாட்டுப் பயணம்? எல்லாவற்றையும் சொன்னான்.

ராஜேந்திரன் யோசித்தார்.

"ஜேம்ஸ் பாண்டு வேலையெல்லாம் செஞ்சிருக்கீங்க! முதல்ல அந்த தீபா கேஸை டிராஃபிக் டிபார்ட்மெண்டில் இருந்து மாத்திடறேன். மறுபடி அதைக் குடையணும்! புதுசாத் தலைவலி எல்லாம் கொண்டு வர்றீங்களே!"

"என்ன செய்யறது!"

"அப்புறம் இந்த பத்து ரூபா நோட்டு; பார்க்கறேன். மொஃபஸல்ல எல்லா ஸ்டேஷன்களுக்கும் தகவல் கொடுத்து பாங்குகளில் சொல்லி வைக்கச் சொல்றேன்."

"ஏதாவது ஒரு பாங்குல ஒரு நோட்டு அகப்பட்டால் போதும். ஏரியா தெரிஞ்சுடும் பாருங்க! இப்ப எந்த இடம்னே தெரியலியே!"

"ஐடியா! ஆனா ட்ரேஸ் பண்றது கொஞ்சங் கஷ்டம். பார்க்கறேன்! அப்புறம் அந்த ஜெர்மனி விவகாரம்! போகப்போறீங்களா?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"கொஞ்சம் யோசிச்சுச் செய்யணும்! ஒண்ணு செய்யுங்களேன், டிக்கெட் வாங்கறதுக்குப் பணம் வேணும்னு கேளுங்க. அவன் டெலிஃபோன்ல பேசறதா சொல்லியிருக்கானில்லே?"

"டிக்கெட் வாங்கிட்டு விளம்பரம் கொடுன்னான்."

"டெலிஃபோனில் பேச மாட்டானா?"

"பேசலாம்."

"உங்க டெலிஃபோனை மனிட்டரில் போடச் சொல்றேன். கால் வந்தா ட்ரேஸ் பண்ணிப் பார்க்கலாம்!"

கணேஷ் யோசித்தான். "சரி செய்யுங்க!" என்றான் நம்பரை எழுதிக் கொடுத்தான்.

"அவுங்க டெலிஃபோனில் பேசலைன்னா?"

"எப்படியும் உங்களுக்குப் பணம் கொடுக்க யாராச்சியும் வருவாங்க இல்லை! அப்ப கபக்குனு புடிச்சிடலாமில்லை!"

"எனக்கென்னவோ அவுங்க அவ்வளவு சுலபமா மாட்ட மாட்டாங்கன்னு தோணுது! அது என்ன கோஷ்டின்னு நினைக்கிறீங்க?"

"ஸ்மக்ளிங்! கடத்தல்! வேறென்ன?"

"என்ன கடத்தப் போறாங்க?"

"கடத்தப் போறாங்களா கடத்திக்கிட்டு வரப் போறாங்களா! அது வெளிநாட்டில தானே தெரியும்! கலாராதனான்னு சொன்னிங்க! நல்ல குரூப் ஆச்சே அது! கவர் மெண்டின் இன்விடேஷன்லன்னா போறாங்க!"

"எனக்கென்னவோ அந்த நாட்டியக் குழு அதோட சம்பந்தப்பட்டிருக்கிறதா தோணலை. அந்தப் பொண்ணு இவுங்களோடகூடப் போற விஷயத்தை வெச்சுக்கிட்டு அவளை எதுக்கோ பயன்படுத்திக்கத்தான் பாத்திருக்காங்க!"

"அது பயந்துகிட்டு உங்ககிட்ட வந்திருக்குது. கொன்னே போட்டுட்டாங்க. சாத்தியம்! கணேஷ் அப்ப ஒண்ணு செய்வமே! நீங்க போங்க. ஜெர்மனிக்கு என்ன ஆகுதுன்னு பாத்திடலாம்."

கணேஷ் அதிர்ந்தான்.

"என்ன இப்படிச் சொல்லிட்டிங்க?"

"பயப்படாதீங்க. இண்டர்போல்கிட்ட எங்களுக்கு காண்டாக்ட் இருக்கு. உங்க பத்திரத்தைப் பற்றி கவலைப்படாதீங்க. மெஸேஜ் அனுப்பிச்சுடுவோம். அங்கே காண்டாக்ட் பண்றதுக்கு விவரங்கள் கொடுக்கறோம். பதினைஞ்சு நாள் இருக்கு. அதுக்குள்ளாற இவங்களை இங்கேயே புடிக்க முடிஞ்சுதுன்னா சரி. நீங்க எதுக்கும் பாஸ்போர்ட்டுக்கு மனுப்போட்டு டிக்கெட் வாங்கி வெச்சுக்குங்க; அவன் சொன்னபடியே விளம்பரம் கொடுத்து பணத்தை வாங்கிருங்க! பணத்தை எந்த மாதிரி உங்ககிட்ட சேர்ப்பிக்கறான்னு பார்க்கலாம். ஓசியில் ஒரு ட்ரிப் கிடைக்குது; போய்ட்டு வாங்களேன்! அந்தப் பக்கத்து கோஷ்டியையும் முறியடிச்சிங்கன்னு உங்களுக்கு ஸ்பெஷலா புகழ் வரும். தங்கத்தில் மெடல் செய்து போடறோம்! நீங்களும் போறீங்களா மிஸ்டர் வசந்த்?"

"நான் இல்லாமையா, என்ன பாஸ்?"

கணேஷ் யோசித்து, "இவனும் வரட்டும், ரெண்டு ஆளாப் போறது பெட்டர்னு தோணுது..."

"பாஸ்போர்ட் கிடைக்கிறதுலே தகராறு இருந்தா சொல்லுங்க. என்னால் ஹெல்ப் பண்ண முடியும்!"

"தேவைப்பட்டுதுன்னா சொல்றேன்."

"நீங்க எப்படி இங்கே வந்தீங்க? அவுங்க உங்க காரை ஃபாலோ பண்ணினாலும் பண்ணியிருப்பாங்க."

"பாலோ பண்ணினாங்க! ஏர் இண்டியாவில் காரை நிறுத்திவிட்டு பின்பக்கமா சுவர் ஏறிக் குதிச்சு டாக்ஸி புடிச்சு வந்திருக்கோம்."

"வெரிகுட். இப்ப அதே வழியா திரும்பிப் போய்டுங்க. டெலிஃபோன் பண்ணுங்க எனக்கு. ஏதாவது புதுசா டெவலப்மெண்ட்ஸ் இருந்ததுன்னா டிக்கெட் வாங்கினதும் தேதி விவரங்களை எனக்குத் தெரியப்படுத்துங்க. இண்டர் போலுக்கு தகவல் தந்துடுவோம். உங்களுக்கு மறைமுகமா பாதுகாப்புக் கிடைக்கும். குட்லக்!" என்று கைகுலுக்கினார்.

கணேஷும், வசந்த்தும் டாக்ஸி பிடித்து, வந்த வழியே திரும்பி ஏர் இண்டியா அலுவலகத்தின் பின் வாசலில் நுழைந்து மறுபடி அந்தப் பெண்ணிடம் சென்றார்கள்.

"எங்கே போய்விட்டீர்கள் இத்தனை நேரம்?" என்று புன்னகைத்தாள்.

"ஸாரி, டாய்லெட்டில் கொஞ்ச நேரம் ஆகிவிட்டது. வயிற்றுக் கோளாறு யு நோ!" என்று சிரித்தான் வசந்த்!

"ஜெர்மனிக்கு எவ்வளவு டிக்கெட் பணம் ஆகும் என்று கேட்டோம்!" என்றான் கணேஷ்

"நாங்கள் ஃப்ராங்பர்ட்டை மட்டும் தொடுகிறோம்."

"ப்ராங்ஃபர்ட்டுக்குத்தான் கேட்கிறோம்."

"ஆறாயிரத்து அறுபத்து ஒன்று!"

"ரிடர்ன்?"

"அதைவிட இரண்டு மடங்கு!"

கணேஷும், வசந்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "தாங்க்யூ வெரி மச்!"

"யூ ஆர் வெல்கம்."

இருவரும் வெளியே வந்தார்கள்.

"போக வர ரெண்டு பேருக்கும் டிக்கெட்டுக்கே இருபத்தி அஞ்சாயிரம் ரூபாய்! வாவ், என்கிட்ட இருபத்தி அஞ்சு ரூபாய் இருக்கு"

"பார்க்கலாம்."

"என்ன பார்க்கலாம்?"

"அவுங்க நமக்காக இருபத்தி ஐயாயிரம் ரூபாய் செலவழிப்பாங்களான்னு! வா கிளம்ப வேண்டியதுதான்."

"எங்கே?"

"முதல்ல பாஸ்போர்ட் ஆபீசுக்கு. அப்புறம் பத்திரிகை ஆபீசுக்கு."

நுங்கம்பாக்கத்தில் இருந்த பாஸ்போர்ட் ஆபீஸில் அவர்களுக்கு அதிகம் வேலையில்லை. இரண்டு செட் பாஸ்போட் அப்ளிகேஷன் பாரங்கள் வாங்கிக் கொண்டார்கள். அங்கிருந்து மவுண்ட் ரோடுக்கு மறுபடி வந்தார்கள்.

ஸ்ரீ சூர்ணாச்சாரி இவர்களைப் பார்த்ததும் பரவசமாகச் சிரித்தார். "அலமேலுகிட்ட சொன்னேன் ஸார். கணேஷைப் பார்த்தேன்னா நம்பவே இல்ல அவ!"

"வசந்த்தைப் பத்தியும் ஒரு வார்த்தை காதில் போட்டு வெக்கலியா?"

"சொன்னேன்! ஷி வாஸ் த்ரில்ட். இப்ப என்ன?"

"மறுபடி இன்னொரு விளம்பரம். பாரம் கொடுக்கறீங்களா?"

"தாராளமா! கணேஷுக்கு இல்லாமலா?"

கணேஷ் எழுதினான்.

"அன்புள்ள அய்யா! டிக்கெட் வாங்க ரூ. 25 பணம் வேண்டும். உடனே ஏற்பாடு செய்வீங்களா?"

-கணேஷ்.

அவர் அதைப் படித்துவிட்டு, "என்ன ஸார்! இருபத்து அஞ்சு ரூபாயா? இந்த விளம்பரத்துக்கே நூறு ரூபா ஆகுமே!" என்றார்.

"உங்க பேர் என்ன?"

"ரங்கராஜன்!"

(தொடர்ந்து வரும்)

---

புதிய தொடர்

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன் 01

ராஜையா

டிக்...டிக்...டிக்...

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்த இளைஞன் தயாராகக் காத்திருந்தான். கையில் துப்பாக்கியுடன் தலை மறைவான இடத்தில்.

அவனுக்கு வயது இருபத்திரெண்டு இருக்குமா? இருக்கும். வசீகரமான முகம். ஆளை அடித்து வீழ்த்தும் கண்கள். ஆண்மை பளிச்சிடும் அடர்ந்த மீசை. மன உறுதியை வெளிக்காட்டும் முறுக்கேறின உடம்பு.

அவன் நெஞ்சு நிறைய ஒரே ராகம்...

'சுட்டுக் கொல்லணும். ஜனாதிபதியை சுட்டுக் கொல்லணும்...'

இது சாதாரண விஷயமா? பலத்த பாதுகாப்புடன் பவனி வரும் ஜனாதிபதியை சுட்டுக் கொல்வது அத்தனை சுலபமான காரியமா? ஆபத்தான பயங்கர விளையாட்டு இல்லையா? இது அவனுக்குத் தெரியாதா?

தெரியும். தெரிந்துதான் செய்கிறான். ஆபத்தை தேடிப்போய் அதனுடன் விளையாடுவதில்தானே அவனுக்கு 'த்ரில்' இருக்கிறது...

'கண்ணை மூடித் திறக்குறதுக்குள்ள காரியத்தை கச்சிதமா முடிச்சுடணும்!'

தன்னைச் சுற்றி நோட்டம் விட்டான்...

அவன் சொன்ன பொசிஷனில் எந்திரத் துப்பாக்கிகளுடன் அவனது நண்பர்கள். அவன் கண்ணசைவுக்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

அவன் ஜனாதிபதியின் வருகைக்காக காத்திருந்தான்...

அதோ... ஜனாதிபதியின் கார்....



இளைஞனின் முகத்தில் மின்னலடித்தது. உஷாரானான்.

ஜனாதிபதியின் கார் வந்து நின்றது. அதற்குப் பின்னால் ஜனாதிபதியின் பாதுகாப்புப் படையினர் வந்த கார்கள் வரிசையாக.

நொடிப் பொழுதையும் வீணாக்கவில்லை அந்த இளைஞன். உத்தரவுக்காகக் காத்திருக்கும் நண்பர்களுக்கு கண் ஜாடைகாட்டி விட்டு, துப்பாக்கி விசையைத் தட்டினான்.

எந்திரத் துப்பாக்கிகள் திடீரென அலறி அமைதியைக் குலைத்தன. ஜனாதிபதியின் காரை நோக்கி சரமாரியாக குண்டுகள் சீறிப் பாய்ந்தன.

ஜனாதிபதியின் கார் சல்லடையானது.

ஜனாதிபதியின் தோளை குண்டு பதம் பார்த்தது. இரத்தம் பொங்க அவர் சட்டென காருக்குள் குனிந்து தலைமறைவானார்.

ஜனாதிபதியின் உயிரைப் பறிக்க அந்தக் காயம் போதாது என்று பட்டது இளைஞனுக்கு. ஆனால் அவர் காருக்குள் குனிந்து கொண்டதால் அவனால் மீண்டும் அவரைச் சுடமுடியவில்லை.

இதற்குள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிகளுடன் கீழே இறங்கி ஓடிவந்தனர். குண்டுகள் பாய்ந்து வந்த திசை நோக்கி திருப்பிச் சுட ஆரம்பித்தனர்.

இரு தரப்பினருக்கும் கடும் துப்பாக்கிச் சண்டை மூண்டது.

திடீரென இளைஞன் தன்மீது இடி விழுந்ததைப்போல் உணர்ந்தான். எங்கிருந்தோ பாய்ந்து வந்த குண்டு அவன் காலைத்துளைத்து உள்ளுக்குள் குடியேறியிருந்தது இரத்தம் பொங்கியது. தீயாய் வலித்தது...!

ஒருகணம் தடுமாறினான். மறுகணம் 'ச்சு...' என்று காலை உதறிவிட்டு தொடர்ந்து சுட்டான்.

பாதுகாப்புப் படையினர் மெல்ல மெல்ல முன்னேறி தங்களை நோக்கி வருவதைக் கவனித்தான். இனியும் இருப்பது ஆபத்து என்று நண்பர்களுக்குப் பின்னோக்கிச் செல்ல ஜாடை காட்டினான்.

உடனே அவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே பின்வாங்கினார்கள். ஒளிந்து ஒளிந்து தப்பி ஓடினார்கள்.

வேகமாக ஓட முடியவில்லை அவனால். குண்டடிபட்ட கால் ஒத்துழைக்க மறுத்தது. வலி தாங்காமல் தள்ளாடினான். சற்று மறைவான இடம்தேடி தடுமாறி ஓடி ஒளிந்தான்.

இளைஞன் தன்னிடமிருந்த ரேசர் பிளேடை எடுத்தான். தன்னுடன் ஓடி வந்திருக்கும் நண்பனிடம் அதைக் கொடுத்தான்.

"என் காலை அறு. குண்டை வெளியே எடு."



நண்பன் தயங்கினான்.

"யோசிக்காதே. நேரமில்லை"- இளைஞன் அவசரப்படுத்தினான்.

நண்பர் ரேசர் பிளேடால் இளைஞனின் கால் சதையைக் கிழித்தான். குபுகுபுவென இரத்தம் பெருகி வழிந்தது. குண்டை பிளேடால் எம்பி வெளியே எடுத்தான்.

மெதுவாக அவன் கண்கள் பஞ்சடைக்க ஆரம்பித்தன. மயக்கமடைந்தான்.

அவன் மயக்கம் தெளிந்து எழுந்த போது நண்பன் தன் உள்ளாடையைக் கிழித்து காய்த்துக்கு கட்டுப்போட்டிருந்தான். இளைஞன் அவனை நன்றிப் பெருக்குடன் பார்த்தான்.

சற்று தொலைவில் விசில் சத்தம் கேட்டது.

"பொலிஸ் வருது." என்று பதறத்துடன் சொன்ன நண்பன், "புறப்படு!" என்று கூறிவிட்டு, அவன் தன்னோடு வருகிறானா? இல்லையா? என்று கூட கவனிக்க மறந்து இருட்டுக்குள் ஓடி மறைந்தான்.

இளைஞன் எழுந்தான். அவசர அவசரமாக ஆடைகளைக் கழற்றினான். ஆதிவாசி போல் வேடம்பூண்டான். அப்பாவி போல் வெளிச்சத்துக்கு வந்தான். பலமாய் காலூன்ற முடியாமல் தாங்கித் தாங்கி நடந்தான்.

எதிரே அகலமாய், ஆழமாய் இரைந்தோடும் டைக்ரீஸ் ஆறு...

அக்கம் பக்கம் பார்த்தான் அவன்...

தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டவுடன், ஆற்றுக்குள் குதித்தான்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com



# முள் நிலவு

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள 'விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

"அ..... அ.... அம்மா.... நீ.... நீ.... என்ன சொல்றே..?"

"அவர் சொன்ன மாதிரி அது நமக்கு ராஜசம்பந்தம்தான்."

"அ...அம்மா...!"

"இப்ப என்ன இன்விடேஷனை ப்ரிண்ட் பண்ணி ஊர் பூராவும் கொடுத்துட்டோமா என்ன..? அந்த சம்பந்தத்துக்கு 'டாட்டா' காட்டிட்டு இதுக்கு தலையாட்டுறதுதான் புத்திசாலித்தனம்."

"பா..பாக்யம்...!" சிவராஜன் மனைவியைக் கோபமாய்ப் பார்க்க- அதை லட்சியம் செய்யாமல் சொன்னாள் பாக்யம்.

"இந்தக் காலத்துல கொடுத்த வார்த்தையை யாருங்க காப்பாத்துறாங்க..? பணத்துக்கு இருக்கிற மதிப்பு வேற எதுக்கு இருக்கு? நான் முடிவு பண்ணிட்டேன். ஹோம் மினிஸ்டரோட பையனுக்குத்தான் நம்ம நிலாவை தர்றது...!"

நிலா மனதில் ஒரு ஓரமாய் நசுங்கினாள்.

சிவராஜன் மனைவியைக் கோபமாய்ப் பார்த்தார்.

"பாக்யம்..! நீ என்ன பேசிட்டிருக்கேன்னு யோசிச்சுதான் பேசிட்டிருக்கியா... கல்யாணங்கிறது வியாபார விஷயமில்லை... நேரத்துக்குத் தகுந்த மாதிரி பேசறதுக்கு..."

பாக்யம் தன் இடது கையை உயர்த்தி கணவரை அமர்த்தினாள். "நிலாவுக்கு நாம கல்யாணத்தை பேச்சளவில்தான் நிச்சயம் பண்ணியிருக்கோம். முறைப்படி நிச்சயதார்த்தம் கூட நடக்கலை. பரஸ்பரம் தட்டுக்களை மாத்திக்கிற சம்பிரதாயத்தைக்கூட செய்யலை... இதெல்லாம் ஏன்...? நம்ம பொண்ணு நிலா, மாப்பிள்ளையோட முகத்தைக்கூட இன்னும் பார்க்கலை. இதையெல்லாம் ஒரு நிமிஷம் யோசிச்சு பார்த்தீங்கன்னா நான் சொல்றது சரின்னு உங்க மனசுக்குப்படும்..."

"நீ ஆயிரம்தான் சொல்லு...! பேசி முடிவு பண்ணின சம்பந்தத்தை முறிக்கிறது கொஞ்சமும் நியாயமில்லை.... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நம்மைப் பத்தி என்ன நினைப்பாங்க..?"

"என்ன வேணும்னாலும் நினைச்சுட்டு போகட்டும். அதைப்பத்தி நாம ஏன் கவலைப்படணும்....?"

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் விக்கித்துப்போய் நின்றிருந்த நிலா பாக்யத்துக்குப் பக்கத்தில் போய் நின்று அவளுடைய தோளில் கை வைத்தாள்.

"அம்மா..."

"என்னடி...?"

"ஒரு அப்பா அம்மாவோட கடமை என்ன தெரியுமா..? ஒரு மாப்பிள்ளையைக் கொண்டுவந்து நிறுத்தி அவரை கல்யாணம் பண்ணிக்கறியான்னு கேட்கிற கேள்வியோடு அவங்க கடமை முடிஞ்சு போயிடுது! மாப்பிள்ளை வேணுமா வேண்டாமான்னு முடிவு பண்ண வேண்டியது பொண்ணுதான். என்னைப் பொறுத்தவரைக்கும் ஏற்கனவே பேசி முடிவு பண்ணின கிருஷ்ணகாந்த்தான் மாப்பிள்ளை. பணக்கார சம்பந்தம் வருதேன்னு நீ குணம் மாறலாம். ஆனா நான் மாறத் தயாராயில்லை."

"என்னடி! பெரிய மனுஷித்தனமா பேசிட்டுப் போறே...? நல்லது கெட்டது பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறது பெத்தவங்களோட கடமை. ஒரு நல்ல சம்பந்தம் வந்தா இன்னொரு சம்பந்தத்தைத் தட்டிக் கழிச்சிட்டு போயிட்டே இருக்க வேண்டியதுதான்..! நியாயம்... அது... இதுன்னு பார்த்தா... கடைசியில நாமதான்..."

சிவராஜன் குறுக்கிட்டு இரைந்தார்.

"பாக்யம்..."

"இதோ பாருங்க.. இந்தக் கத்தல் மிரட்டல் எல்லாம் என்கிட்ட வேண்டாம். வாய்ப்புகள் தேடிவரும்போது அதை பயன்படுத்திக்கிறதுதான் புத்திசாலித்தனம். நீங்க அதைப் புரிஞ்சுகிட்டு உங்க பொண்ணுக்கும்



அதை எடுத்துச் சொல்லுங்க... குதிரையோட கண்ணுக்கு பட்டை கட்டிவிட்ட மாதிரி ஒரே திசையைப் பார்த்துட்டு போகாதீங்க. அக்கம் பக்கம் எப்படியிருக்கு... இந்த உலகத்துல என்ன நடக்குதுன்னு தலையை நாலாபக்கமும் திருப்பி பாருங்க... எல்லா ஜனங்களும் ஓடிட்டு இருக்கிறது பணத்துக்குப் பின்னாடிதான். இந்தியாவோட ஹோம் மினிஸ்டர் சோமய்யா நமக்கு சம்பந்தியானா உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு பெருமை..! நான் முடிவு பண்ணிட்டேன். நிலாவை அவரோட பையனுக்குத்தான் தர்றது..."

"பாக்யம்! பணம் உன்னோட கண்ணை மறைக்குது. கொஞ்சம் நிதானமா உட்கார்ந்து யோசனை பண்ணு. நம்ம தகுதிக்கு மீறின சம்பந்தத்தால பின்னாடி பிரச்சனைகள்தான் வரும். எல்லாத்துக்கும் மேலா கல்யாணம் பண்ணிக்கப்போற நிலாவோட விருப்பம்தான் அதுல முக்கியம். அவ விருப்பத்துக்கு விரோதமா கல்யாணத்தை பண்ணி வைக்கக் கூடாது..."

"அவ சின்னப் பொண்ணு... அவளுக்கு என்ன தெரியும்? நீங்களும் நானும் உட்கார்ந்து அவளுக்கு நல்லது எதுன்னு சொன்னா... தாலியை வாங்கிக்க கழுத்தை நீட்டிட்டுப் போறா..."

"அம்மா..."

"நீ பேசாமே உள்ளே போடி....! உனக்கு யாரை எப்படி கல்யாணம் பண்ணி வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும்..." ஆவேசமாய் இரைந்த பாக்யம் தன் கணவர் கையில் வைத்திருந்த கல்யாண அழைப்பிதழ் மாதிரி கவரை வாங்கி இரண்டாய்... நாலாய்... எட்டாய்க் கிழித்து எறிந்தாள்.

"அம்மா ..!"

"உன்னோட வியாக்கியானம் எதுவும் வேண்டாம். போடி உள்ளே..!" ரெளத்தரமாய் கூச்சலிட்ட அம்மாவையே பயமாய்ப் பார்த்தாள் நிலா.

'அம்மாவா இப்படி...!'

'பணம் எவ்வளவு சுலபமாய் மனிதர்களை இனம் பிரித்துக் காட்டிவிடுகிறது...?'

பாக்யம் கணவரிடம் திரும்பினாள்.

"என்னங்க... அந்த ஆள் ஃபோன் நெர்பர் என்ன?"

"யாரோட ஃபோன் நெம்பர்...?"

"ஏற்கனவே பார்த்து வெச்ச மாப்பிள்ளையோட அப்பா வெங்கடேஷ்வரனோட ஃபோன் நெம்பர்..."

"எதுக்கு..?"

"அவர்க்கு ஃபோன் பண்ணி கல்யாண ஏற்பாடுகளை நிறுத்தச் சொல்லத்தான்...."

"பொறு பாக்யம்...! அவசரப்படாதே..."

"எனக்கு அவசரம்தான்...! நீங்க என்ன ஃபோன் நெம்பர் தர்றது...? அந்தக் காலண்டர்ல தான் எங்கேயோ குறித்து வெச்சேன்." சொன்ன பாக்யம், வியர்த்து வழிகிற முகத்தைக் கூடத் துடைக்காமல் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மாதக் காலண்டரை நெருங்கி அதன் ஓரத்தில் குறித்து வைத்திருந்த டெலிஃபோன் எண்களை ஞாபகத்தில் ஒட்ட வைத்துக் கொண்டு டெலிஃபோனை நெருங்கி ரிஸீவரை எடுத்துக் கொண்டாள்.

சிவராஜன் பாய்ந்து வந்து ரிஸீவரைப் பறித்தார். "வேண்டாம் பாக்யம்... சொன்னாக் கேளு! 'எடுத்தேன். கவிழ்த்தேன்'னு எந்தக் காரியத்தையும் பண்ணக்கூடாது. யோசனை பண்ணித்தான் எந்த ஒரு காரியத்தையும் செய்யணும்..."

"நாம யோசனை பண்ணிட்டேயிருந்தா அவங்க பத்திரிகையை பிரிண்ட் பண்ணி ஊர் பூராவும் குடுக்க ஆரம்பிச்சுடுவாங்க. இப்பவே சொல்லிட்டாத்தான் அவங்களுக்கும் பாதிப்பு இருக்காது."

"இப்போ ஃபோனை நீ வைக்கப் போறியா இல்லையா?"

கணவனின் அதட்டல் குரலைக் கேட்டதும் ஒரு கணம் நிதானித்து பின் அவரை ஏறிட்டாள்.

"இப்போ ஃபோனை வைக்கிறேன்... ஆனா என்னோட முடிவுல எந்த மாறுதலும் கிடையாது. இன்னிக்கு சாயந்திரத்துக்குள்ளே மாப்பிள்ளையோட அப்பா வெங்கடேஷ்வரனுக்கு நீங்க ஃபோன்போட்டு பேசி கல்யாண ஏற்பாடுகளை நிறுத்தும்படியா சொல்லணும்... இல்லேன்னா நான் சொல்லும்படியா இருக்கும்..." விரலை நீட்டி ஆக்ரோஷமாய்ப் பேசிவிட்டு சமையலறையை நோக்கிப் போகும் அம்மாவையே வெறித்துப் பார்க்க ஆரம்பித்தாள் நிலா.

சிவராஜன் பக்கத்தில் வந்து நிலாவின் தோள்மேல் மெல்லக் கையை வைத்தார். கண்ணீர் தத்தளிக்கும் கண்களோடு அவரை ஏறிட்டாள் நிலா.

"அப்பா...! அம்மாவை நினைச்சா எனக்கு பயம்மா இருக்கு..."

"தைரியமா இரும்மா... அவளை சமாதானப்படுத்த நானாச்சு..."

"அம்மா பேசிட்டு போறதைப் பார்த்தா முடியாது போலிருக்கே... அம்மா இப்படி பேசி என்னிக்குமே நான் பார்த்ததில்லை."

"மந்திரி வீட்டு சம்பந்தம்னதும் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டாள்னு நினைக்கிறேன்... ரெண்டு மணி நேரம் போகட்டும் அவளை கன்வின்ஸ் பண்ணிடறேன்..."

"அம்மா கன்வின்ஸ் ஆகலைன்னா...?"

"ஆயிடுவா..."

"ஆகலைன்னா..."

"யோசனை பண்ணணும்..."

"நான் யோசனை பண்ணி முடிச்சிட்டேன்பா..."

"நீ என்னம்மா சொல்றே...?"

"உங்க முயற்சி தோல்வி அடையும் போது உங்களுக்கே தெரியும்பா..." சேலைத் தலைப்பால் கண்ணீரை ஒற்றிக் கொண்டு தன் அறையை நோக்கி மெல்ல நடந்து போனாள் நிலா.

✍ ✍ ✍

**மே**ற்கொண்டு நான் எழுதத் துவங்கும் முன்பு பக்கத்து அறையில் டெலிஃபோன் ஒலித்தது. பேனாவை அப்படியே வைத்துவிட்டு போய் ரிஸீவரை எடுத்தேன்.

"ஹலோ..."

"ரைட்டர் ஆர்.கே.வீடா...?" ஒரு பெண்குரல் கேட்டது.

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

"ஆமா..."

"ரைட்டர் ஆர்.கே. ப்ளீஸ்..."

"ஹோல்டிங்..."

"ஆர்.கே. ஸார்.... நீங்கதானா...? நான் டாக்டர் மிருதுபாஷினி. மென்டல் பேஷண்ட் நிலாவுக்கு ட்ரீட்மெண்ட் தர்ற டாக்டர்...! அன்னிக்கு சாயந்தரம்கூட நாம ஹாஸ்பிடல்ல பார்த்தோமே!"

"வணக்கம் ...டாக்டர் ....உங்க ஃபோனை இந்த ராத்திரி நேரத்தில நான் எதிர்பார்க்கவேயில்லை...."

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்..."

"என்ன விஷயம் சொல்லுங்க டாக்டர்..."

"நாளைக்குக் காலையில பத்து மணியிலிருந்து பதினொரு மணிவரைக்கும் நீங்க ஃப்ரீயா...?"

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை 09

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

அந்தக் கலக்கம் அவனை ஆட் கொண்டது. எல்லாம் இரண்டே நாட்கள்தான்...! இறைவன் அவனை எப்போதுமே கண்காணித்துக் கொண்டிருந்தான்போலும்! சேலம் மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து அவனுக்கு ஒரு தந்தி வந்தது.

உடனே புறப்படும்படி அது உத்திரவிட்டது. சேலத்திற்கு வந்தான்...! 'சர்வாதிகாரி', 'கல்யாணி' இரண்டு படங்களுக்கு ஆறு பாடல்கள் எழுதினான். ரூபாய் மூவாயிரத்தைக் கையிலே வாங்கிக் கொண்டான்.

"தொடர்ந்து எல்லாப் படங்களுக்கும் அவனே எழுதட்டும்!" என்று டி. ஆர். எஸ். (டி. ஆர். சுந்தரம்) சொல்லிவிட்டார்.

உற்சாகத்தோடு அதுவரை அவன் கண்டிராத பணத்தோடு சென்னைக்குப் புறப்பட்டான்.

இப்போது அவன் முதல் வகுப்பில் பிரயாணம் செய்தான்...!

முதல் வகுப்பில் சுகத்தை அவன் தூங்கி அனுபவிக்கவில்லை.

விழித்த கண்களிலேயே 'சென்ட்ரல் ஸ்டேஷன்' வந்து நின்றது.

பரபரப்புக்கிடையே அந்தப் பாதி மனிதன் வண்டியை விட்டு இறங்கினான்.

அன்றிலிருந்துதான் குடியிருப்பதற்கென்று ஒரு வீடு தேடத் தொடங்கினான். இரண்டு நாட்களில் அதுவும் கிடைத்தது! இராயப்பேட்டை கணபதி முதல் தெருவில் ஒரு வீடு!

திரு.வி.க. வீட்டிற்கு நேர் எதிர் வீடு, நூறு ரூபாய் வாடகை! குடியும் குடித்தனமுமாக ஒரு தனி வீட்டில் சென்னையில் வாழத் தொடங்கியது அன்றுதான் முதல் தடவை.

சேலத்திற்குப் போய்ப் பாட்டு எழுத வேண்டியது. கிடைத்த பணத்தைக் கொண்டு சென்னையிலேயே வாழ வேண்டியது.

இப்படியே ஓடிய ஆண்டுகள் இரண்டு.

இந்த நேரத்தில் கிராமத்திலிருந்து வந்த அவனது தந்தையார் கொஞ்ச நாள் கிராமத்தில் இருந்துவிட்டு வரலாம் என்று அவனை அழைத்தார்.

அவன் பிறந்த கிராமம் அன்று அவனை வெறுக்கவில்லை. அந்த நேரத்தில் மும்முனைப் போராட்டம் ஒன்றினை முன்னேற்றக் கழகம் அறிவித்திருந்தது. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ஆட்சியிலிருந்த காலம் அது! அந்தப் போராட்டங்களுக்கு இன்னின்னார் 'தளபதிகள்' என்று நியமித்திருந்தார்கள். அவற்றில் எதிலும் அவன் இல்லை, ஒருநாள்..! மதிய உணவிற்காக அவன் அமர்ந்திருந்தான்.

காரைக்குடியிலிருந்து அவனது நண்பர்–உழைப்பின் உருவம் இராம. சுப்பையா அவர்கள் ஓடோடி வந்தார்.

"தெரியுமா சேதி?" என்று கேட்டார்.

அவரது பதற்றத்தைக் கண்டு அவனும் பதறினான். "சென்னையில் அண்ணாவை எல்லாம் கைது செய்து விட்டார்கள்!" என்றார் அவர். அவன் திகைத்தான். "நாம் சும்மா இருந்தால் நன்றாக இருக்காதே...?" என்றார்.

"என்ன செய்யலாம்...?" என்று அவன் கேட்டான். "திருச்சிக்குப் போய் டால்மியாபுரம் போராட்டத்தில் கலந்து கொள்வோம்!"



என்றார் அவர். அவன் உடனடியாகப் புறப்பட்டான்! கையில் இருந்தது இரண்டே ரூபாய்!

உணர்ச்சிவசப்பட்டுப் போராட்டத்திற்கு அவன் புறப்பட்டுவிட்டான்.

ஆனால், பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து பதினைந்து நிமிடங்களுக்கெல்லாம் அவன் குழப்பமடையத் துவங்கினான்.

எவ்வித வசதியுமற்ற நிலையில் குடும்பத்தை விட்டுவிட்டு, போராட்டத்தில் ஈடுபடுவதால் நீண்டகாலச் சிறைவாசம் அனுபவிக்க வேண்டி வந்தால்...?

எதையும் அவனால் தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை.

உணர்ச்சி மட்டும் அவனை நடத்திச் சென்றது.

காரைக்குடியில் இறங்கி, ஒரு வாடகைக் காரை இருவரும் பிடித்துக்கொண்டார்கள்.

திரும்ப வந்ததும் பணம் கொடுப்பதாகவும், பெட்ரோலும் அவரே போட்டுக் கொள்ளும்படியும், டிரைவரைக் கேட்டுக் கொண்டார்கள்.

மாலை சுமார் 7 மணிக்கெல்லாம் 'லால்குடி'க்கு வந்து சேர்ந்தார்கள்.

லால்குடியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

தோழர்கள் கருணாநிதி, அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் அதில் பேசுவதாய் ஏற்பாடு.

அனைவரும் வந்து அமர்ந்திருந்தார்கள்.

அவனும் மேடையில் போய் அமர்ந்தான்.

வெறும் யந்திரம் போலவே அவன் இயங்கினான்.

கருணாநிதி அவனைப் பார்த்து, "நீரும் போராட்டத்தில் கலந்துகொள்ளப் போகிறீரா?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றான்.

"ஏதோ யோசித்து முடிவு செய்யும்!" என்றார் அவர்!

அவனைப் பேச அழைத்தார் தலைவர்.

பேச எழுந்தான்.

பெரும் உணர்ச்சிவசம்!

"போகிறேன்....சாகிறேன்!" என்றான்.

ஐந்து நிமிடப் பேச்சு!

அடுத்துப் பேசியவர் கருணாநிதி.

இரத்தம் தெறிக்கும் வீர முழக்கம்!

ஒருமாத காலமாகவே போராட்டத்தைப்பற்றி டால்மியாபுரத்தைச் சுற்றியிருந்த ஊர்கள் பலவற்றிலும் அவர் பேசிக் கொண்டிருந்தார்.

அன்று கடைசிப் பேச்சு!

தாயிடம் விடை பெற்றதையும், மனைவியிடம் விடை பெற்றதையும் பற்றி மிக உருக்கமாகப் பேசினார்.

"ஒன்று 'டால்மியாபுரம்', 'கல்லக்குடி'யாக வேண்டும். இல்லையென்றால் என் பிணம் விழ வேண்டும்!" என்று முடித்தார்.

கூட்டம் கைதட்டிக் கலைந்தது;

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# விருட்சம்

விடியற்காலை மூன்று மணி இருக்கும். நல்ல மழை. அப்பொழுது தான் அந்தச் சப்தம் கேட்டது. முருங்கை மரம் முறிந்து விழுகின்ற சடச்சடவெனும் சப்தம். ராதிகா உடனடியாக விழித்துக் கொண்டாள். அப்புறம் எப்படித் தூக்கம் வரும்?

மழை-சாதாரணமான மழை இல்லை. அடை மழை. ஒரு வாரம் சூரியனே தெரியாதபடிக்கு மழை. தெருவெங்கும் முழங்கால் அளவுக்கு தண்ணீர் நிற்கிறது. புறநகர்ப் பகுதியில் சதுர அடி பத்து ரூபாய்க்கு கிடைக்கிறது என்று வாங்கிப்போட்ட இந்த இடம் இவ்வளவு உபத்திரவத்தைத் தரும் என்று யார் நினைத்தார்கள்?



இரா. இளங்கோவன்

தேவா இதுபற்றி எந்தக் கவலையும் இல்லாமல் தூங்கிக் கொண்டிருப்பது அவளுக்கு மேலும் எரிச்சலைத் தந்தது. ஆபீசுக்கு எப்படியோ மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டு இவரால் போய்விட முடிகிறது. அவளுக்குத்தான் மழையால் பெரும் சங்கடம்.

இந்த மழை இன்னும் இரண்டு நாட்களுக்குத் தொடரும் என டெலிவிஷன், வானிலை அறிக்கையில் நேற்று சொல்லி விட்டார்கள்.

முருங்கை மரம் விழுந்த சப்தம்தான் அவளை மிகவும் பாதித்தது. குழந்தை மாதிரி பார்த்துப் பார்த்து வளர்த்த மரம்.

படுக்கையறையில் சன்னலைத் திறந்து மரம் விழுந்த திசையைத் தேடினாள். இருட்டில் ஒன்றும்தெரியவில்லை. காற்று சுழன்று சுழன்று வீசியது. சாரல் திடீரென திசைமாறி அவள் முகத்தில் வந்து விழுந்தது.

அலமாரியிலிருந்து டோர்ச் விளக்கை எடுத்து தோட்டத்தை நோக்கி ஒளியைக் காட்டினாள். கம்பி கம்பியாய் மழை விழுவது மட்டும்தான் புரிந்தது.

இடம் வாங்கியதுமே முதல் வேலையாக அவள் முருங்கைதான் வைத்தாள். தென்னை, பலா, தேக்கு என்று பிற மரங்கள் எல்லாம் பின்னால் உருவானவைதான்.

அம்மா வீட்டில் இருந்துதான் அந்தச் செடியை அவள் கொண்டுவந்தாள். அப்பா எங்கேயோ விவசாயப் பண்ணையில் செடி முருங்கை என்று சொல்லி விற்பனை செய்த விதைகளை வாங்கி வந்து முளைக்கப் போட்டிருக்கிறார். எல்லா விதைகளுமே முளைவிட்டு வீரியத்தைக் காட்டியிருக்கிறது.

அம்மா ஒரே ஒரு வளப்பமான செடியை மட்டும் வேர் மண்ணோடு தோண்டி எடுத்துப் பொலித்தீன் பையால் கட்டி அவளிடம் கொடுத்தாள்.

காலிமனையின் கிழக்கு மூலையில் செடியை வைத்து உயிர்த் தண்ணீர் ஊற்றினாள். இரண்டு நாள் வாடிய மாதிரி வதங்கியிருந்தது. அப்புறம் சில நாட்களில் வேர் புது இடத்தில் பிடித்துக்கொண்டது.

வீட்டுக் கட்டடம் எழும்ப எழும்ப செடியும் வளர்ந்து கொண்டேபோனது. வீட்டு வேலை நடக்கிற சமயத்தில் அங்கு அடிக்கடி ராதிகா வரநேரும். ஒவ்வொரு முறையும் அவளே கைப்பட ஒரு குடம் நீர் ஊற்றுவாள். அந்தச் செடியைப் பார்க்கிற பொழுதெல்லாம் அம்மாவின் ஞாபகம்தான் வரும்.

செடி முருங்கை என்பது ஒரு காரணப் பெயர். மரமாகின பின்தான் காய்த்தது. காய்ப்பு என்றால் சாதாரணம் இல்லை. சடைசடையாய் காய்கள். மரம் முழுவதும் கண்ணை அடைக்கிற மாதிரி அவ்வளவு காய்கள்.

தெருவில் உள்ள அனைவருக்கும் கொடுத்தது போக, மரத்தில் இருநூறு காய்கள் பறிக்க ஆளில்லாமல் தொங்கும். பலரும் வற்புறுத்திய பின்னர் சந்தையில் காய்கறி விற்கிற வியாபாரி ஒருவரைத் தேடிப்பிடித்து முருங்கைக்காய் பறிக்க நூறு ரூபாய்கொடுத்துவிட்டு எல்லாக் காய்களையும் பறித்துக் கொள்வதாக ஒப்பந்தம் ஆனது. ஆனால் அவனால் ஒழுங்காய் எல்லா காய்களையும் சேகரிக்க முடியவில்லை. இரண்டு கிளைகள் ஒடிந்து போனதற்காக கோபப்பட்டு முகத்தில் அடித்தாற் போல் பணத்தைத் திருப்பித் தந்தாள்.

குழந்தை மாதிரி பழகிய மரத்தை ஒடிப்பதா: இவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இந்தப் பேய் மழை எல்லா உறவுகளையும் ஒரே நாளில் பறித்து விட்டது.

தேவாவைப் படுக்கையிலிருந்து எழுப்பி தோட்டத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு வரச் சொல்லலாம். ஆனால், மனிதர் இதற்கெல்லாம் மசிகிறவர் இல்லை. 'ஏன் எழுப்பினாய்?' என்று எரிந்து விழுந்தாலும் விழலாம். எதற்கு வம்பு?

மறுபடியும் படுக்கையில் விழுந்து ராதிகா தூங்க முயன்றாள். ஆனால், சுலபத்தில் தூக்கம் வரவில்லை.

விடிந்ததும் தேவாதான் இவளை முதலில் உலுக்கி எழுப்பினான். நன்றாக விடிந்திருந்தது. மழை இப்பொழுது அவ்வளவாக இல்லை.

ஃப்ரிஜ்ஜிலிருந்து பாலை எடுத்து காஸ் அடுப்பில் வைத்தாள்.

தோட்டத்திலிருந்து தேவா கூப்பிடும் சப்தம் கேட்டது.

"ராதிகா! ராதிகா! இங்கே வந்து பாரேன். இராத்திரி காத்திலேயும் மழையிலேயும் ஆன்டெனா பிடுங்கிக் கிட்டு கீழே வந்து விழுந்து கிடக்கு."

ராதிகாவுக்கு இப்பொழுது எல்லாம் விளங்கிவிட்டது. இராத்திரி கேட்ட சப்தம் முருங்கைமரம் ஒடிந்ததினால் அல்ல; ஆன்டெனா விழுந்ததால்தான்!

ராதிகா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

"இதை ரிப்பேர் செய்ய முந்நூறு ரூபாய் தேவைப்படும்!" என்று தேவா புலம்பியபடி விழுந்து கிடந்த அலுமினியச் சட்டங்களைப் பொறுக்கத் தொடங்கினான்.

முருங்கைமரம் பூக்களோடு காற்றில் வளைந்து வளைந்து ஆடுவதை ராதிகா இரசிக்கத் தொடங்கினாள்.

# பூங்கா அருகில் ஓர் அப்பா

எஸ். செந்தில்

எதிர்வீட்டு அருண், என் மகள் சுமதிக்கு எழுதிய கடிதம் என் வீட்டில் ஒரு சூறாவளியாக அடித்துக் கொண்டிருந்தது. இப்போது நான், அம்மா மற்றும் மனைவியின் தாக்குதலால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

"இதை நாம இப்ப சாதாரணமாக நினைச்சி விட்டுட்டா... அதையே ஒரு நல்ல சந்தர்ப்பமாக எடுப்பான். நேரே அவன் வீட்டுக்குப் போய் வாசல்ல நின்று அவனோட அப்பாகிட்ட நாலுவார்த்தை நாக்கப் புடுங்கிற மாதிரி- மானம் போற மாதிரி கேட்டாத்தான் என் மனசே அடங்கும்!" என்ற, என் மனைவியைத் தொடர்ந்து என் அம்மாவும், அவர் பங்குக்கு இதையே வலியுறுத்தினார்.

நான் எதுவுமே பேசாமல் அமைதியாய்-நிதானமாய் யோசித்துக் கொண்டிருப்பது என் மனைவியின் கோபத்தை இன்னும் சிறிது அதிகரித்திருக்க வேண்டும். முன்னை விடவும் வேகமாகவும், சத்தமாகவும் கத்தத் தொடங்கிவிட்டாள்.

"இப்ப நீங்க ரெண்டு பேரும் அமைதியாய் இருக்கப் போறீங்களா? இல்லையா?" என்று அதட்டியவுடன், அம்மா சிறிது அமைதியானாலும் என் மனைவியின் முணுமுணுப்புத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

மெதுவாய் நடந்து சென்று எனது சட்டையை எடுத்துப்போட்டுக்கொண்டு, மூக்குக் கண்ணாடியை சட்டையின் மேல் பாக்கெட்டில் சொருகியவாறே தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினேன்.

மனைவியோ, அம்மாவோ சொல்கிறபடியெல்லாம் செய்ய முடியாது. செய்யவும் கூடாது. நிதானமாய் யோசித்துத்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

இந்தக் காலத்து வாலிபர்கள் ஒரு வயசுப் பொண்ணுக்கு காதல் கடிதம் எழுதுவதை சிகரெட்டு குடிப்பதுபோல், சினிமா பார்ப்பது போல் சாதாரணமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நண்பர்களிடத்தில், "டேய் மச்சான்! அந்த மஞ்சள் தாவணி நம்ம ஆளுடா!" என்று சொல்லிக்கொள்வது அவர்களின் தகுதியை உயர்த்துவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். காதல் கடிதம் எழுதுவதை ஒரு தகுதியாய், பெருமையாய், தெளிவாய்ச் சொன்னால், ஒரு மதிப்பு. சாதாரணமாக நினைத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு இதைத் தவறு என்று அவர்களுக்கு உணர்த்துவதே சிரமமான காரியம்.

ஒரு தவறை தவறென்று ஒப்புக்கொள்வதுதான் பெருந்தன்மை. ஆனாலும் அதை தவறென்று உணர்த்துபவர் எந்த நேரத்திலும் தன்னிலை மறக்காது நிதானமாய் புரியவைப்பதில்தான் மற்றவரின் பெருந்தன்மையை வெளிப்படுத்த முடியும்.



அதிலும் தான் ஒரு கல்லூரி அதிபர் என்கிற போது மிகவும் பொறுப்பாய்ச் செயல்பட வேண்டும். என்னுடைய அனுபவத்தில் எத்தனையோ ஆயிரக்கணக்கான அருண்களைப் பார்த்துப் பக்குவப்பட்டுப் போயிருப்பதால் இது எனக்கு ஆச்சரியத்தையோ, அதிர்ச்சியையோ ஏற்படுத்தவில்லை. சாதாரணமாக நினைத்து செயல்படும்போதுதான் நல்ல முடிவுகளை எடுக்க முடியும்.

குழப்பமான சிந்தனைகளுடனேயே நடந்து சென்று அந்தப் பூங்காவில் வந்து அமர்ந்தேன். மனைவியும் அம்மாவும் அருணைத் தண்டிப்பதில் மட்டுமே குறியாக இருக்கிறார்கள். அருணை பகிரங்கமாக தண்டிப்பதன் மூலம் சுமதியும் பாதிக்கப்படுவாள் என்பதையும் எண்ணிப் பார்த்தேன்.

அருணை நேரில் பார்த்துப் பேசினால் என்ன? பேசலாம்.

அருண் என்னைக் கண்டதும் சங்கடமாய்ப் பார்த்தான். பரபரத்தான். நான் சுற்றி வளைக்காமல் விசயத்திற்கு வந்தேன்.

"சுமதியுடன் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ பேச உனக்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கலாம். இந்த சொற்பநேர பரிச்சயத்தை வைத்து சுமதியின் விருப்பு, வெறுப்புக்களையோ, ரசனைகளையோ, ஆர்வத்தையோ, அவளுக்கு ஈடுபாடுள்ள விஷயங்களைப் பற்றிய ஒரு சிறு பகுதியைக்கூட உங்களால் முழுமையாக உணர்ந்திருக்க முடியாது.

லவ் லெட்டர் எழுதறதுங்கறது சும்மா ஒரு பொழுதுபோக்கான சமாச்சாரம் இல்லை மிஸ்டர். சரி ஒரு பேச்சுக்காக 'சார்! நான் உண்மையாகவே சுமதியை காதலிக்கிறேன். அவளைத் திருமணம் செய்து கொள்கிறேன்.

அவள் இல்லாத என் வாழ்க்கையைப் பற்றி என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது' என்றெல்லாம் நீங்கள் சொல்வீர்களேயானால், சுமதி பார்க்க இலட்சணமாய், அழகாய் இருப்பது மட்டுமே காரணமாய் இருக்க முடியும்.

ஏன்னா, அவளோட குணாதிசயங்கள், பழக்க வழக்கம், சுபாவம் போன்ற எதுவுமே முழுமையாய் தெரியாமல் அவளுக்கு லவ் லெட்டர் எழுதியிருக்கிறீர்கள்.

ஒரு பெண்ணைக் காதலிப்பதற்கோ, கல்யாணம் செய்து கொள்வதற்கோ அழகு மட்டும் இருந்தால் போதாது மிஸ்டர் அருண். அழகுக்கு அப்பாற்பட்ட எத்தனையோ சங்கதிகள் ஒன்றி வரவேண்டும்.

ஒரு பெண் அழகாய் இருப்பதால் மட்டுமே காதலிக்கும் நீங்கள், அவளைவிட அழகான ஒரு பெண்ணை சந்திக்கவோ அல்லது அவளுடன் பழகவோ நேர்ந்தால் நீங்கள் சலனமடைய மாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம் மிஸ்டர் அருண்?"

இந்த வார்த்தைகள் அவனுக்குள் ஒரு புதிய பரிமாணத்தை உணர்த்தியிருக்க வேண்டும். அவன் முகம் அதைத் தெளிவாய்க் காட்டிக் கொண்டிருக்கிறது. என்னையோ, என் முகத்தையோ பார்க்கத் திராணியற்றவனாய் குனிந்த தலையை நிமிர்த்தாமல் தரையையே வெறித்துக் கொண்டிருந்தான்.

மெதுவாய்த் தலையை நிமிர்த்தி, "சார் என்னை மன்னிச்சிடுங்க சார்!" என்றான். அவமானத்தினாலா அல்லது வெட்கத்தினாலா என்று சொல்ல முடியாதபடிக்கு அவன் முகம் வெளிறிப் போயிருந்தது. "பரவாயில்லை! இனிமேலாவது புத்திசாலித்தனமாய் நடந்துகொள்!" என்று சொல்லி விட்டு வீட்டுக்குத் திரும்பி நடந்தேன்.

நான்கு, ஐந்தடி எடுத்து வைத்திருப்பேன். "சார் ப்ளீஸ்!" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தேன். கூப்பிட்டது அருண்தான். 'என்ன' என்பதுபோல ஒரு பார்வை பார்த்தேன். இரண்டடி அருகில் வந்தான். ஆனாலும் சற்று விலகியபடியே நின்றான். "சார்! ஒரு ஸ்மால் ரிக்வெஸ்ட்" என்றான்.

"என்ன?"

"நான் உங்களை அப்பான்னு கூப்பிடலாமா?"

# மனிதர் மாறிவிட்டார்

ஷர்மிளா இஸ்மாயில்

ஞாயிறு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கையில் 'டியூட்டரி' கல்வி விளம்பரங்கள் பல கண்ணைக் கௌவின. 'டியூட்டரி' என்றதும் சுசித்ராவிற்கு சந்திரன் சேரைத்தான் நினைவுக்கு வந்தது.

'செத்துப்போய் விட்டாராமே! உண்மையாயிருக்குமா? வயது கூட நாற்பது-நாற்பத்தைந்தைத் தாண்டியிருக்கமாட்டாது. மனைவி என்ன ஆனார்? பிள்ளைகள் இருப்பார்களோ?'

எதுவும் தெரியவில்லை. சுசித்ரா கல்வி கற்ற பெண்கள் கல்லூரியில் ஆசிரியரான சந்திரன் பின்னேர வகுப்புகளை 'டியூட்டரி'யிலும் எடுத்தார். கணிதத்தில் புலியெனலாம். நீண்டகாலம் அந்தப் பெண்கள் கல்லூரியில் வேலை செய்ய அவர் நல்ல தைரியசாலி தான். நெடிய உயரமும் சிவந்த கண்களும்-



அவரைப் பார்க்கையில் ஒரு லேசான பயத்தைத் தோற்றுவிப்பது உண்மையே. கண்டிப்பானவர். என்றாலும் சில சமயங்களில் வகுப்பு போரடிக்கையில் கலகலப்பாகக் கதைத்துச் சிரிப்பூட்டுவார்.

மாணவிகளில் நிறையப் பேருக்கு அவரைப் பிடிக்காது. சிரிப்பது போல லேசாக பாவனை செய்வார்கள். சுசித்ராவுக்கும் அவரைக் கண்டால் அலர்ஜிதான். ஆனாலும் நல்ல பெறுபேறுகளை எடுக்க அவரது கற்பித்தல் உதவியது என்பதை மறுக்க முடியாது. கண்டிப்பு, அதிகாரப் போக்கு, கடுகடுப்பு என்பது அவரது இயற்கையான குணம்.

வகுப்பில் விஜி, சுஜி எனும் இரட்டைச் சகோதரிகள்! ஒரே அச்சில் வார்த்தது போல்- சக மாணவிகளுக்கே அவர்களை இனங்காண்பதில் அடிக்கடி குழப்பம் வரும். ஒரு முறை 'ஹோம் வேர்க்' செய்யாமல் வந்திருந்த விஜியைப் பிடித்துக் கொண்டார் சந்திரன் சேர். "எழும்பும் எழும்பி நின்று வீட்டு வேலையை இப்போதே செய்து முடியும்!" என்று கடுகடுத்துக் கொண்டிருந்த சேரை பிரின்ஸிபல் அழைப்பதாகத் தகவல் வந்தது; போனார்.

"விஜி நீ உட்காருடி. சுஜியை எழுப்பி விடுவோம். என்ன நடக்குதுன்னு பார்ப்போம்!" என்றவாறு ஆளை மாற்றி நிற்க வைத்தார்கள். இது தெரியாமல் மீண்டும் வந்து சுஜியை விஜியென நினைத்து கண்டிப்பான வார்த்தைகளோடுகூடிய உபதேசம் வழங்கிய சந்திரன் மாஸ்டரை முழு வகுப்பும் சிரிப்பை அடக்கியவாறே கவனித்தது. சுசித்ராவுக்கு அதை நினைக்க இன்னும் சிரிப்பு வரும்.

மாணவிகளின் நமுட்டுச் சிரிப்பு சந்தேகத்தை தோற்றுவிக்க, விசாரித்தார்- ஆள் மாறாட்டம் தெரியவரவே ஆவேசமானார். முழுவகுப்பையும் கல்லூரி விடும்வரை வெயிலில் நிற்க வைத்தார்.

சந்திரன் சேர் கணிதம் படிப்பித்தார் என்றாலும் தமிழிலும் நல்ல புலமை. சுசித்ராவுக்கோ 'ளகர, லகர' குழப்பம். உச்சரிப்பு வேறு சரியாக வராது. வகுப்பில் ஒரு நாள் மாஸ்டரின் கேள்விக்கு 'ளகரப்' பிழையோடு பதில் சொன்னாள். பிடித்துக் கொண்டார். கணிதத்தை விட்டுவிட்டு இலக்கணம் பற்றிப் படிப்பிக்கத் தொடங்கினார். முழு வகுப்புக்கும் கடுப்பு ஏறியது. அன்றிலிருந்து சுசித்ராவிற்கு அவருடன் ஒருவித எரிச்சலுணர்வு ஏற்பட்டது; மறையவேயில்லை.

"ஏன் இன்னும் சந்திரன் சேர் கல்யாணம் முடிக்கவில்லை" என்பது கல்லூரி மாணவிகள் அடிக்கடி குசுகுசுக்கும் வினா. "இந்த கடுப்பு மனுஷனுக்கு யார்தான் பொண்ணு குடுப்பாங்க? இல்ல இவரது மூஞ்சை எந்தப் பொண்ணுதான் விரும்பப் போகுது" என கேலியாகப் பேச்சுக்கள் எழும்.

சினிமா நடிக, நடிகைகள் பாணியில் இரகசியமாய் திடீரென்று ஒரு அழகான பெண்ணை கல்யாணம் பண்ணிக் கொண்டதாய் கேள்விப்பட்டது. பாதையில் அவருடன் மனைவியையும் கண்டு வந்த விஜி, "ஐயோ, இந்த மனுஷருடன் அவங்க எப்படித்தான் இருக்கப் போறாங்களோ?" என அங்கலாய்த்தாள். கல்லூரிக்கே வியப்பாய் இருந்தது அவரது திடீர்க் கல்யாணம்! என்ன, எப்படி, எவ்வாறு இது நடந்தது என யாருக்கும் புரியவில்லை.

இப்போதெல்லாம் சந்திரன் மாஸ்டர் நிறைய புகை பிடிக்கிறாராம். குடிப்பழக்கம் வேறு தொற்றிக்கொண்டதாம். பல்வேறு வதந்திகள் பரவின. வாழ்க்கையில் ஏதோ சிக்கல் போல- மனைவியுடன் தகராறோ தெரியவில்லை. கல்லூரியில் ஒழுங்காகப் பாடமெடுப்பதில்லை. டியூட்டரியிலேயே-அதுவும் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாய் இருந்தார்.

பலன்-குறுகிய காலத்திலேயே மனைவியிடமிருந்து விவாகரத்து வேறு. மனிதர் தலைகீழாக மாறிப்போனார்: 'எப்படியெல்லாம் உபதேசங்கள் செய்தவர் இவரே இப்படியாகி விட்டாரே!' மாணவிகள் பரிதாபப்பட்டார்கள் சிலர். எல்லோருமல்ல.

சுசித்ரா கல்லூரியைவிட்டு விலகும் போது மாஸ்டருக்கும் மாற்றல் வந்திருந்தது. அத்தோடு அவரைப் பற்றிய நினைவுகளும் மறைந்து போயின.

"சந்திரன் சேர் செத்துப்போயிட்டார்டி! நுரையீரல் புற்று நோயாம்." திடீரென ஒருநாள் சந்தித்தபோது விஜி சொன்னாள். என்னவோ தெரியவில்லை, சுசித்ராவுக்கு தான் அன்றுவிட்ட 'ளகரப்' பிழை தான் நினைவுக்கு வந்தது. அத்தோடு-கால்கடுக்க வெயிலில் நின்றதும்!

# அவள்

கி.வே.ரா

சல்வார் கம்மீஸ் அணிந்து 'தளதள' வென்று ஒரு பெண் வந்து உட்கார்ந்ததும் பாஸ்கருக்கும் ஜீவாவுக்கும் நம்பிக்கை நாடி தளர்ந்து விட்டது. இண்டர்வியூ நடத்துகிறவர் இளைஞராயிருந்தால் நிச்சயம் அந்தப் பெண்ணைத்தான் தேர்ந்தெடுப்பார்.

ஆஃபீஸ் ஹோலினுள் அவர்கள் எட்டிப் பார்த்தார்கள். டீன் ஏஜ் மாநாடு நடப்பது மாதிரி ஒவ்வொரு சீட்டிலும் ஒவ்வொரு பெண். ரம்பாவாய், சிம்ரானாக, விசித்ராவாக 'என்னைப் பார் என் அழகைப் பார்' என்றிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் பாஸ்கருக்கும் ஜீவாவுக்கும் கொஞ்சம் நஞ்சமிருந்த நம்பிக்கையும் போய்விட்டது.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். வேலை பார்ப்பவர்கள் அனைவரும் பெண்களாக இருக்கிறார்கள். அப்படியானால் புதியதாகத்-தேர்ந்தெடுக்கப் படுபவரும் பெண்ணாகத்தானே இருப்பார்!

"இண்டர்வியூ ஆரம்பிக்கலியா?" என்று கேட்டுக்கொண்டே சிறிது நேரம் பொறுத்து ஒரு இளைஞன் வந்தான்.

"இல்லை!" என்றாள் அவள்.

"ஜீவா...! இன்னொருத்தன் வேற வந்துட்டான்... பாவம், முதல் இண்டர்வியூ போல இருக்கு... முகத்திலே ரொம்ப நம்பிக்கை தெரிகிறது... ஏமாந்துதான் போகப் போறான்!" என்றான் பாஸ்கர்.

இண்டர்வியூ செய்யும் அதிகாரி வந்தார். இருபத்தெட்டு வயது இளைஞர். வருகிற பொழுதே பார்வை பெண்கள்மீதுதான்.

ஜீவா எழுந்து விட்டான். "பாஸ்கர், வா...! போகலாம்... வேலை அந்தப் பெண்ணுக்குத்தான்..." என்றான்.

இருவரும் இண்டர்வியூவுக்கு நிற்காமலேயே வெளியில்போய் விட்டார்கள்.

"அண்ணா!" என்றாள் அவள்.



மூன்றாவதாக வந்த இளைஞன், "என்ன தாரா?" என்றான்.

"நான் வந்திருப்பதைப் பார்த்து தங்களுக்கு வேலை கிடைக்காது என்று தீர்ப்பளித்துக்கொண்டு அந்த இரண்டு இளைஞர்களும் போய்விட்டார்கள்... நீ ஒருவர்தான் இருக்கிறாய்... உனக்குத்தான் வேலை.... ஓல் த பெஸ்ட்...! இந்த ஆஃபீசில் வேலை செய்கிற என் தோழி பவித்ராவைப் பார்க்க வந்தேன்-பை!" என்று சொல்லிவிட்டு, தாரா ஆஃபீஸ் ஹோலுக்குள் நுழைந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# நிற்காது மூச்சு

**இலக்கிய நயம்**

**தலைவன்:**
முத்தே! முழு நிலவே!-என்
கட்டான காவியமே
பத்தோடு பதினொன்றல்ல
சத்தான நம் காதல்!

**தலைவி:**
உண்மைதான் அத்தான்
வெண்மைதான் பால்-அதுபோல்
உண்மைதான் உம் கருத்து!

**தலைவன்:**
சித்திரமே! சில்லென்ற
தென்றல் காற்றே!
பத்திரமாய் நான் வெளியூர்
போய் வரவா?

**தலைவி:**
மயிலிறகால் வருடிவிட்டு
சவுக்கெடுத்து சாடுகிறீர்!
மனதை மெல்ல வருடிவிட்டு
முள்ளெடுத்து செருகுகிறீர்!

**தலைவன்:**
கள்ளிருக்கும் இதழ்காரி
சொல்லெடுத்து வீசாதே!
பல் என்ற முத்துக்களை
கல் ஆக்கி எறியாதே!

**தலைவி:**
வார்த்தைகளை வாளாக்கி
வீசுவது நீர்தானே!

**தலைவன்:**
உன் கண்ணில் வாளிருக்க
எனக்கெதற்கு இன்னொரு வாள்?

**தலைவி:**
பேச்சாலே மயக்காதீர்
பிரிந்தென்னை வதைக்காதீர்!

**தலைவன்:**
வானை நிலவு
பிரிய மறுத்தால்
விடியல் பிறக்காது!

வானை கதிரவன்
பிரிய மறுத்தால்
இரவு பூக்காது!

பூவை வண்டு
பிரிய மறுத்தால்
காயும் இருக்காது
கனியும் கிடைக்காது!

தாயின் கருப்பையை
பிரிய மறுத்தால்
ஜனனம் இருக்காது!

உடலை உயிர்
பிரிய மறுத்தால்
பூமி தாங்காது!



**தலைவி:**
ஒன்று கலந்த
இதழ்கள் பிரிந்தால்
சுவையும் இருக்காது!

பாலும் சுவையும்
பிரிந்து போனால்
மதிப்பே இருக்காது!

கலந்த மனங்கள்
பிரிந்து போனால்
காதல் இருக்காது!

**தலைவன்:**
இதழ்கள் நான்கும்
பிரிந்து பிரிந்து
சேரும்போதே
சுகங்கள் பிறக்கிறது!

தேகம் இரண்டும்
பிரியும் போதே
தாகம் எடுக்கிறது!

இணைவதும், பிரிவதும்
இரவும் பகலும்
இயற்கையின் நியதி!

பிரிவோம், சந்திப்போம்
பிரிவில் சிந்திப்போம்!
ஒருவரை ஒருவர்
சிந்தித்தபடியே
மறுபடி சந்திப்போம்!

**தலைவி:**
பொன் பெரிதா?
பொருள் பெரிதா?
எம் இனிய
காதல் பெரிதா?

**தலைவன்:**
பொன் சிறிது
பொருள் சிறிது
பூப்போன்ற உன்
மனம் பெரிது!

**தலைவி:**
பின் எதற்கு
பிரிவு?
பின் எதற்கு
போகிறீர் தொலைவு?

**தலைவன்:**
பூப்போன்ற உன்னை
வாடாமல் வைத்திருக்க
பொன் தேவை!

**தலைவி:**
வாடாது வைத்திருக்க
பொருள் தேடுவீர்!
நீர் வருவதற்குள்
நான் வாடிவிட்டால்
யாது செய்குவீர்?

**தலைவன்:**
வண்டாக என் நினைவு
உன்னை வட்டமிடும்!

நான் தூரப் போனாலும்
என் கரங்கள்
உன் நினைவில்
கட்டியணைப்புத் தரும்!

தித்திக்கும் உன் இதழில்
நான் தந்த முத்தங்கள்
எத்திக்கு நான்
சென்றாலும்
காயாமல் இனித்திருக்கும்!

விளக்கெரிய,
அவ் ஒளியில்
நாம் எரிந்து
பேரின்ப தீ வளர்த்த
நிமிஷங்கள் யுகங்களுக்கும்
உன் கூட வரும்!

கையருகில் நீயிருக்க
கண் எதிரே கனியிருக்க
இதழ் மீது பசியிருக்க
உன் கூந்தல் மடலாக
உன்னை நீ பரிமாற
நான் களித்த நாளெல்லாம்
என்னுடனும் கூட வரும்!

**தலைவி:**
கூட வந்து
என்ன பயன்?
கூடியிருக்க வழியற்று
இரு திசையில் போனபின்னர்
நினைவுகளும் எறும்பாகி
தினம் கடிக்கும்!

**தலைவன்:**
கரும்புதான் கண்ணே
எம் காதல் நினைவுகள்
கரும்பை நாடி
எறும்பு வரும்தானே!

**தலைவி:**
எறும்பும்
நீராக இருக்கட்டும்!
உடும்பும்
நீராக இருக்கட்டும்!
வேறு எதுவும்
வேண்டாம் எனக்கு!

**தலைவன்:**
உடும்புப் பிடி என்று
சிணுங்கியதெல்லாம்
பொய்யா?
இன்று நீ சொல்வதுதான்
மெய்யா!

**தலைவி:**
'பிரியேன்' என்று
பிதற்றியதை
உறுதி என்று நம்பியதால்
உள்ளம் உடன்பட
மறுக்கிறது!

**தலைவன்:**
பிரியோம் என்பது
மெய்தானே!
மனதால் பிரியோம்
மெய்தானே!

**தலைவி:**
போதும் நிறுத்தும்
போதும் ஐயா!



**தருவது ரசிகன்**

பிரிவு என்பதும்
மூன்றெழுத்து வார்த்தை!
மூச்சு என்பதும்
மூன்றெழுத்து வார்த்தை!

முன்னதால் பின்னதை
நிறுத்த நினைத்தால்
என்னிடம் கூறும்!

**தலைவன்:**
?....?....?
(வாயடைத்துப் போகிறான்
தலைவியின் கட்டளையை மீறவோ
முடியும்)

*"செல்லாமை உண்டேல்*
*எனக்குரை–மற்று நின்*
*வல்லரவு வாழ்வார்க்கு உரை!"*

அதிகாரம்: 116, குறள்: 1151

## சிந்தியா பதில்கள்

*** சிந்தியா! சார்க் மாநாடு பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

வி. பானுமதி, நீர்கொழும்பு.

*அநியாயச் செலவு!*

●●

*** 'லெஸ்பியனிசம்' என்கிறார்களே, அதன் அர்த்தம் என்ன?**

செ. சிவஞானம், திருமலை.

*பெண்ணும் பெண்ணும் உடல் ரீதியாகக் கொள்ளும் நட்பு! சமீபத்தில் படித்த தகவல் ஒன்று:*

*கிரேக்க நாட்டுக்குச் சமீபமாக லெஸ்போஸ் என்ற தீவு உள்ளது. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அத்தீவில் மருந்துக்கும் ஆண்களே கிடையாது. எல்லாமே பெண்கள்தான். அங்கு பெண்கள் உடல்ரீதியாக நட்புக் கொண்டு சுகம் கண்டனராம். அதனைப் பற்றி கிரேக்கப் பெண் கவிஞர் ஒருவர் புகழ்ந்து பாடியதால், விஷயம் அம்பலமாகியது. அந்தத் தீவின் பெயரிலேயே 'லெஸ்பியன்' என்று அழைக்கத் தொடங்கிவிட்டனர்.*

●●

*** பி.ஜே.பி. ஆட்சி நிலைக்குமா?**

ஆர். ராஜேஸ்வரன், யாழ்ப்பாணம்.

*தமிழகக் கல்லூரி மாணவிகளிடம் பி.ஜே.பி. என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? 'பயங்கரமான ஜொள்ளுப் பார்ட்டி' என்று அர்த்தம்! ஆ.... என்ன கேட்டீர்கள்? தற்காலிகமாக நிலைக்கும்!*

●●

*** அடுத்தவர் தவறை நாசூக்காகச் சுட்டிக் காட்டவேண்டும் என்கிறார்களே, அது எப்படி?**

பி. குணாளன், மட்டக்களப்பு.

*ஒரு அதிகாரி தன்னுடைய அலுவலகத்தில் வேலை செய்யும் ஊழியரைப் பார்த்து,*

*"ஏம்பா! ஒன்பது மணிக்கு அலுவலகம். நீ பதினொரு மணிக்கு வருகிறாயே?" என்று கேட்டார்.*

*"வீட்டில் அசந்து தூங்கி விட்டேன். எழுந்திருக்க நேரமாகிவிட்டது!" என்றாராம்.*

*அதற்கு அதிகாரி, "அடடே! நீ வீட்டிலும் வேற தூங்குகிறாயா?" என்று கேட்டாராம்.*

●●

*** சார்க் மாநாட்டை புறக்கணிப்பதாக தமிழ்க் கட்சிகள் அறிக்கை விட்டிருக்கலாம் அல்லவா?**

எம். தியாகராஜ், புத்தளம்.

*விட்டிருக்கலாம்! அரசாங்கம் தங்களோடு காய் விட்டால் என்ன செய்வது என்று யோசித்திருப்பார்கள்!*

●●

*** பெரிய நடிகர்களின் படங்கள் எல்லாம் தோல்வி காண்பது ஏன்?**

சி. எட்வேர்ட், மட்டக்களப்பு.

*இளைய நடிகர்கள் கதையுள்ள படங்களில் நடிப்பதால்!*

●●

*** இன்று தமிழ்ப்பட நடிகர்களில் இளம் உள்ளங்களைக் கவர்ந்தவர் யார்?**

செல்வி கே. துஷிதா, மன்னார்.

*விஜய்!*

●●



*** புதிதாக வந்துள்ள சூரியன் எஃப்.எம். பற்றி உமது கருத்து?**

எல். இரத்தினமாலா, கொழும்பு-10.

*புதிய பாடல் பிரியர்களுக்கு சந்தோசம் தருகிறார்கள்! ஆனால் தொலைபேசி உரையாடல் அதிகநேரம் எடுப்பதால் திகட்டுகிறது! அறிவிப்பாளர் ஒருவர் 'நேயர்கள்' என்பதை தவறுதலாக 'நாயர்கள்' என உச்சரித்து உடனே சுதாகரித்துக் கொண்டார்!*

●●

*** 'புகை உடலுக்குப் பகை' என்று தெரிந்தும் புகைபிடிக்கிறார்களே?**

திருமதி என். தவமணி, வவுனியா.

*திருமதிகள் பலர் சிகரெட்டுக்கு பகைமதிகளாக இருப்பதாகத்தான் பல திருவாளர்கள் புகார் ஊதுகிறார்கள்.*

*ஒரு கல்யாண வீட்டில் பெண் வீட்டுக்காரர்கள், "மாப்பிள்ளை இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?" என்று விசாரித்தார்கள்.*

*"அக்னி ஹோத்திரம் செய்துகொண்டிருக்கிறார் அந்த அறையிலே!" என்றார்கள்.*

*பெண் வீட்டுக்காரர்களுக்கு ஒரே பெருமை. மாப்பிள்ளை பக்திமானாக இருக்கிறாரே என்று ஒரே சந்தோஷம். ஓடிப்போய் அந்த அறைக்குள்ளே எட்டிப்பார்த்தார்கள்.*

*மாப்பிள்ளை சிகரெட்டை பற்றவைத்து புகையை விட்டுக் கொண்டிருந்தார்.*

●●

*** "மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை இல்லை!" என்று ஜனாதிபதி கூறியுள்ளாரே?**

சி. ரங்கநாதன், திருமலை.

*அமெரிக்கா போன்ற மூன்றாம் தரப்புக்கள் யுத்தம் செய்ய புத்தியஸ்தமும், பொருள் தானமும் வழங்கினால் போதும் என்கிறார்.*

●●

**சிந்தியா பதில்கள்**

*** செய்தித் தணிக்கை நீடிக்குமாமே?**

எம். சிவசங்கர், கொழும்பு-13.

*களநிலவரம் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை என்று அர்த்தம்!*

●●

*** தமிழ்க் கட்சிகள் பிரார்த்தனைக் கட்சிகளாக மாறிவிட்டனவே?**

செ. கணேசமூர்த்தி, மட்டக்களப்பு.

*உண்மையாகப் பிரார்த்தனை நடத்தியதாகவா நினைக்கிறீர்கள்? சேச்சே... மன்றாடக் கற்றுக்கொள்கிறார்கள்! நாளை மடிப்பிச்சை தான்!*

●●

*** சிந்தியா! பிள்ளைகளை நம் விருப்பப்படி வளர்ப்பதா? அல்லது அவர்கள் விருப்பம் போல வளரவிடுவதா?**

எஸ். கேதீஸ்வரி, மாத்தளை.

*பிரபஞ்சனின் நாவல் ஒன்றில் படித்ததைச் சொல்கிறேன்:*

*"நாயிடம் இருந்து நாயும், பூனையிடம் இருந்து பூனையும் வருவதுபோல, மனிதனிடமிருந்து மனிதன் வருதல் இயற்கை நியதி. ஆகவே உங்களிடமிருந்து உங்கள் பிள்ளை வருகிறதே அன்றி உங்களுக்காக வரவில்லை. எனவே உங்கள் பிள்ளை உங்களைப் போல இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். அவர்கள் அசல்களாக இருக்கட்டும். நகல்களாக இருக்கவேண்டாம்!"*

●●

*** வவுனியாவில் யாழ்ப்பாணத்தவர்களை புளொட் வெளியேறச் சொல்லியுள்ளதே?**

எஸ். கே. தமிழரசி, வவுனியா.

*புலிகள் இவர்களை வெளியேறச் சொன்னது சரிதான் என்று அர்த்தமாகிறது! யார் பலமாக இருக்கிறார்களோ, அவர்கள் யார் மேல் சந்தேகப்பட்டாலும் அவர்களை வெளியேற்றலாம் என்பதுதான் நீதியாகிறது! அரச படையினர்கூட இப்படி ஒரு உத்தரவைப் போடத் துணிந்ததில்லை. இந்த இலட்சணத்தில் அரச படைகளை புளொட் கண்டிக்கும் தார்மீக உரிமையை இழந்துவிட்டது! தவிர, யாழ்ப்பாணத்தவர்களை வெளியேறச் சொல்லும் புளொட், யாழ்ப்பாணத்தில் எப்படி அலுவலகம் வைத்திருக்கலாம்?!*

●●

*** அது என்ன பெயர்கள்-ரவளி, சிம்ரான்-நல்ல பெயர்களே கிடைக்கவில்லையா?**

கே. சுரேன், கொழும்பு-06.

*நீங்கள் என்ன அவர்களிடம் பெயர் பார்க்கவா படம் பார்க்கிறீர்கள்? இந்த லொள்ளுதானே வேண்டாங்கிறது!*

●●

*** சிந்தியா! வாஜ்பேயி ஏன் எதுவும் பேசவில்லை?**

சி. சந்திரசேகர், கொழும்பு-12.

*ஏற்கனவே, 'ஜா' வாயைத்திறந்து வாங்கிக்கட்டியபோது, கைகட்டி நின்ற தமிழ்க் கட்சிகளை நம்பி அவர் எப்படி வாயைத் திறப்பார்?!*

●●

*** ஜனாதிபதி சந்திரிக்கா தீர்வு யோசனை பற்றிக் கூற, இந்தியப் பிரதமர் மௌனமாக இருந்ததின் அர்த்தம் என்ன? மௌனம் சம்மதத்தின் அறிகுறியா?**

எஸ். சம்சுதீன், கொழும்பு-09.

*சங்கடத்தின் அறிகுறியாகவும் இருக்கலாம்!*

●●

## ஸ்போர்ட்ஸ்

### அவர் வருவாரா?



தோள்பட்டை வலி காரணமாக அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணியின் ஜாலப்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண், மீண்டும் பந்து வீசுவாரா என்பது சந்தேகத்திற்கு இடமாகியுள்ளது.

இந்தியாவில் அவுஸ்திரேலிய அணி சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது வலியால் அவதிப்பட்ட ஷேன் வோர்ண் அதைப்பற்றிக் கவலைப்படாமல் போட்டிகளில் பங்கேற்றார். அதைத் தொடர்ந்து ஷார்ஜாவில் இடம்பெற்ற போட்டிகளிலும் கலந்துகொண்டார்.

அதன்பின் கடந்த மே மாதம் வோர்ணுக்கு பெரிய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது இவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர், வோர்ண் பந்து வீச்சில் இறங்குவது சந்தேகத்திற்கு இடமாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவின் மெல்போர்ண் நகரில் இடம்பெற்ற விருந்து ஒன்றில் கலந்து கொண்ட ஷேன் வோர்ண்:

"இப்போதுள்ள நிலையில் விளையாடுவது சந்தேகமே. எனினும் இந்த ஆண்டின் இறுதியில் அணியில் இடம்பெறுவேன் என்று நம்புகிறேன். என்றாலும் இது நடக்குமா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!" என்று கூறியுள்ளார்.

28 வயதான ஷேன் வோர்ண் உலகின் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மூன்று ஒருநாள் போட்டிகள்

இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் இம்மாதம் 12,14,15 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

ஓமானின் தலைநகரான மஸ்கட்டில் முதலாவது போட்டியும், ஐக்கிய அரபுக் குடியரசுகளில் ஒன்றான துபாயில் இரண்டாவது போட்டியும், கட்டாரின் தலைநகர் டோஹாவில் மூன்றாவது போட்டியும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் அனைத்தும் பகலிரவுப் போட்டிகளாக நடைபெறவுள்ளன. இந்திய அணிக்கு முகமட் அஸாருதீனும், பாகிஸ்தான் அணிக்கு விக்கெட் கீப்பர் ரஷீத் லத்தீபும் தலைமை தாங்குகிறார்கள்.

### 16 நாடுகள் பங்குகொள்ளும்

கோலாலம்பூரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் கிரிக்கெட் போட்டிகளுக்கான ஆடுகளங்களைப் பார்வையிட முன்னாள் இலங்கை வீரர் ரஞ்சன் மடுகல்லவை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அனுப்பவுள்ளது.

பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டிகளில் இம்முறைதான் முதன் முதலாக கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறுகின்றன. செப்டெம்பர் 9ம் திகதி முதல் 19ம் திகதிவரை நடைபெறவுள்ள போட்டிகளில் 16 நாடுகள் கலந்துகொள்கின்றன. 16 நாடுகளும் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் அணிகள் அரை இறுதிக்குத் தகுதி பெறும். இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, அன்டிகுவா ஆகிய நாடுகள் 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ளன.

### ஒழுங்கு நடவடிக்கை

இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் விளையாடி வரும் சகலதுறை ஆட்டக்காரரான கறுப்பின வீரர் கிறிஸ் லூயிஸ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த வருடம் மே மாதம் இங்கிலாந்தில் நடைபெறுகிறது. இப்போட்டிக்காக பயிற்சியளிப்பதற்கு 37 பேர் கொண்ட அணியை இங்கிலாந்து கிரிக்கெட் சபை அண்மையில் அறிவித்தது.

இதில் கிறிஸ் லூயிஸின் பெயர் இடம்பெறவில்லை. இது லூயிஸிற்கு மிகுந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும அளித்தது.

இது தொடர்பாக லூயிஸ் கூறும்போது, "இங்கிலாந்து தேர்வாளர்கள் திறமையின் அடிப்படையில் வீரர்களைத் தேர்வு செய்யாமல், தங்களுக்கு வேண்டியவர்களை அணியில் சேர்த்துள்ளனர்," என்று தெரிவித்தார்.

இந்தப் பேட்டி, இங்கிலாநது தேர்வுக் குழுவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே லூயிஸ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 21

ஆண்டவரால் அருளப்பட்ட பத்துக் கட்டளைகள் ஒவ்வொன்றும் பல உப விதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. அவற்றை இன்றும் நடைமுறைப்படுத்துவதில் எத்தகைய சிரமமும் இருக்காது.

வாரத்தில் ஆறுநாட்கள் வேலை நாட்களாகவும், ஏழாவது நாள் ஒய்வு நாளாகவும் ஆக்கப்பட்டமை- இக்காலத்துக்கும்- எக்காலத்துக்குமே பொருந்தும் என்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம். இதேபோல் வயல் வெளிகளில் பாடுபட்டுழைப்போர், ஆறு வருடங்கள் பாடுபட்டுழைத்துவிட்டு ஏழாவது ஆண்டு முழுமையாக ஒய்வெடுக்க வேண்டும். உழைக்கும் மக்களுக்கு மட்டுமல்லாமல், விளைச்சலைக் கொடுக்கும் நிலத்தையும் ஒரு வருடம் முழுவதும் தரிசாகக் கிடக்க விட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், ஏனோ இந்த விதிமுறையினை இன்று எவரும் பின்பற்றுவதில்லை.

உலகில் இன்று மக்கள் தொகை மிக அதிகமாகப் பெருகிவிட்டது. மக்களின் பெருக்கத்துக்கு ஏற்றாற்போல் இன்று உற்பத்தி பெருகவில்லை. விளைச்சல் நிலங்களும் குறைந்துவிட்டன. இதனால்தான் ஓராண்டை ஒய்வாண்டாக நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

## மூன்று விழாக்கள்

எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை விடுதலையாக்கிய நாட்களைக் குறிக்குமுகமாக புளிப்பற்ற அப்பம் உண்ட நாளை ஒவ்வொரு வருடமும் நினைவுகூர்ந்து கொண்டாட வேண்டும்.

வயலில் விளைந்த தானியத்தை அறுவடை செய்யும் நாளை 'அறுவடை விழா'வாகவும், ஆண்டின் ஆரம்பத்தில் உழைப்பின் பயனை ஒன்று சேர்ப்பதற்கான நாளை 'சேகரிப்பு விழா'வாகவும்- மூன்று விழாக்கள் ஆண்டு தோறும் கொண்டாடப்படவேண்டும்.

ஒவ்வொரு நாட்டிலும் இத்தகைய விழாக்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. தமிழர்களாகிய நாமும் தைப்பொங்கலை உழவர் திருநாளாகவும் சித்திரை (தமிழ் மாதப்) பிறப்பை புது வருடதினமாகவும் கொண்டாடுகிறோம்.

மேலை நாடுகளிலும் கீழைத்தேய நாடுகளிலும் வெவ்வேறு பெயர்களில் இத்தகைய விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு திருமறையில் எக்காலத்துக்கும் பொருத்தமான பொது நெறிகள் நிறைந்திருப்பதை அவதானிக்கலாம்.

***

இஸ்ரயேலர்களுக்காக ஆண்டவரால் தெரிவு செய்யப்பட்ட கானான் தேசத்தின் எல்லைகளையும் கர்த்தர் வகுத்தளித்தார். செங்கடலிலிருந்து பெலஸ்தியர் கடல் வரை; பாலை நிலத்திலிருந்து யூப்பிரத்தீஸ் நதிவரையும் அவர்களுக்கான நாடு பரந்திருக்கும் என்று பிரகடனப்படுத்தினார். ஏற்கனவே எமோரியர், இத்தியர், பெரிசியர், கானானியர், இவ்வியர் மற்றும் எபூசியர் ஆகிய ஆறு இன மக்களும் கானான் தேசத்தில் வாழ்ந்து வந்தனர். இஸ்ரயேலர்கள் அந்நாட்டை அடைந்ததும் அந்த ஆறு இன மக்களையும் அங்கில்லாதொழித்து விடுவதாகவும் மக்களிடம் கூறப்பட்டிருந்தது.

மோசே மலையடிவாரத்தில் பலிபீடமொன்றை அமைத்து எரிபலிகளை நடத்தி வைத்தார். இஸ்ரயேல் சமுதாயத்தில் பன்னிரண்டு குலங்கள் இருந்தன. இதனை அடையாளமிட பலிபீடத்தின் அருகே பன்னிரண்டு தூண்களை எழுப்பினார்.

ஆரோன், நாதாபு ஆகியோருடன் பன்னிரண்டு குலத்தவர்களிலிருந்து ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த எழுபது தலைவர்களையும் அழைத்துக்கொண்டு மோசே மலையின்மீது ஏறினார். அங்கு அவர்களனைவருக்கும் கர்த்தர் பிரதியட்சமாகக் காட்சியளித்தார். ஆண்டவருடைய திருச் சொரூபத்தைக் கண்ட அவர்கள் பக்திப் பெருக்கால் உளம்பூரித்து, பூமியில் விழுந்து பணிந்தார்கள்.

## நாற்பது நாட்கள்

ஆண்டவர் மோசேயைத் தன்னிடம் வருமாறு அழைத்தார். மேகத்தால் சூழ்ந்திருந்த அம்மலையின் உச்சியை நோக்கிச் சென்ற மோசே தொடர்ந்து நாற்பது நாட்கள் அங்கேயே இருந்தார். மலையேறிச் செல்வதற்கு முன் மக்கள் தலைவர்களிடம், தாம் திரும்பி வரும்வரை அவர்கள் அமைதியாக இருக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார். ஆரோனையும் கூரையும் மக்களுடன் இருக்குமாறு கேட்டுக்கொண்டார். தான் திரும்பி வரும்வரை அதே மலையடிவாரத்தில் மக்களனைவரையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மலையேறிச் சென்ற மோசே பல நாட்கள் திரும்பி வராததனைக் கண்ட மக்கள் பீதி அடைந்தனர். தங்களைக் "கானான் தேசத்துக்கு அழைத்துச் செல்லப்போவதாகப் பொய் கூறி, 'நட்டாற்றில் கைவிட்டதை'ப் போல் இடையில் விட்டு விட்டு எங்கோ சென்று விட்டாரே!" என்று தூற்றத் தொடங்கினர். எப்பொழுதும் குறைகூறிக் கொண்டிருக்கும் அதிருப்தியாளர் கூட்டத்தின் குரல் ஒங்கி ஒலித்தது.

"மோசே மோசம் செய்துவிட்டார்!" என்று கூக்குரலெழுப்பிய அதிருப்தியாளர்கள் ஆரோனையும் கூரையும் சூழ்ந்து கொண்டனர். எகிப்திலிருந்து மக்களை அழைத்து வந்த

## மீறப்பட்ட கட்டளை





நாளிலிருந்து அன்றுவரை அவர்களை வழி நடத்திய கர்த்தரின் கருணைமிகு செயல்களையெல்லாம் மறந்து விட்டனர். ஆழமான செங்கடலைப் பிரித்து, தரைமீது நடப்பதுபோல் நடத்திச் சென்ற இறைவனின் மகிமையைப் பற்றி இவர்கள் சிறிதாவது எண்ணிப் பார்க்கவில்லை. அவர்களுக்காக ஆண்டவர் வரைந்தளித்த கட்டளைகளையும் உதாசீனம் செய்தனர்.

## பொன்கன்றுக் குட்டி

ஆரோனும் கூரும் மக்கள் கூட்டத்தின் ஆவேச அட்டகாசங்களைக் கண்டு அச்சமுற்றனர். உடனடியாகத் தாங்கள் வணங்குவதற்கு ஏற்ற சொரூபம் ஒன்றினை உருவாக்கித் தருமாறு ஆரோனிடம் கோரினர். அவர்களுடைய நச்சரிப்பினைத் தாங்க முடியாத ஆரோனும் அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்க வேண்டியவரானார். பெண்களின் பொன் அணிகலன்களைக் கொண்டு வருமாறு கோரினார். ஏராளமான நகைகள் வந்து சேர்ந்தன. அவற்றை உருக்கி ஒரு கன்றுக்குட்டியினை வார்த்தெடுத்தனர்.

எகிப்தில் கன்றுக்குட்டியின் விக்கிரகம் கடவுளின் சின்னமாக வைத்து வணங்கப்படுவதை இஸ்ரயேலர்களும் அவதானித்திருந்தனர். ஆகவே தங்களுடைய வணக்கத்துக்கும் பொன்னால் கன்றுக்குட்டியை உருவாக்கிக் கொண்டார்கள். ஒரு பீடம் அமைத்து பொன்னாலான அக்கன்றுக் குட்டியை அதன் மேல் வைத்தனர். ஆடுமாடுகளை எரிபலியாக்கி, மதுபானங்களைப் பருகிப், போதை ஏறியவர்களாக ஆடிப்பாடி விழாக் கொண்டாடினார்கள்.

மலைமீது ஆண்டவருடைய சன்னிதானத்தில் இருந்த மோசேயிடம், மலையடிவாரத்தில் இஸ்ரயேல் மக்கள் ஆடும் கூத்துக்களை கர்த்தர் கூறினார். மக்களின் கட்டுப்பாடற்ற- கேவலமான நடவடிக்கைகள் இறைவனைக் கோபங்கொள்ள வைத்தன. தன்னுடைய கட்டளைகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்கப் போவதாக மோசேயிடம் கூறினார்.

"மக்கள் அறியாமல் செய்யும் பிழைகளைப் பொறுத்து மன்னித்தருள வேண்டும்!" என்று மோசே இறைவனை, இரந்து வேண்டினார். மோசேயின் கோரிக்கையினால் சாந்தமடைந்த இறைவன், மோசேயை உடனடியாக மக்களிடம் போய்ச் சேருமாறு அனுப்பி வைத்தார். இறைவனுடைய அனுக்கிரகத்தினால் அருளப்பட்ட உடன்படிக்கைப் பலகைகளை எடுத்துக் கொண்டு மோசே மலையிலிருந்து கீழிறங்கி வந்தார்.

மலையடிவாரத்தில் மோசே கண்ட காட்சி அவரையே மனமுடைய வைத்துவிட்டது. ஆண்களும் பெண்களும் மது போதை தலைக்கேறி, தங்களை மறந்து ஆடிப்பாடி ஆரவாரித்துக் கொண்டிருந்தனர்.

மலையிலிருந்து மோசே இறங்கி வருவதை ஒரு சிலர் கண்டுகொண்டனர். அதுவரை குடிபோதையிலிருந்தபோதும், இனிமேல் வரமாட்டார் என்று கருதப்பட்ட அம்மனிதர் மீண்டும் அவர்களிடம் வருவதைக்கண்டு ஆனந்த பரவசமடைந்தனர். ஒடோடிச் சென்று வரவேற்றனர். மோசேயின் முகம் முன்னைவிட அதிக பிரகாசமாக- புதுப் பொலிவுடன் திகழ்ந்தது.

ஆரோனும் கூரும் ஒடோடிச் சென்று மோசேயின் பாதங்களில் வீழ்ந்தனர். மாபெரும் பாபச் செயலுக்குத் தாங்களும் உடந்தையாக இருந்துவிட்டமையினால் குற்ற உணர்வு அவர்களையும் பிடித்தாட்டியது.

தெய்வீகக் களையுடன் மோசேயின் முகம் தென்பட்ட போதிலும், அவருடைய உள்ளத்தில் எரிமலை கொப்பளிக்கிறது என்பதனை அனைவரும் கண்டு கொண்டனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை (19) விடை:** 40 ஆண்டுகள்.

**பரிசு பெறுவோர்:**

1. **எம். சரஸ்வதி,** கோணப்பிட்டிய, மேரிகோல்ட், கந்தப்பளை.
2. **எம். மேரி மக்டலீன்,** 143, உடையார் வீதி, கல்முனை-02.
3. **எம்.எஸ்.எம். சிரான்,** 165, புல்கொகத்தென்னை, அக்குறணை, கண்டி.
4. **எஃப்.எம். ஃபஸ்ரின்,** 18, சேர்க்குலர் வீதி, கேல்வத்தை, பாணந்துறை.
5. **ஏ. கிருபாகரன்,** ஆக்கரதன்னை, யூரி குருப், பசறை.

**திருமறை 21 வினா:-** மோசே ஆண்டவரின் சன்னிதியில் எவ்வளவு காலம் இருந்தார்?

ஆகஸ்ட் 15க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 21—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# நேர்த்திக் கடன் போராட்டம்



பாரதப் பிரமர் வாஜ்பேயி அவர்கள் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று வார்த்தைகளாவது பேசவேண்டும் என்று நேர்த்திக்கடன். இந்தப் புரட்சிகர முன்னணியான போராட்டத்தில் செந்தோழர்களும் கொள்கை உறுதியுடன் கலந்து கொள்ள உள்ளனர்.

நேர்த்திக்கடன் விபரம் பின்வருமாறு:

பாரதப் பிரதமர் மூன்று வார்த்தைகள் பேச எம் பெருமான் தூண்டினால் முதற் கட்டமாக நூறு தேங்காய்கள் சந்நிதியில் உடைக்கப்படும்.

மூன்று வார்த்தைகளுக்கு மேல் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் தலா பத்துத் தேங்காய்கள் வீதம் உடைக்கப்படும்!

நேர்த்திக் கடன் போராட்டத்திற்காக இப் போதே செந்தோழர்கள் வீடுவீடாக தேங்காய் சேகரிக்க உள்ளனர்.

எவ்வித அச்சமும் இன்றி அவர்களை உங்கள் வீட்டு முன்றலுக்கு வரவிடவும்! தேங்காய்களைத் தவிர வேறு எதையும் கேட்க மாட்டார்கள்!

தேங்காய் உள்ளோர் தேங்காய் கொடுப்பீர்! தேங்காய் இல்லாதோர் தேங்காய்கள் பற்றி தகவல் கொடுப்பீர்! அதுவும் இல்லாதோர் புலியெனவே கருதப்படுவீர்!

**முக்கிய குறிப்பு:** நேர்த்திக்கடன் போராட்டத்திற்காக நீங்கள் வாங்கும் தேங்காய்களுக்கு மட்டும், இயக்கம் அறவிடும் தேங்காய் வரியில் பாதிகுறைக்கப்படும்.

# அன்பர்களே! ஆதரவாளர்களே!!

## வருக! வருக!! வருக!!!

## மாபெரும் யாகம்



வீரமிக்க தமிழ்க் கட்சியினரான நாம் நடத்தும் வேண்டுதல் யாகம். பக்தியுள்ளோர் திரண்டு வருக! பக்தியல்லாதோர் எண்ணிக்கை காட்ட திரண்டு வருக!

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தும் மனப்பக்குவம், மனமாற்றம், நற்சிந்தனை, நன்நோக்கு என்பவற்றை ஆட்சியில் இருப்போருக்கு வழங்குமாறு ஆண்டவனைக் கோரி மாபெரும் யாகம்!

இந்த யாகத்தில் கலந்து கொண்டு சிறப்பித்து தேர்தல் நடத்த உதவி, எமக்கு நற்பதவிகள் கிட்டினால் யாகத்தில் கலந்துகொண்டோரை மறவாமல் வசதிக்கு ஏற்ப கவனிப்போம் என்பதையும் இத்தால் அறியத் தருகிறோம்.

# அங்கப்பிரதட்சணம்



நேற்று முன்தினம் நடைபெற்ற ஷெல்லடிகளை கண்டித்துத் தமிழ்க் கட்சிகள் முக்கியமான ஆலயங்களில் அங்கப் பிரதட்சணம் செய்யவுள்ளன. இந்த அங்கப்பிரதட்சணத்தின் போது இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறும், அல்லாவிட்டால் தமது தலைவர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் அரசாங்கத்திடம் உருக்கமான வேண்டுகோள் ஒன்றையும் அக்கட்சிகள் விடுத்துள்ளன.

ஷெல் வீச்சுக்களில் இருந்து தப்பும் பொருட்டு மக்கள் அனைவரும் அங்கப்பிரதட்சணம் செய்ய வருமாறும், அவ்வாறு வராது இருப்போரின் வீடுகளை புலிவீடுகள் என்று தாமே இனம் காட்டி ஷெல்லடிக்க வைக்க நேரும் என்றும் புரட்சிகரத் தமிழ்க் கட்சிகள் சில அன்போடு மிரட்டிக் கேட்டுக்கொண்டுள்ளன.

# ஆலயக் கலாசாரம்



ஆயுதக் கலாசாரம் ஒழிந்து, ஆலயக் கலாசாரம் வந்துவிட்டது. முருகன் கையிலுள்ள வேலும் ஒரு ஆயுதம் என்பதால் அதனைக்கூட அகற்றுமாறு கேட்குமளவுக்கு மக்கள் தெளிவடைந்து விட்டனர். இவ்வாறு தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் பால்மா விலை உயராதிருக்க தாய்மார்கள் பால்காவடி எடுக்குமாறும் அந்தப் பிரமுகர் புரட்சிகர ஆலோசனை ஒன்றை உதிர்த்துள்ளார்.

# தமிழ்க் கட்சிகளின் சாதனை

## மந்திரவாதிகள் வருகை

தமிழ்க் கட்சிகள் ஒன்று பட்டு அயராது பாடுபட்டு மந்திரவாதிகள் அணி ஒன்றை இலங்கைக்கு அழைத்துள்ளனர்.

இவர்களை வடக்கு-கிழக்குக்கு அழைத்துச் சென்று மக்களின் துன்பங்களை போக்கவுள்ளனர்.



ஷெல்கள், குண்டுகள் போன்றவை கெட்ட ஆவிகளின் தூண்டுதலின் காரணமாகவே கொட்டிக் கொண்டிருக்கின்றன. அந்த ஆவிகளை அடக்கி சாந்தி பெறச் செய்யவே மந்திரவாதிகளை அழைத்துள்ளதாக புரட்சிகர அறிக்கை ஒன்றை தமிழ்க் கட்சிகள் கூட்டாக வெளியிட்டுள்ளன.

மந்திரவாதிகளின் காலில் விழுந்து தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஆசி பெற்றதுடன், சில தலைவர்கள் பகிரங்கமாகவே தங்கள் உடைகளை களைந்து, மந்திரிக்கப்பட்ட காவிகளை அணிந்து கொண்டனர்.

# மாபெரும் வேப்பிலையாட்டம்

நிவாரண வெட்டைக் கண்டித்து ஆண்களும், பெண்களும் கலந்து கொள்ளும் வேப்பிலையாட்டம் இடம் பெறும்.

இந்த ஆட்டத்தில் தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு கண் மண் தெரியாமல் கலைவந்து ஆட உள்ளனர்.



"மந்திரவாதித் தோழர்களிடம் தாயத்துக்களை வாங்கி கட்டிக் கொண்டு, ஒவ்வொரு தமிழனும் தாயத்து கட்டிய தமிழனாக மாறுவது மூலமே நாகரிகமுள்ள மனிதனாக, பகுத்தறிவு பெற்ற மனிதனாக போற்றப்படலாம்" என்று தமிழ்க்கட்சியினர் பகன்றனர்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


## அபூர்வரகம்



←இங்கு எங்காவது இதைப் போல நீங்கள் கண்டதுண்டா?

ஆடுபோன்ற தோற்றமுடைய இப்பிராணி ஒரு வகை மலைமான் இனத்தைச் சேர்ந்தது. சாமொயில் என்பது இதன் பெயர்.

ஐரோப்பா மற்றும் மேற்காசிய நாடுகளில் காணப்படும் இம்மலைமான் 75 சென்டிமீட்டர் உயரம்வரை வளரக்கூடியது. பழுப்பு நிறமான ரோமத்தை உடைய இப்பிராணி காலத்துக்கேற்றபடி நிறத்தை மாற்றிக் கொள்ளும்.

பொதுவாக கூச்ச சுபாவம் கொண்ட மலைமான் மிக வேகமாக ஓடக்கூடியது. அபாரமான மோப்ப சக்தியும் கொண்டது.

மலைமீது வாழ்ந்தாலும் பனிகாலத்தில் குளிரின் தாக்கத்தைத் தணிப்பதற்காக கீழே இறங்கி காடுகளுக்குள் மரஞ்செடி கொடிகளுக்குள் புகுந்து கொள்ளும்.

இவற்றின் கொம்புகள் ஆரம்பத்தில் 20 சென்டிமீட்டர்வரை உயரமாக-நீளமாக வளரும். பின்னர் பின்புறமாக வளைந்து கொள்ளும். சில சந்தர்ப்பங்களில் 32.4 சென்டிமீட்டர் வரை கொம்பு வளர்ந்து சுருண்டு விடும்.

## இரண்டு



↓ தென் அமெரிக்காவின் மிகப் பரந்த பிரதேசத்தைத் தன்னகத்தே கொண்ட நாடு பிரேஸில். கிழக்கே அத்திலாந்திக் பெருங்கடல். ஏனைய பிரதேசத்தை ஒட்டி 10 நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. தலைநகரான பிரசிலியாவில் பிரதிநிதிகள் சபையும் மேலவையான செனட் சபையும் கூடும் கட்டடங்கள் இந்த வளாகத்தில்தான் உள்ளன. நவீன கட்டடக்கலை அம்சங்களைக் கொண்ட கட்டடங்கள் இந்நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இக்கட்டடத்தின் இடது புறமுள்ள மேலே வளைந்து கவிழ்க்கப்பட்ட கோப்பை வடிவிலுள்ள அமைப்பு செனட் சபை கூடும் இடம். கோப்பை போன்ற வடிவமைப்பைக்கொண்ட வலது புற அமைப்பில் பிரதிநிதிகள் சபை கூடுகிறது. நடுவிலுள்ள இரட்டைப் பிறவிகள் போன்ற உயர் கட்டடங்களில் அரசாங்க அலுவலகங்கள் பலவும் இயங்குகின்றன. கட்டட அமைப்பு அசத்தலாக இருக்கிறதல்லவா!




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## முதல் மரியாதை



→ பிரிட்டன் கடற்படை உலகில் சிறந்த கடற்படையாக விளங்கிவருகிறது. இதற்கு அடித்தளம் போட்டவர் எட்டாவது ஹென்றி மன்னர். 1500ம் ஆண்டில் பிரிட்டனை ஆண்டவர் ஹென்றி.

எட்டாவது ஹென்றி கடற்படையை பலப்படுத்த போர்க்கப்பல்கள் பலவற்றை உருவாக்க உத்தரவிட்டார். அப்போது உருவான அதிசிறந்த போர்க்கப்பல் ஒன்றின் ஓவியம்தான் இது. இக்கப்பலின் பெயர்: மேரி ரோஸ்.

1554ம் ஆண்டு இக் கப்பல் கடலில் மூழ்கடிக்கப்பட்டது. கடல் சுழியோடி ஆய்வாளர்களால் 1982ல் ஆழ்கடலில் இருந்து இக் கப்பல் மீட்கப்பட்டது. இதன்மூலம் பிரிட்டன் கடற்படை பற்றிய புதிய தகவல்கள் கிடைத்தன.

எட்டாவது ஹென்றி மன்னன் பற்றிமேலும் ஒரு தகவல்: தன் முதல் மனைவியை விவாகரத்து செய்து இரண்டாவது திருமணம் செய்தான். அதற்கு பாப்பாண்டவர் அனுமதி கொடுக்க மறுத்ததால், கத்தோலிக்க திருச்சபையின் தொடர்பை அறுத்தெறிந்துவிட்டு, இங்கிலாந்து திருச்சபையை நிறுவி அதன் தலைவராகவும் தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொண்டான்.

பிற நாடுகளை கைப்பற்றும் பேராசையுடன் படைபலத்தை பெருக்கியவனும் ஹென்றி மன்னன் தான்.

## இரசிப்பு



↖ ஆண்களை விட பெண்கள்தான் அழகுடையவர்கள் என்றுதான் நாம் கருதுகிறோம். ஆனால் படத்தில் காணப்படும் 'கொக்ஸ் ஒவ் த ரொக்ஸ்' என்ற மலைக் குருவிகளில் பெண் குருவிகளைவிட ஆண் குருவிகள்தான் அழகானவை.

படத்தில் பழுப்பு நிறமாகக் காணப்படுவதுதான் பெண் குருவி. கறுப்புச் சிறகுகளும் வாலும் கொண்ட சிவப்பு, நீல இறகுகளை உடலில் கொண்ட அழகான குருவிதான் ஆண்குருவி. தென் அமெரிக்காவில் கொலம்பியா முதல் பொலிவியா வரை பரந்து கிடக்கும் அண்டிஸ் மலைத் தொடரிலும் வட பிரேஸில் குயினாஸ் மலைத் தொடரிலும்தான் இப்பறவைகள் காணப்படுகின்றன. இனப்பெருக்கத்துக்கான காலத்தில் பெரும்பாலும் 'சுயம்வரம்'தான் நடக்கும். ஆண் குருவிகள் பல ஒன்றாகச் சேர்ந்து ஒரு வெட்ட வெளியில் தங்களுக்கே உரிய குரலில் 'பாடி' ஆடத் தொடங்குகின்றன. இப் 'பாடல்' ஒலி கேட்டுக் கவரப்படும் பெண் குருவிகள் தங்களுக்கேற்ற ஒரு சோடியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

## செம்பூமி

→ சோசலிச நாடான வியட்நாமின் தேசியக் கொடி இது. அடுத்து இருப்பது அந்த நாட்டின் இலச்சினை.

ஹோசிமின் தலைமையில் வியட்நாம் மக்கள் தம் விடுதலைக்காக வீரம் செறிந்த போராட்டம் நடத்தினர்.

வடக்கு வியட்நாம் முதலில் விடுவிக்கப்பட்டது. வியட்நாமை வடக்கு, தெற்கு என்று இரு கூறாகப் பிரித்து வைத்திருக்க ஆக்கிரமிப்பாளர்கள் திட்டமிட்டனர்.

வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் தலைமையில் கிளர்ந்தெழுந்த மக்களும், போராளிகளும் தம் தாயகத்தை கூறுபோடும் சூழ்ச்சியை முறியடித்தனர்.



இறுதியாக அமெரிக்கப் படைகளுக்கு மரண அடி கொடுத்து வெற்றி பெற்றது வியட்நாம் போராட்டம்.

சோவியத் யூனியன் பலதுண்டுகளாக சிதைந்த போதும், வியட்நாம், சீனா, கியூபா போன்ற பல நாடுகள் சோசலிசப் பாதையில் தொடர்ந்து செல்கின்றன.



## வெற்றிமேல் வெற்றி

↑ உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முதன் முறையாக சாம்பியன் பட்டத்தை ஃபிரான்ஸ் அணி வெற்றி கொண்டது.

இதுவரை இறுதியாட்டத்திற்கு 5 முறை வந்த பிரேஸில் 4 முறை வெற்றிக் கிண்ணத்துடன் சென்றது. ஆனால் இம்முறை ஃபிரான்ஸ் அவர்களது வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்து விட்டது. இறுதிப் போட்டியின்போது பாரிஸில் மதுபான ஹொட்டல்கள் நிரம்பி வழிந்தன. ஸிடேன் 2 கோல்கள் போட்டதும் கோப்பை தமக்குத்தான் என்று ஹொட்டல் முதலாளிகள் இலவசமாக மதுவை விநியோகித்தார்கள். குடிமக்கள் பாடு அன்று கொண்டாட்டம்தான் போங்கள்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

சாருஷன்



நீர்வேலியைச் சேர்ந்த **செல்வன் சாருஷன் சிற்சபேசன்** தனது 1வது பிறந்த நாளை **09.08.1998** அன்று நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி, ஹொலண்ட் மாமாமார், மற்றும் சுவிஸில் இருக்கும் மாமா, அத்தை, இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை, அம்மப்பா, அம்மம்மா மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் சகல கலைகளும் கற்று நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.